
# தமிழரசு

ஆகஸ்ட் 1-15, 1997 ரூ.3





# இந்த இதழில்...


- சமத்துவபுரம் ... 2
- சுதந்திரப் போராட்ட வீரர்கள் வாழ்விலே! ... 3
- டெல்லி செல்லும் விடுதலைப் போராட்ட வீரர்கள் ... 6
- உப்புச் சத்தியாக்கிரகம் ... 7
- 9-வது ஐந்தாண்டு திட்ட ஒதுக்கீடு ரூ.25,000 கோடி ... 9
- அண்ணா வழியில் செயல்படும் கலைஞர் -மேதகு ஆளுநர் ... 10
- தமிழகச் சட்டமன்றம் பெருமைக்குரியதாகும் -முதல்வர் கலைஞர் ... 11
- மீண்டும் சட்டமன்ற மேலவை - பேரவைத் தலைவர் பெருமிதம் ... 14
- பொன்விழாக் காணும் தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலைத்துறை ... 15
- வேலூர் புரட்சி ... 17
- எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு ... 18
- இந்திய சுதந்திரப் போர் முக்கியச் சம்பவங்கள் ... 19
- குறுந்தொகை காட்டும் கால்நடைகள் -முனைவர் இரா. பிரபாகரன் ... 22
- பேசும் கலப்பை (சிறுகதை) - பொன்குன்னம் வர்க்கி ... 24
- நோய் தீர்க்கும் கடுக்காய் - டாக்டர் பி. பாலசுப்ரமணியம் ... 33
- எங்கள் ஊர் பிரச்சினை ... 34
- தோல் நோய்கள் - டாக்டர் எம். வசந்தா ... 41
- கால்நடைப் பராமரிப்பு - ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள் ... 46
- ஆசிரியர் மடல் ... 48



**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2028

ஆகஸ்ட் 1-15, 1997

மலர் : 28 இதழ் : 3


விலை ரூ:3


பத்மவாசன்

# சமத்துவ புரம்

வரும் சுதந்திரத் திருநாள் பொன் விழா ஆண்டினையொட்டி நடைபெறும் கொண்டாட்டங்களுடன், தமிழகத்தைப் பொறுத்தவரை மலைவாழ் மக்கள், ஆதிதிராவிட மக்கள் மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு நிரந்தரப் பயன் தரத்தக்க நிலையான கீழ்க்கண்ட திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

சுதந்திரத் திருநாள் பொன் விழாவினையொட்டி, ஆதிதிராவிட மக்கள் உட்பட அனைத்துச் சமூகத்தினரும் நல்லிணக்கத்தோடு சமத்துவமாக ஒரே குடியிருப்பில் ஒற்றுமையாக வாழும் வகையில் தலா 100 வீடுகளைக் கொண்ட 50 குடியிருப்புகள் தமிழகம் முழுவதும் 'சமத்துவபுரம்' என்ற பெயரால் உருவாக்கப்படும் என்று முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.




இச் சமத்துவபுரம் – தேவையான குடிநீர், மின்வசதி, நிரந்தரச் சாலை வசதி, பொதுச் சுகாதாரம், கல்வி போன்ற அனைத்து அடிப்படை வசதிகளும் கொண்ட முன்னோடி கிராமமாக அரசால் உருவாக்கித் தரப்படும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 சென்ட் மனை அரசால் இலவசமாகத் தரப்படும். சமத்துவபுரத்தில் குடியிருக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு முப்பதாயிரம் ரூபாய் அரசு மானியத்துடன் வீடு கட்டுவதற்குக் குறைந்த வட்டியில் கடன் வசதியும் செய்து தரப்படும்.

சுதந்திரத் திருநாள் பொன் விழா ஆண்டையொட்டி தேசிய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தமிழகத்திலுள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் நகர்ப்புறப் பேரூராட்சிகள் ஒவ்வொன்றிலும் உள்ள குறைந்தபட்சம் ஒரு குடிசைப் பகுதி தேர்வு செய்யப்பட்டு, மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிரந்தர சாலை வசதி, மின் விளக்குகள், குடிநீர் வசதி, தண்ணீர் வசதியுடன் கூடிய பொதுக் கழிப்பிட வசதி, வடிகால் வசதி ஆகிய அடிப்படை வசதிகள் உருவாக்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்குச் சுமார் ரூ.35 கோடி செலவிடப்படும்.

மேலும், தமிழகத்திலுள்ள மலைப்பகுதிகளில் உள்ள அனைத்துப் பழங்குடி மக்கள் வாழும் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை உருவாக்குவதற்கென 'மூன்றாண்டுச் சிறப்புத் திட்டம்' ஒன்று செயல்படுத்தப்படவுள்ளது. இச்சிறப்புத் திட்டம் குடிநீர் வசதி, சாலை மற்றும் மின் வசதி ஆகியவற்றுடன் பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல் போன்ற வளர்ச்சித் திட்டங்களும் படிப்படியாக மூன்றாண்டு காலத்திற்குள் நிறைவேற்றப்படுவதன் மூலம், தமிழகத்திலுள்ள பழங்குடி மக்கள் குடியிருப்புகளும் அனைத்து அடிப்படை வசதிகளைப் பெற்ற குடியிருப்புகளாக உருவாக்கப்படும். ★

# சுதந்திரப் போராட்ட வீரர்கள் வாழ்விலே....

## பாரதியார்

அடிமைப்பட்டுக்கிடந்த நம் இந்திய நாட்டில் விடுதலைப் போர் மூண்ட காலத்தில் - தமது ஏற்றமிகு தமிழ்க் கவிதைகளால் எழுச்சி மூட்டிய சிறப்பினர் மகாகவி பாரதியார். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள



எட்டயபுரத்தில், சின்னச்சாமி ஐயருக்கும் - இலக்குமி அம்மையாருக்கும் பிறந்த இவர், சாதிமத பேதங்கள் ஒழியவும் - பெண்கள் முன்னேற்றம் பற்றியும் பாடிய முதல் கவிஞர்.

பண்டிதர்களுக்கு மட்டுமே புரியும் படியிருந்த தமிழ்க்கவிதையைப் பாமர மக்களுக்கும் புரியும்படி எழுதியவர். ஆங்கில ஏகாதிபத்தியம் அச்சுறுத்தவே - புதுச்சேரிக்குச் சென்று தலைமறைவு வாழ்க்கை நடத்தியவர் இவர். அவ்வாறு அங்கே பன்னிரண்டாண்டு காலம் வாழ்ந்தபோது-பாரதியாரின் நிழல் போலிருந்த புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், அவரைப்பற்றி எழுதியிருப்பது இது :

பாரதியாருக்குச் சாதி சமயப் பற்றே கிடையாது, ஆண்கள் பெண்கள் அனைவரும் சரிசமமாக இருக்க வேண்டும் என்பதுதான் அவர் கருத்து.

அவர் தம்மைப் பிராமணர், பிராமண சமூகத்தில் பிறந்தவர் என்றெல்லாம் எண்ணுவது கிடையாது. அவர் கோயில் குளங்களுக்குப் போவது கிடையாது. ஆண்டவனை எப்படி வணங்குவது என்றே அவருக்குத் தெரியாது. விபூதி-நாமங்களைப் போட்டுக்கொண்டு, பஜனை மடங்களில் பாடியும் ஆடியும் அவலமாகக் காலம் போக்கிக் கொண்டிருந்த என்னை இன்றுள்ள நிலைக்குக் கொண்டுவந்தவர் பாரதியார்தான்.

பாரதியார், அன்றுள்ள நிலையில் தேச விடுதலையை முதன்மையாகக் கருதினார். இன்று அவர் இருந்திருப்பாரேயானால் என்னைப் போல முழுக்கமுழுக்கச் சமூக சீர்திருத்தம் குறித்த கவிதைகளையே இயற்றியிருப்பார்.

- இவ்வாறாகப் புரட்சிக்கவிஞரால் போற்றப்படும் பாரதியார், சென்னை மாநகருக்கு வந்து சிறந்த பத்திரிகையாளராகவும் திகழ்ந்தவர். இந்தியா விடுதலை பெறுமுன்பே-"ஆனந்த சுதந்திரம், அடைந்துவிட்டோம் என்று ஆடுவோமே பள்ளுப்பாடுவோமே" எனப் பாடி, 40 வயதாகும் முன்பே இறந்துபோனார்.

(பிறப்பு : 12.11.1882 - மறைவு : 11.9.1921)

## நேதாஜி

வங்காளத்திலே இருக்கின்ற "இருபத்து நான்கு பர்கானாக்கள்" என்ற கிராமத்தில் உள்ள "கடக்" என்னுமிடத்தில் ஜானகிநாதர்-பிரபாவதி தம்பதியாருக்கு மகனாகப் பிறந்தவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்.

இளமைக்காலத்தில் சுவாமி விவேகானந்தரிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த இவர், சிறந்த கல்விமானாகவும் இருந்தார்; கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் வரை போய்ப் படித்தார். ஐ.சி.எஸ்.பட்டம் பெற்றார்.

1921-ல் இந்தியாவில் சூடுபிடித்த சுதந்திரப் போராட்டம் நேதாஜியையும் பிறந்த நாட்டுக்கு ஈர்த்தது. ஆரம்ப காலத்தில் காந்தியாரின் தலைமையின்கீழ் காங்கிரசில் சேர்ந்து பணிபுரிந்தார்; தேசபந்து சி.ஆர்.தாஸ், இவருடைய அரசியல் ஆசான் ஆவார். அவர் 1923ல் காந்தியாரோடு மாறுபட்டு சுயராஜ்யக்கட்சி ஆரம்பித்த போது, இவரும் அவரோடு விலகினார். 1940ல் திரிபுரா காங்கிரஸ் தலைவர் தேர்தலில் காந்தியார் ஆதரவோடு பட்டாபி சீதாராமையா நின்றபோது, அரும்பாடுபட்டு அவரைத் தோல்வி பெறச்செய்து தாமே பெரும் வெற்றி பெற்று காந்தியரையே வியக்க வைத்தார்.



இந்திய சுதந்திரம் அமைதியான முறையில் கிடைக்காது; நாமும் துப்பாக்கி ஏந்தினாலே பெறமுடியும் என்கிற முடிவுக்கு வந்த நேதாஜியால்-இளைஞர் கட்சி, பார்வர்டு பிளாக் போன்றவை அமைக்கப்பட்டன; இந்திய தேசிய இராணுவம் முழுபலம் பெற்றது. 'டில்லி சலோ' என்பது அவர்கள் போர் முழக்கம் ஆயிற்று. இவற்றால் பல முறை சிறைக்கொடுமைக்கு ஆளானர். பிறகு வெள்ளையராட்சியின் கெடுபிடிகளிலிருந்து தப்பி பெர்லினுக்குப் போய்ச்சேர்ந்தார். ஜெர்மனியில் இட்லரைச் சந்தித்து இந்திய விடுதலைக்கு ஆதரவு கோரினார்.

தமிழகத்தில் - முத்துராமலிங்கத்தேவர், அவர் கொள்கை வழி நடப்போரில் குறிப்பிடத்தக்கவராயிருந்தார்.

1945-ல் இந்திய விடுதலை பற்றிப் பேச்சுவார்த்தை நடத்த விமானத்தில் ஜப்பான் நாட்டுக்குப் புறப்பட்டார் நேதாஜி. 'இறுதி மூச்சுவரை இந்திய விடுதலைக்காகவே போராடுவேன்' என்று பாடுபட்ட அவர், விமான விபத்தில் மாண்டு போனார் என்று, அன்றைய தினமே ஜப்பானிய செய்தி நிறுவனமும், டோக்கியோ வானொலியும் அறிவித்தன.

(பிறப்பு : 23.1.1897 - மறைவு : 18.8.1945)

## செண்பகராமன்

இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில் செண்பகராம பிள்ளையின் பெயர் மிகவும் பிரசித்தம். காரணம், அவர் தன்னை இந்திய தேசிய இராணுவத்தில் இணைத்துக்கொண்டு போர்க்குணத்துடன் செயல்பட்டார் என்பது மாத்திரம் அல்ல – 'ஜெய்ஹிந்த்' என்கிற தாரக மந்திரத்தின் தந்தையே அவர்தான். இதனாலேயே அவர் 'ஜெய்ஹிந்த்' செண்பகராமன் எனப்பட்டார்.

சின்னச்சாமி - நாகம்மா தம்பதியரின் மகனாகத் திருவனந்தபுரத்தை அடுத்துள்ள புத்தன்சந்தை என்ற ஊரில் பிறந்தவர் இவர். இலங்கை, இத்தாலி, சுவிட்சர்லாந்து என்று சென்று பொறியியலில் 'டாக்டர்' பட்டம் பெற்றவர்.



அந்த நாடுகளிலெல்லாம் இந்திய மக்களுக்கு ஆங்கிலேயரால் இழைக்கப்படும் அநீதி பற்றி எடுத்துக் கூறி அவர்கள் ஆதரவைப் பெற்றார்.

அவர் ஜெர்மனியில்தான் உயிர்நீத்தார்.

இறக்குமுன், அவர் தன் மனைவியிடம் கண்ணீர் விட்டபடி கூறியது என்ன தெரியுமா?

"இந்தியாவின் விடுதலையைப் பார்க்காமலே இறக்கப் போகிறேனே!... மாண்ட பிறகு என் சாம்பலை எடுத்துவை. இந்தியா சுதந்திரம் பெற்றபின், அதைக் கொண்டுபோய் என் தாயார் சாம்பல் சங்கமமான கரமனை ஆற்றில் கொஞ்சத்தைக் கரைத்து விடு; மீதத்தை நாஞ்சில் நாட்டு வயல்வெளிகளில் தூவு! எனக்குப் பிறகு, நீயும் சுதந்திரப் போரில் ஈடுபடு!"

- இப்படிச் சொன்ன செண்பகராமன்தான் 1914 முதல் உலகப் போரின்போது 'எம்டன்' என்ற நீர்மூழ்கிக் கப்பலில் சென்னைக்கு வந்து, வெள்ளையர் பிடியிலிருந்த கோட்டையைத் தாக்கி முதலில் அவர்களைக் கதிகலங்கச் செய்த பெருமையாளர்.

(பிறப்பு : 15.9.1891 - மறைவு: 26.5.1934)

★★★

## பகத்சிங்

"வெள்ளையரின் வெறித்தனத்தைக் கண்ட பிறகும் நம்போன்ற இளைஞர்கள் வெகுண்டெழ வேண்டாமா?" என்ற தீப்பறக்கும் வினாவை எழுப்பி, முதன்முதல் இளைஞர்களை எழுச்சிமயமாக எழச்செய்த வீரன் பகத்சிங்.

பஞ்சாபைச் சேர்ந்த லாயல்பூர் மாவட்டத்தில் உள்ள பாங்கா என்கிற சிற்றூரில், கிஷன்சிங் - வித்யாவதி தேவியின் மகனாகப் பிறந்தவர் பகத்சிங். 1919ல் ஜெனரல் டயர் என்கிற வெள்ளையனால் ஏற்பட்ட 'பஞ்சாப் படுகொலை' என்கிற 'ஜாலியன் வாலாபாக்' நிகழ்ச்சி, விடுதலைப் போராட்டத்தில் முழுமையாக ஈடுபட்டிருந்த குடும்பத்தில் பிறந்த இவருடைய இதயத்தில் மாபெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.



கல்லூரியில் படித்த வேளையில் கிடைத்த சுகதேவ், யஸ்பால் போன்றோரின் நட்பும் விடுதலை வேட்கையை அதிகரித்தது; அதன் பலனாக 'இந்திய சமதர்மக் குடியரசு இராணுவம்' என்ற புரட்சிகரமான அமைப்பு உருவாயிற்று!

லாலா லஜபதிராய், மார்பில் அடிபட்டு மாண்டுபோகக் காரணமாக இருந்த வெள்ளை அதிகாரி சாண்டர்ஸ், பகத்சிங்காலும் அவரது மூன்று முக்கிய நண்பர்களாலும் சுட்டு வீழ்த்தப்பட்டான். டில்லி பாராளுமன்றத்தில் வெடிகுண்டு வீசிடத் தத் என்ற நண்பரோடு தானே முன் நின்றார், பகத்சிங். 8.4.1929ல், நாடாளுமன்றத்தில் உட்புகுந்து அந்த வீரச் செயலைச் செய்தும் காட்டினார்; அங்கிருந்து தப்பமுடியாத நிலையில் அவர்கள் கைதாயினர்.

வழக்கு நடைபெற்றது. முடிவில், பகத்சிங்கும் அவர் நண்பர்கள் இருவரும் வெள்ளைக் கொடியவர்களால் தூக்கிலிடப்பட்டார்கள். கழுத்தில் கயிறு ஏறுமுன் வீரன் பகத்சிங் செய்த முழக்கம் என்ன தெரியுமா?

"விரைவில் இந்தியாவில் மாபெரும் புரட்சி வெடிக்கும்; வெள்ளை ஏகாதிபத்தியம் வேரோடு சரியும்!"

(பிறப்பு: 28.9.1907 - இறப்பு : 23.2.1931)

★★★

## வாஞ்சிநாதன்

இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் வ.உ.சிதம்பரனார் சுப்பிரமணிய சிவா ஆகியோர் கை தமிழகத்தில் ஓங்கியிருந்த 1906ஆம் ஆண்டு வாக்கில் சரித்திரச் சிறப்படைந்தவர்களில் வாஞ்சிநாதனும் ஒருவர். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள செங்கோட்டையில், ரகுபதி ஐயர் - ருக்மணி அம்மாள் மகனாகப் பிறந்த இவர் மனைவி பெயர் பொன்னம்மாள்.

நீலகண்ட பிரம்மச்சாரி என்பவர் நடத்திவந்த 'பாரதமாதா சங்கம்' என்கிற ரசிய அமைப்பின் உறுப்பினர், வாஞ்சிநாதன். நெல்லை மாவட்டத்திற்கு வரும் ஐரோப்பிய அதிகாரிகளை அச்சுறுத்துவது, விரட்டியடிப்பது, சுதந்திரக் கனல் மூட்டுவது போன்றவைகளே அச் சங்கத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது.



புதுவையில் வ.வே.சு. ஐயரிடம் துப்பாக்கி சுடும் பயிற்சி பெற்றார் வாஞ்சிநாதன்; சிலகாலம் வனத்துறையில் பணியாற்றியதும் உண்டு.

1908ஆம் ஆண்டில், திருநெல்வேலியில் வ.உ.சி., சுப்பிரமணிய சிவா இருவரும் அரசுக்கு எதிராக ஆற்றிய எழுச்சிமிகு சுதந்திர உரை அரச நிந்தனையாக இருந்தது என்று வழக்குத் தொடரப்பட்டு, ஃபின்கே என்னும் நீதிபதியால் இருவருக்கும் கடும் தண்டனை அளிக்கப்பட்டது. அவர்கள் பேசிய பொதுக் கூட்டத்தைக் கலைக்க ஆஷ் துரை என்ற சப் கலெக்டர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் சிலர் பலியானதும், மேலும் பலர் கைதானதும் வாஞ்சிநாதனைக் கொதித்தெழச் செய்தது.

இந் நிலையில் நெல்லை கலெக்டராகப் பதவி உயர்வு பெற்ற ஆஷ் துரை, தன் மனைவியோடு கொடைக்கானலுக்குப் பயணமானார். மணியாச்சி ரயில் நிலையத்தில், புகை வண்டிக்குள்ளேயே புகுந்து அவரை மூன்றுமுறை தம் கைத்துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார் இருபது வயது இளைஞனான வாஞ்சிநாதன்.

அதுமட்டுமல்ல; ஆங்கில அரசிடம் மாட்டக்கூடாது எனக் கருதிய அவர், அங்கேயே தனக்குத் தானே சுட்டுக்கொண்டு வீர மரணமடைந்தார்!

1957ல், செங்கோட்டை கரையாளர் பூங்காவில் வாஞ்சிக்கு நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டது. அவர் மனைவிக்கு இறக்கும் வரை கலைஞர் அரசு ஒய்வூதியம் வழங்கியது; மணியாச்சி ரயில் நிலையத்திற்கு 'வாஞ்சி நகர்' எனப் பெயரிடுமாறும் சிபாரிசு செய்தது.

(பிறப்பு : 8.10.1907 மறைவு : 23.3.1931)

★★★

### முத்துராமலிங்க சேதுபதி

இந்தியாவெங்கும் பரவலாக விடுதலைக் கனல் மூண்டெழுவதற்கு முன்பே அந்நாளில் ஆங்கியலேயரிடம் இந்திய நாட்டை அடகு வைத்த ஆர்க்காடு நவாபுக்கு மட்டுமல்ல; ஆங்கிலேய ஆட்சியாளருக்கும் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தவர், மன்னர் 'ரிபெல்' விஜய ரகுநாத முத்துராமலிங்க சேதுபதி.

பாளையக்காரர்களுக்கெல்லாம் தலைவராகத் திகழ்ந்த இவர் 'வாணிகம் முன்னே வஞ்சகம் பின்னே' என்று இந்திய மண்ணில் கால் வைத்த ஆங்கில அடக்குமுறை ஏகாதிபத்தியத்திற்குக் கப்பம் கட்ட மறுத்தார்; அவர்கள் இட்ட கட்டளைகளைத் துச்சமென வெறுத்தார். இவரே இராமநாதபுரம் மறவர் சீமையின் கடைசி மன்னரும் ஆவார்.

2,353 சதுரமைல் பரப்பளவு கொண்டதாக 2,168 ஊர்கள் உடையதாக இருந்த சேதுநாட்டின் மன்னரான இவர், பிற்காலத்தில் 'பகைவனுக்கும் அருள்வாய் நன்னெஞ்சே' என்பதற்கிணங்க, தமிழகத்திலேயே முதன்முதலாக மேலைநாட்டுக் கல்வி முறைக்கும் வழிவிட்டார்; 1785ல் சுவார்ட்ஸ் பள்ளியினைத் திறக்க அனுமதித்தார்.

ஏழைகள், ஊனமுற்றோர், தமிழ்ப்புலவர்கள், வடமொழி வித்தகர்களுக்கெல்லாம் எல்லா வகையான மானிய நிலங்களும் அக்காலத்திலேயே வழங்கி, ஆங்கிலேயரின் மொழி ஆதிக்கத்தைப் பலவீனப்படச் செய்தவர் இந்த முத்துராமலிங்க சேதுபதி. இவரது நிர்வாகம், ஆங்கிலேயரும் அதிசயிப்பதாக இருந்தது.



1795ல், ஆங்கிலேயர் பெரும்படையும், பீரங்கியும் கொண்டு கோட்டையைத் தகர்த்து இவரை இரவோடு இரவாகக் கைது செய்தனர்; இதனால் வெகுண்டெழுந்த மக்கள், மலையப்பன் என்பாரின் தலைமையில் நடத்திய உரிமைப் போர் வரலாற்றுச் சிறப்புடையது.

இந்திய விடுதலைக்குப் பாடுபட்டமையால் திருச்சிராப்பள்ளி, சென்னை சிறைச்சாலைகளில் 24 ஆண்டுகள் இவரை ஆங்கில அரசு அடைத்து வைத்துக் கொடுமைப்படுத்தியது.

இராமநாதபுரம் சீமைப் பகுதியில் 'இந்தியப் புலி' என ஆங்கிலேயரே சொல்லி நடுங்குமளவுக்கு அரசாண்டு வந்த இவர், தமது சிறைவாசத்தின்போதே மாண்டுபோனார் என்பது குறிப்பிடத்தக்கது!

(தோற்றம் : 1760 - மறைவு : 23.1.1809)



மாண்புமிகு தமிழ்நாடு அரசு
வணிகவரித்துறை அமைச்சர்,
**திரு. வே. தங்கபாண்டியன்**
அவர்கள், அரசுப் பணி காரணமாக
31.7.1997 அன்று ராஜபாளையம்
சென்றிருந்தபோது, அகால
மரணமடைந்த செய்தி
நமக்கு ஆற்றொணாத் துயரத்தை
அளித்தது; அவரை இழந்து தவிக்கும்
குடும்பத்தார்க்குத் 'தமிழரசு' ஆழ்ந்த
இரங்கலைத் தெரிவித்துக்
கொள்கிறது.

- ஆசிரியர்

# புதுடெல்லிக்குச் செல்லும் சுதந்திரப் போராட்டத் தியாகிகள்

நம் இந்திய நாடு விடுதலை அடைந்து 50 ஆண்டுகள் ஆகின்றன. அதனையொட்டி நாடு முழுவதும் சுதந்திரத் திருநாள் பொன்விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

சுதந்திரத் திருநாள் பொன்விழாவையொட்டி 14.8.97 அன்று இரவு 9 மணி முதல் 11 மணி வரை, புதுடெல்லியில் தேசிய அணிவகுப்பு நிகழ்ச்சி ஒன்று நடைபெறவுள்ளது. இந்தியா விடுதலை அடைந்து 50 ஆண்டுகள் ஆகின்றன. அதைக் குறிக்கும் வகையில், புதுடெல்லியில் நடைபெறவிருக்கும் சுதந்திரத் திருநாள் பொன்விழா தேசிய அணிவகுப்பில் கலந்துகொள்ளத் தமிழகத்தின் சார்பில் விடுதலைப் போராட்ட வீரர்கள் 50 பேரை அனுப்பிட முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.

இந்த 50 பேர்களின் விவரம் பின்வருமாறு:

**சென்னை மாவட்டம்.**

1. திரு. ஆர்.எஸ். நாதன்
2. திருமதி. எஸ். மகாலட்சுமி
3. திரு. எஸ்.ஆர்.கே. வெங்கடாசலம்

**கடலூர் மாவட்டம்**

4. திரு. ஆர். மாரியப்பன்
5. திரு. டி.எஸ். தேவநாதன்
6. திரு. டி. ஏகாம்பரம்

**தஞ்சாவூர் மாவட்டம்**

7. திரு. ஆர். சுந்தரம்
8. திரு. கே.எஸ். ஆறுமுகம்
9. திரு. எம். வெங்கட்ரமணி

**விழுப்புரம் மாவட்டம்**

10. திரு. ஆர். காளிராசன்
11. திரு. எஸ்.ஆர்.டி.நடராஜன்
12. திருமதி. வெ.காளியம்மாள்

**திண்டுக்கல் மாவட்டம்**

13. திரு. க. சோமசுந்தரம் பிள்ளை
14. திரு. வி. ஆனந்தபத்மன்
15. திரு. எம்.எஸ். வெள்ளைச்சாமி

**கோயம்புத்தூர் மாவட்டம்**

16. திரு. என். ராமசாமி
17. திரு. எம். மருதாச்சலம்
18. திரு. ஆர். பெட்டையன்

**இராமநாதபுரம் மாவட்டம்**

19. திரு. எஸ். ஜெய்னுலாப்தீன்
20. திரு. பி.எம்.ராமு
21. திரு. டி. சுப்பையா
22. திரு. எம். ஏ. மகாலிங்கம்

**தருமபுரி மாவட்டம்**

23. திரு. எஸ்.கே. காளியப்பன்
24. திரு. டி.கே. பொன்னுசாமி
25. திரு. எம். கௌரா

**ஈரோடு மாவட்டம்**

26. திரு. என்.ஆர் ராமகிருஷ்ணன்
27. திரு. கே. மாரப்பன்
28. திரு. சி. அங்கமுத்து

**கன்னியாகுமரி மாவட்டம்**

29. திரு. மா. வைத்தியலிங்கம்

**நீலகிரி மாவட்டம்**

30. திரு. கே.பி. ராஜு
31. திரு. டேனியல் சந்தியநாதன்

**திருவண்ணாமலை மாவட்டம்**

32. திரு. எல். முனுசாமி
33. திரு. பீம நயினார்
34. திரு. டி.எம். குப்புசாமி

**திருச்சிராப்பள்ளி மாவட்டம்**

35. திரு. வி. ரெங்கசாமி
36. திரு. டி. அழகப்பன்
37. திரு. எம். முகமது கனி

**மதுரை மாவட்டம்**

38. திரு. ஏ. சுந்தரம்
39. திருமதி. ப. ஒச்சம்மாள்
40. திரு. கே.எம். காந்தி
41. திரு. இராசு
42. திரு. எம்.எஸ். வடிவேல் பிள்ளை

**சேலம் மாவட்டம்**

43. திரு. வடிவேல் முதலியார்

**திருநெல்வேலி மாவட்டம்**

44. திரு. ஏ. ராஜகோபால்
45. திரு. பெ. ராமையா
46. திரு. எஸ். சுவாமிநாதன்
47. திரு. ஆர்.எஸ். முப்பிடாதி

**விருதுநகர் மாவட்டம்**

48. திரு. கே.ஆர். கதிர்வேல் ராஜா
49. திரு. என்.எம். சுப்பராஜா
50. திரு. என்.எஸ். தியாகராஜன்

**வேலூர் மாவட்டம்**

51. திரு. கே.எஸ். கந்தசாமி
52. திரு. டி.எஸ். ராஜு சர்மா

**கரூர் மாவட்டம்**

53. திரு. பா. மருதமுத்து
54. திரு. எஸ். ஆர். வெங்கடாசலம் பிள்ளை

- இவர்கள் அனைவருக்கும் புதுடெல்லி சென்று வரும் செலவு முழுவதையும் தமிழக அரசே ஏற்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# உப்புச் சத்தியாக்கிரகம்

உப்புச் சத்தியாக்கிரகத்தை 1930 மார்ச் 12ஆம் நாள் மகாத்மா காந்தி, ஆமதாபாத்திலுள்ள சபர்மதி ஆசிரமத்தில் தொடங்கினார். உப்புச் சத்தியாக்கிரகத் தண்டி யாத்திரை என்று வரலாற்றில் அது பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுவிட்டது.

காந்தியடிகள், தேசியக் காங்கிரஸ் தொண்டர்கள் 78 பேர் பின் தொடர, இந்தத் தண்டி யாத்திரையை மேற்கொண்டார்.

தியாகத்திற்குத் தயாராகுமாறு மக்களைத் தட்டியெழுப்பவே இந்தப் போராட்டம். இதில் பெண்கள் பங்கு கொண்டால், போராட்டம் கட்டுக்கடங்காமல் போகலாம் என்றும், அந்நிய ஆட்சியாளரின் அடக்குமுறைகளுக்குப் பெண்கள் ஆளாகக்கூடும் என்றும் மகாத்மா காந்தி கருதியதால், போராட்டத்தில் பெண்கள் பங்குகொள்ள அவர் சம்மதிக்கவில்லை.



சபர்மதி ஆசிரமத்திலிருந்து தண்டி சென்று சேரும்வரை அவர் தமது வழிப்பயணம் நெடுகிலும் குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான பாமர மக்களிடையே பேசினார். பக்தியோடும் பரவசத்தோடும் அவரது பேச்சைக் கேட்ட மக்கள் வீராவேசம் கொண்டனர். விடுதலைக்காக என்ன விலைகொடுக்கவும் தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டனர்.

காந்தியடிகள் 24 நாட்கள் நடந்து 241 மைல் தூரத்தைக் கடந்து 1930 ஏப்ரல் 5ஆம் நாள் தண்டியை அடைந்தார். அடுத்தநாள் காலை சுமார் 2,000 பேருடன் கடலில் குளித்து, தண்டியில் பூத்துச் சிரித்த இயற்கை உப்பைத் தமது புனிதக் கரத்தால் அள்ளி, உப்புச் சட்டத்தை உடைத்தெறிந்தார் உத்தமர் காந்திஜி.

உப்புச் சட்டத்தை மீறியதற்காகக் காந்தியடிகளை அரசு கைது செய்யவில்லை. ஆனால், நாடெங்கும் காங்கிரஸ் தொண்டர்கள் பல்லாயிரக்கணக்கில் கைது செய்யப்பட்டனர்; காட்டுமிராண்டித்தனமாக அடித்துத் துன்புறுத்தப்பட்டனர்.

1930 ஜனவரி 26ல் லாகூர் காங்கிரஸ் பூரண சுயராஜ்யத்தைப் பிரகடனம் செய்தது. நாடெங்கும் மக்கள் விழாக்கள் எடுத்து, தியாக வேள்விக்குத் தங்களது தயார் நிலையைப் புலப்படுத்தினர். 1930 பிப்ரவரியில் கூடிய அனைத்திந்தியக் காங்கிரஸ் செயற்குழு, சட்டமறுப்பு இயக்கத்திற்குத் தலைமையேற்று நடத்த, காந்திஜிக்கு அங்கீகாரம் அளித்தது. அதனையொட்டி அடிகள் தேர்ந்தெடுத்த அறப்போராட்ட உத்திதான் உப்புப் போர்.

பஞ்சுப் பொதியில் விழுந்த நெருப்புப்போல், இந்தப் போராட்ட உணர்வு நாடு முழுதும் பற்றிக்கொண்டது. உப்புச் சட்டத்தை மீற ஒவ்வொருவரும் கொதித்தெழுந்தனர். நகரமாயினும் கிராமமாயினும் எங்கணும் மக்களின் எழுச்சியைக் காணமுடிந்தது.

தமிழகத்தில் இந்த இயக்கத்திற்குத் தலைமையேற்றவர் மூதறிஞர் இராஜாஜி. திருச்சியிலிருந்து வேதாரண்யத்திற்குப் பாதயாத்திரை செய்யத் திட்டமிட்டார்; இதற்காக அவர் சுமார் 100 தொண்டர்களைத் திரட்டினார்.

இந்தத் தொண்டர்களுக்குச் சில தகுதிகளை விதித்தார் இராஜாஜி. போராட்டத் துடிப்பு மட்டும் இருந்தால் போதாது; உடல்நலனைப் பேணுகிறவர்களாகவும், நல்ல பழக்க வழக்கங்களைக் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். திருவாளர்கள் கே. சந்தானம், ஏ.என். சிவராமன், ஜி. இராமச்சந்திரன் போன்ற சிறந்த தேசபக்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தமிழ்நாட்டில் இராஜாஜி சுற்றுப் பயணம் செய்து, உப்புப் போராட்டத்திற்குத் தக்கதொரு கடற்கரைப் பகுதியைத் தேர்ந்தெடுத்தார். வேதாரண்ய உப்பளப்பகுதி அவருக்குப் பொருத்தமானதாகப் பட்டது. அங்கு முகாமிட்டுப் போராட்டத்தை நடத்த முடிவுசெய்து, அந்த முகாமின் நிர்வாகத்தைக் கவனிக்கும் பொறுப்பை, சர்தார் வேதரத்தினத்திடம் ஒப்படைத்தார்.

வடக்கே மகாத்மாவின் தண்டி யாத்திரை என்றால், தெற்கே இராஜாஜியின் வேதாரண்ய யாத்திரை என்று சொல்லும் அளவிற்கு அது முக்கியத்துவம் பெற்றுவிட்டது. 52 வயதான இராஜாஜி, உடல்நலம் குன்றியிருந்தபோதிலும், உறுதி தளரா மனப்பான்மையைக் காட்டி, களைப்பின் சுவடுகூடத் தெரியாமல் போராட்டத்தில் முன் நின்றார். குழுவினர் மூன்று வாரம் நடந்து வேதாரண்யத்தை அடைந்தனர்.

வழியெங்கும் இக்குழுவினருக்கு மக்கள் வரவேற்பளித்து வாழ்த்திப் போற்றினர். வேதாரண்யக் கடற்கரையில் இராஜாஜி உப்பை அள்ளியதும் கைது செய்யப்பட்டார். தொண்டர்கள் காவலர்களால் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கப்பட்டனர். ஒரு தொண்டர் தன் கையில் இருந்த உப்பைக் கீழே கொட்ட மறுத்தார். அவரது கைவிரல்கள் கூழாகிப் போகும்வரை தடியடி நடத்தப்பட்டது.

***உப்புக்கும் வரிவிதித்த உன்மத்தர் ஆட்சியிலிருந்து, சுதந்திரத்திற்கு வித்திட்ட புரட்சிப் பயணம் அது!***

- மு. முத்துகாளத்தி

# விடுதலை நாள்!

பாரத விடுதலை நாளின் நினைவு
பற்றிடும் போதினிலே - ஒரு
வீரமும் எழுச்சியும் வெற்றியும் மகிழ்ச்சியும்
வீறுது நெஞ்சினிலே! - நாம்

தீரர் பரம்பரை வழியினர் என்னும்
தெம்பு பிறக்கிறது! - புகழ்
ஆரம் அணிந்தவர்க் கஞ்சலி செலுத்திட
ஆர்வம் வருகிறது!

புயலென இடியெனக் கடலென முழங்கிய
பூட்கைகொள் மறவர்களை - இங்கு
அயலவன் கண்டு பயந்து நடுங்கி
அகன்றனன் விரைவினிலே! - அவன்

இயற்றிய பாதகக் கொடுமைகள் கொலைகள்
எண்ணி முடியாதே! - நம்
உயிரை உரமாய்ப் போட்டு நாம் கண்ட
விடுதலை நாளிதுவே!

அன்னை பாரத தேவியின் குழந்தைகள்
அத்தனைப் போர்களுக்கும் - இங்கே
இன்னல் படுத்திய தளையறு பட்டது
இணைந்தது விடுதலையே! - இந்தப்

பொன்னல நாளினை முன்னவர் பெருமையைப்
போற்றி மகிழ்ந்திடவே - நெஞ்சில்
தன்னல மற்றுப் பிறர்நலம் பேணிச்
சூழுக சூழுகவே!

கொடுமுடி கவிஞர் க.அ. பிரகாசம்



# 9வது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடு ரூ.25,000 கோடி

## முதலமைச்சர் கலைஞருடன் விவாதித்தபிறகு முடிவு

புதுடெல்லியில் தமிழக முதலமைச்சர் கலைஞர் தமிழ்நாட்டின் ஒன்பதாவது ஐந்தாண்டுத்திட்ட ஒதுக்கீடு குறித்து முடிவு செய்வதற்காக மத்தியத் திட்டக்குழு துணைத்தலைவர் திரு.மதுதண்டவதே அவர்களுடன் 24.7.1997 அன்று விவாதித்தார்.

முதலில், மத்தியத் திட்டக்குழுவின் துணைத்தலைவர் எட்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் தமிழ்நாட்டின் சிறந்த செயல்பாட்டினைப் பாராட்டினார். எட்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் தமிழ்நாட்டிற்கான ஒதுக்கீடு 10,200 கோடி ரூபாய் என்ற போதிலும், அதன் சாதனை 10,407 கோடி ரூபாயாகும்.

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடாக ரூ.25,000 கோடி என்று முடிவெடுக்கப்பட்டது. இத்திட்டத்தில் அடிப்படைக் கட்டமைப்பு, வேளாண்மை ஊரக வளர்ச்சி மற்றும் சமூக நலப்பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். அடிப்படை கட்டமைப்பு மற்றும் தொழில் வளர்ச்சிக்கு ஒதுக்கீடு ரூபாய் 9,772 கோடியும், சமூக நலப்பணிகளுக்கு ரூபாய் 8,151 கோடியும், வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கு ஒதுக்கீடு ரூபாய் 6,906 கோடியாக இருக்கும். ஒன்பதாவது ஐந்தாண்டுத்திட்டத்தின் ஒதுக்கீடு, எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் ஒதுக்கீட்டை ஒப்பிடும்போது 245.10 சதவிகிதமாகும்.

ஒன்பதாவது திட்டத்தின் நபர்வாரி ஒதுக்கீடு ரூ.4,237 ஆக இருக்கும். இது எட்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் 1,825 ரூபாயாகத்தான் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. ஒன்பதாவது திட்ட நபர்வாரி ஒதுக்கீடு எட்டாவது ஐந்தாண்டு திட்ட நபர்வாரி ஒதுக்கீட்டுடன் ஒப்பிடும் போது 232.18 சதவிகிதமாகும்.

குறைந்த பட்ச அடிப்படை வசதிகளுக்கான ஒதுக்கீடு ரூபாய் 4,250 கோடியாகும். இது மொத்த ஒதுக்கீட்டில் 17 சதவிகிதம் சத்துணவு (33.42%), குடிநீர் (25.63%), ஆரம்பக்கல்வி (17.27%), கிராம சுகாதாரம் (8.3%), ஊரகச் சாலைகள் (7.41%) ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. ஒன்பதாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் வெளிநாட்டில் உதவி பெறும் திட்டங்களில் 6,000 கோடி ரூபாய் முதலீடு செய்யப்படும்.

தமிழ்நாட்டின் ஒன்பதாவது ஐந்தாண்டுத்திட்டத்தின் ஒதுக்கீடான 25,000 கோடி ரூபாயில் மத்திய அரசின் உதவியாக 9,987.91 கோடி (39.95%) வழங்கிட மத்திய திட்டக்குழு ஒப்புக்கொண்டது. மீதமுள்ள 15,012.09 கோடி (60.05%) மாநிலத்தின் சொந்த நிதி ஆதாரங்களிலிருந்து திரட்டப்படும்.

காட்கில்-முகர்ஜி கோட்பாட்டினை மாற்றி அமைக்கவும், மத்திய அரசு நடைமுறைப்படுத்தும் திட்டங்களை அவற்றின் நிதியாதாரங்களோடு மாநிலங்களுக்கு மாற்றவும் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திட்டக்குழுவிடம் வலியுறுத்தினார். இதுபற்றி தேசிய வளர்ச்சிக்குழுவின் கூட்டத்தில் முடிவெடுக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டது.

ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தில் மாநில நிகர உற்பத்தி வளர்ச்சி விகிதம் சராசரியாக ஆண்டுதோறும் 7.73 சதவிகிதம் உயரும். விவசாயம், கால்நடை மற்றும் அவற்றைச்சார்ந்த துறைகளில் ஆண்டு வளர்ச்சி விகிதம் 4.47 சதவிகிதமாகவும், தொழில் மற்றும் அதனைச்சார்ந்த துறையில் ஆண்டு வளர்ச்சி விகிதம் 7.48 சதவிகிதமாகவும்; சேவைத்துறைகளில் ஆண்டு வளர்ச்சி விகிதம் 9.31 சதவிகிதமாகவும் இருக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

திட்டக்குழுவின் சார்பில், திட்டத்துறையின் ராஜாங்க அமைச்சர் திருமதி ரத்னவாலா சவூர், திட்டக்குழுவின் உறுப்பினர்கள் அர்ஜுன் சென்குப்தா, திரு.ஜி.திம்மையா, திரு.சுக்லா, திரு.பிமல் ஜலான் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர். தமிழக அரசின் சார்பில் முதலமைச்சர் கலைஞர் அவர்களுடன், தலைமைச் செயலாளர் கே.ஏ.நம்பியார், நிதித்துறைச் செயலாளர் பி.வி.ராஜராஜன், திட்டச்செயலாளர் கே.ஏ.மாத்யூ, மற்றும் மாநிலத் திட்டக்குழு உறுப்பினர் செயலாளர் ஆர்.சி. பாண்டா ஆகியோர் கலந்து கொண்டனர்.



# அண்ணா வழியில் செயல்படும் கலைஞர்!

## மேதகு ஆளுநர் புகழாரம்

தமிழகச் சட்டமன்றப் பவள விழா மற்றும் தமிழகச் சட்டப்பேரவை வைர விழாவில் தலைமையுரையாற்றிய மேதகு ஆளுநர் செல்வி பாத்திமா பீவி அவர்கள் குறிப்பிட்டதாவது:

**ஜனநாயக சமூகப் புரட்சி**

"நம்முடைய அரசியலமைப்புச் சட்டம் ஜனநாயக, சமூகப் புரட்சிக்கு ஒரு அட்டவணையாகும். சட்டமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் பல முனைகளில் இன்னமும் தேவையாக உள்ள சமூகப் புரட்சியை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும். நாம் இன்னமும் நீண்ட தூரம் செல்ல வேண்டும்.

இந்த வகையில் மாநில சட்டமன்றம் நம்பிக்கை அளிக்கிறது. ஏனெனில் அவை பல்வேறு வகையான சிந்தனைகளையும், ஆலோசனை களையும் வழங்குவதன் மூலம் தேசிய அரசியலுக்குப் பெரும் பங்காற்றுகிறது.



மாநில அரசியல் புதிய பாணிகளையும் முறைகளையும் கையாளுவதற்கான பகுதிகளைக் கொண்டுள்ளது. மக்களிடமிருந்து கிடைக்கும் வரவேற்பும் உடனடியாகக் கிடைக்கிறது. மாநில அளவில் தோன்றி, சரித்திரமாக மாறிய நிகழ்ச்சிகளை நாம் அறிந்திருக்கிறோம். தங்களுடைய திறமைகளால் மட்டுமல்ல; மக்கள் நலனில் கொண்டுள்ள கவலையாலும் மற்றவர்களைவிட சிறந்து விளங்கி மாநிலங்களை ஆண்ட உயர்ந்த மனிதர்கள் உள்ளனர்.

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சரான பேரறிஞர் அண்ணா, தன்னுடைய ஆங்கில மற்றும் தமிழ் ஆற்றலாலும், பெரும் பிரச்சினைகளின் மீது கொண்ட ஆழமான பார்வையாலும், தனது எதிரிகளையும் வென்ற வாதத் திறமையாலும் உலகம் முழுவதுமே ஒரு பெரும் புயலை ஏற்படுத்தினார். அவர் தமிழக மக்களுக்கு ஒரு மாபெரும் செல்வத்தை விட்டுச் சென்றார். நம்முடைய முதலமைச்சர் அண்ணா எங்கே விட்டுச் சென்றாரோ அதிலிருந்து தொடர்ந்து செயல்பட்டு வருகிறார். அவர் தன்னுடைய திறமையாலும், விவேகமான அணுகுமுறையாலும், மதிநுட்பமான முடிவுகளாலும் அதனை அசாதாரண முறையில் செயல்படுத்தி வருகிறார். சமீபத்தில் மாவட்டங்கள் மற்றும் போக்குவரத்துக் கழகங்களின் பெயர்களை மாற்றி எடுத்த முடிவு நான் கூறுவதை மெய்ப்பிக்கும்.

இந்த சட்டமன்றத்திற்குத் தங்கள் சேவையைக் கடந்த காலத்தில் வழங்கிய முன்னாள் உறுப்பினர்களுக்கு என் மரியாதையையும் சட்டமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் மக்களின் பிரதிநிதிகளாகக் குறிப்பிடத்தக்க சேவை புரிந்துவரும் இன்றைய உறுப்பினர்களுக்கு என் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



# தமிழகச் சட்டமன்றம் பெருமைக்குரியதாகும்!

## மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உரை

சட்டமன்றப்பவள விழா - சட்டப்பேரவை வைரவிழா சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் 14.7.97 அன்று சிறப்புற நடைபெற்றது.

விழாவில் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

இந்த விழா நிகழ்ச்சியை அற்புதமாக ஏற்பாடு செய்து, எழிலும் எழுச்சியும் குலுங்க இந்த நல்ல மாலை நேரத்தில் பெரியவர்களையெல்லாம் அழைத்து அவர்களுடைய அறிவுரைகளை வழங்கிடச் செய்த - அதற்கெனப் பல நாட்கள் அரும் பாடுபட்டு உழைத்த பேரவையினுடைய தலைவர் பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் அவர்களுக்கும், பேரவையைச் சார்ந்த அலுவலாளர்களுக்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



தேர்தல்கள் மூலம் சட்டம் இயற்றும் அமைப்பு ஒன்று தொடங்கப்பட்டு, அந்த அமைப்பினுடைய 75வது ஆண்டு நிறைந்த பவள விழாவையும், தமிழகச் சட்டமன்றத்தின் பேரவை தொடங்கப் பட்டு, அந்தப் பேரவையின் அறுபதாண்டுகள் நிறைந்த வைர விழாவையும் இங்கு நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

### விழா கொண்டாடும் போதெல்லாம்

1972ஆம் ஆண்டு, இந்திய சுதந்திர வெள்ளி விழாவைக் கொண்டாடும்போதும் நான்தான் இங்கே முதலமைச்சராக இருந்தேன். 1989இல் சட்டமன்றப் பேரவையினுடைய பொன்விழாவைக் கொண்டாடிய போதும், நான்தான் முதலமைச்சராக இருந்தேன். இப்போது இந்திய நாட்டின் சுதந்திரப் பொன் விழாவைக் கொண்டாடும்போதும், நான்தான் முதலமைச்சராக இருக்கிறேன். இன்று - இந்தப் பவள விழா, வைர விழாவைக் கொண்டாடும்போதும் நான் முதலமைச்சராக இருக்கிறேன். எனவே நீங்கள் எனக்கு ஒரு பட்டம் கொடுக்கலாம் - "விழா முதலமைச்சர்" என்று.

இப்படி நானே முதல்வராக இருந்து இந்த விழாக்கள் நடப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். பெருமிதம் கொள்கிறேன்.

தேர்தல்கள் மூலம் சட்டம் இயற்றும் அமைப்பு தொடங்கப்பட்டு 75 ஆண்டு ஆயிற்று என்று சொன்னேன். அதனுடைய பவள விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். இதை நீங்கள் அறிவீர்கள்.

### தேர்தல் தமிழர்களுக்குப் புதியதல்ல

தேர்தல் என்பது தமிழர்களுக்குப் புதிய ஒன்று அல்ல. பிற்காலச் சோழர்கள் காலத்திலேயே தமிழ் நிலத்திலே கிராமப் பகுதிகளில் தேர்தல் முறை இருந்தது என்பதற்கு உத்தரமேரூர் கல்வெட்டு சாட்சியாக இருக்கிறது. யார் யார் தேர்தலுக்கு நிற்க வேண்டுமென்று சுட்டிக்காட்டுவதைவிட, விதிமுறை இருப்பதைவிட, யார் யார் ஊராட்சித் தேர்தலுக்கு நிற்கக் கூடாது; மக்கள் பிரதிநிதிகளாக வரக்கூடாது என்று நிதி முறைகள் வகுக்கப்பட்டிருந்தன. நல்லவர்கள் அல்லாதவர்கள், ஊழல் புரிகிறவர்கள், பிறர் பணத்திற்கு ஆசைப்படுகிறவர்கள், காம வேட்டைக்காரர்கள், குடிகாரர்கள் - இவர்கள் எல்லாம் தேர்தலிலே ஈடுபடக்கூடாது; ஈடுபடுவது தடுக்கப்படும் என்ற விதிமுறையின் அடிப்படையில் பிற்காலச் சோழர்களுடைய காலத்திலே கிராமப்பகுதிகளிலே தேர்தல்கள் நடைபெற்றன என்பதற்குச் சான்று பகன்று இன்றைக்கும் திகழ்ந்து கொண்டிருக்கின்ற கல்வெட்டுத்தான் உத்தரமேரூர் கல்வெட்டு.

நான் பிற்காலச் சோழர்களைக் குறிப்பிட்டேன். சங்ககாலத்திலேயே பழந்தமிழ்க் காலத்திலேயே இந்த வாக்குச் சீட்டு முறை இருந்திருக்கிறது. வாக்குச்சீட்டு என்றால் அச்சடித்த காகிதமல்ல. ஓலைகளிலே இந்த ஊருக்குத் தலைவராக யார் வரவேண்டும் என்று ஊர் மக்கள் விரும்புகிறார்களோ - அந்தப் பெயரை ஓலைகளிலே எழுதி அங்கே நடு மண்டபம் ஒன்றிலே வைக்கப் பட்டிருக்கின்ற குடத்திலே அந்த ஓலைகளை இடுவது ஒரு தேர்தல் முறை.

இதை ஒரு சங்ககாலப் புலவன் – ஒரு போர்க் களக்காட்சியைப் பாடுகின்ற நேரத்திலே நமக்குச் சுட்டிக்காட்டுகிறான். போர்க்களத்திலே பலர் மாண்டு கிடக்கிறார்கள். அப்படி மாண்டு கிடக்கும்போது மாண்டு கிடக்கின்ற அந்தப் பிணங்களின் வயிற்றையும் நெஞ்சையும் தலையையும் கழுகுகளும், பருந்துகளும் குத்திக் கீறி உணவாக்கிக் கொண்டிருக்கின்றன. அதிலே ஒரு கழுகின் செயலைப் பார்க்கிறான் புலவன். ஒரு மாண்டு கிடக்கின்ற வீரனின் குடலை உருவி, அது உண்ணுகின்ற காட்சியை சங்ககாலப் புலவன் வர்ணிக்கிறான். எப்படி என்றால், குடவோலை முறையிலே குடத்திற்குள்ளே போடப்பட்டுள்ள ஓலைகளை வெளியே இழுப்பதைப் போல அந்த வீரனுடைய குடலை இந்தக் கழுகும் பருந்தும் வெளியே இழுக்கின்றன என்று குறிப்பிடுகிறான்.

அந்தப் பாடல் மூலமாகக் குடவோலை முறை பழந்தமிழர் காலத்திலே இருந்தது என்பதை நம்மால் அறிய முடிகிறது. இப்படி பன்னெடு நாட்களுக்கு முன்பு பழந்தமிழர் காலத்திலேயே இந்த மக்களாட்சி மாண்பினை உணர்ந்தவர்களாகத் தமிழ்நாட்டு மக்கள் இருந்திருக்

கின்றார்கள். நம்மின மக்கள் அதை உணர்ந்தவர்களாக விளங்கியிருக்கிறார்கள். அவ்வழியிலே வந்த - ஆங்காங்கு சில தடைகள், இடையூறுகள் இருந்தாலும்கூட அவற்றை யெல்லாம் கடந்து மக்களுடைய பிரதிநிதிகள் அமர்ந்து சட்டம் இயற்றுவது - சமுதாயத்தை முன்னேறச் செய்வது ஆகிய பணிகளை மேற்கொள் வதற்குத்தான் சட்ட மன்றங்கள், பாராளுமன்றங்கள் எல்லாம் இன்றைக்கு இருக்கின்றன.

### முதலமைச்சர்களாக இருந்த பெருமைக்குரியவர்கள்

அந்தச் சட்டமன்றத்திலே பல ஆண்டு காலம் பணியாற்றியவன் - 57ஆம் ஆண்டிலேயிருந்து பணியாற்றியவன் - பணியாற்றிக் கொண்டிருக்கிறவன் என்ற முறையில் இந்த இரு விழாக்களிலும் கலந்துகொள்வதில் நான் மிகுந்த பெருமை கொள்கிறேன்.

இந்தச் சட்டமன்றத்திலே எந்தெந்த முதலமைச்சர்கள் எல்லாம் இருந்திருக்கிறார்கள்? 'தாடி வைக்காத பெரியார்' என்று புகழப்பட்ட ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், முதல்வராகப் பொறுப்பேற்றிருந்திருக்கிறார்.

பேசமாட்டார், ஆனால் அரிய செயல்களைப் புரிவார் என்று புகழ்பெற்ற - பேச்சில் என்ன இருக்கிறது. செயலில் தான் எல்லாம் இருக்கிறது என்று செய்துகாட்டிய பெருந் தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்திருக்கிறார். நிர்வாகத்திலே இவருக்கு நிகர் யாருமில்லை என்று பெயரெடுத்த பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்திருக்கிறார்.

எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்று எதிர்க்கட்சிகளின் தாக்குதல்களை எல்லாம் சட்ட மன்றத்திலே தாங்கிக்கொண்டு Your Days are numbered என்று எதிர்க்கட்சித்தலைவர் ஒருவர் சொன்னபோதுகூட My steps are measured என்று சொன்ன பேரறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்திருக்கிறார்.

என்னுடைய இனிய நண்பர் - அருமை நண்பர் - மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்திருக்கிறார்.

### இந்த சட்டமன்றத்தில் பணியாற்றி பெரும் பதவிகளுக்குச் சென்றவர்கள்

இந்தச் சட்டமன்றத்திலே பணியாற்றியவர்கள் எல்லாம் பல பெரும் பதவிகளுக்கும் சென்றிருக்கிறார்கள். நம்முடைய சி. சுப்பிரமணியம் அவர்கள் மாநில அமைச்சராக இருந்தார். அவர் மாநில அமைச்சராக இருந்தபோது - 57ஆம் ஆண்டு நான் சட்டசபைக்குள் நுழைந்தவன். அப்போது அவர்கள் நிதியமைச்சர். நான் நுழைந்த இரண்டாம் ஆண்டு - 1958இல் நிதிநிலை அறிக்கையைப் படிக்கத் தொடங்கும்போது "நான் இன்றைக்குச் சதம் அடிக்கப் போகிறேன். செஞ்சுரி போடப் போகிறேன்" என்று சொன்னார்கள். நாங்கள் அகல விழிகளை விழித்து என்னவென்று பார்த்தோம். இந்தப் பட்ஜெட் நூறு கோடி ரூபாய் பட்ஜெட் என்று சொன்னார்கள்.

### பலன் காணமுடியாத சூழ்நிலை

57-58-ல் நூறு கோடி ரூபாய் பட்ஜெட் அவ்வளவு பெருமையாக இருந்தது. இன்றைக்குப் பதினைந்தாயிரம் கோடி ரூபாய்க்கு பட்ஜெட் போட்டாலும் அதனுடைய பலன்களை மக்கள் அனுபவிக்க முடியாத சூழ்நிலையிலே நாடு இருக்கிறது.

அன்று மாநில அமைச்சராக இருந்த சி.எஸ். அவர்கள் மத்தியிலே அமைச்சரானார்கள். மராட்டியத்தின் ஆளுநராகவும் ஆனார்கள். அதைப்போலவே இங்கே மாநில அமைச்சராக இருந்த ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் மத்தியிலே அமைச்சராகவும், குடியரசுத் துணைத் தலைவராகவும், குடியரசுத் தலைவராகவும் ஆனார்கள். அதைப் போலவே இங்கே சென்னை மாகாண முதல்வராக (பிரதமராக) இருந்த மூதறிஞர் ராஜாஜி அவர்கள் வங்காள மாநில ஆளுநராகவும் முதல் இந்திய கவர்னர் ஜெனரலாகவும் ஆனார்கள். இங்கே மாநில அமைச்சராக இருந்த வி.வி.கிரி அவர்கள் இந்தியாவின் குடியரசுத் தலைவராக ஆனார்கள். இங்கே மாநில அமைச்சராக இருந்த திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் கேரள மாநில ஆளுநராக ஆனார்கள். இங்கு அமைச்சராக இருந்த பிரமானந்த ரெட்டி அவர்கள் (ஒன்றாக இருந்தபோது- சென்னை மாகாணமாக இருந்தபோது) ஆந்திர முதலமைச்சராக ஆனார்கள். பின்னர் ஆளுநராகவும் ஆனார்கள். நீலம் சஞ்சீவரெட்டி அவர்கள் இங்கே அமைச்சராக இருந்தார்கள். பின்னர் ஆந்திர முதல்வராகவும் ஆனார்க்ள். பிறகு இந்தியாவின் குடியரசுத் தலைவராகவும் ஆனார்கள்.

### தமிழகச் சட்டமன்றப் பெருமை

இந்த அளவிற்குப் பல இந்திய குடியரசுத் தலைவர்களை உருவாக்கிய சட்டமன்றம் தமிழ்நாட்டைத் தவிர வேறெங்கும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை நான் தவறாகச் சொல்லியிருந்தால் திருத்திக்கொள்ளவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

தற்கால மக்களாட்சித் தத்துவத்திற்கும் மக்கள் சேவை உணர்விற்கும் அக்காலத்திலேயே சோழ மன்னர்கள் வித்திட்டார்கள் என்று கூறினேன். அந்த மக்கள் சேவை எப்படி இருக்க வேண்டும் என்பதை "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்று உத்தமர் காந்தி அடிகளும், அறிஞர் அண்ணா அவர்களும் சொல்லிச் செயல்பட்டதைப் போல "சேவை என்பது மற்றவர்கள் நன்மை அடைவதைப் பார்த்து மகிழ்ச்சியும் திருப்தியும் அடைவதற்காகத் தான் செய்யும் காரியம்" என்று தந்தை பெரியார் அவர்கள் சொல்லி செயல்பட்டதைப் போல, மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் மக்கள் நலனையே உயிர் மூச்சாகக் கொண்டு செயல்பட வேண்டும்.

ஒரு தேசத்தை ஒருவர் ஆட்சி புரிவதென்பது அந்தத் தேசத்து மக்களின் நன்மைக்காகவேயொழிய ஆட்சி புரிவோரின் நன்மைக்காக அல்ல என்பதை ஒவ்வொருவரும் மனதிலே கொள்ளவேண்டும். ஜனநாயகம் என்பது மக்களாட்சி எனும் அரசாங்க முறை "மக்களுக்காக - மக்களால் நடத்தப்படும் - மக்கள் அரசாங்கம்" என்று ஆபிரகாம் லிங்கன் குறிப்பிட்டிருப்பதை மறந்துவிட முடியாது. தற்காலத்தில் ஜனநாயக நாடுகள் யாவும் மக்களாட்சி முறை என அழைக்கப்படும் பிரதிநிதித்துவ அரசாங்க முறையை மேற்கொள்கின்றன.

மக்களின் சார்பில் அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் அரசாங்கத்தை அமைத்து ஆட்சி நடத்துகிறார்கள். தற்போது அரசிடமிருந்து மக்கள் அதிக அளவில் எதிர்பார்க்கிறார்கள். எனக்கும் புரிகிறது எல்லோருக்கும் புரிவதைப் போல!

சலவை செய்யப்பட்ட உடை

அவைகளை நிறைவு செய்ய வேண்டிய பொறுப்பு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் கையில்தான் இருக்கிறது. சட்டத்தைப் பயன்படுத்தி சமுதாயத்தை ஒழுங்குபடுத்துவது என்பது சலவை செய்யப்பட்ட உடைக்கு இஸ்திரி போடுவதைப் போல! ஏனென்றால் கொஞ்சம் கவனம் தவறினாலும் இஸ்திரி போடும்போது துணி கருகிவிடும். அதனால்தான் சட்டத்தைப் பயன்படுத்தி, சமுதாயத்தை ஒழுங்குபடுத்த வேண்டுமென்று எண்ணுகிற நேரத்தில் சர்வ ஜாக்கிரதையாகச் சட்டம் பயன்படுத்தப்பட வேண்டும்.

சட்டங்கள் என்பது குடிமக்களின் ஏற்புடைய விருப்பை அறிவிக்கும் முறையாகும். சட்டமன்றம் என்பது குடிமக்களின் முடிவை வெளிப்படுத்தும் நிறுவனமாக அமைகிறது. மக்களிடையே பொருளாதாரச் சமத்துவம் உருவாக்கப்பட, வகுக்கப்பட்ட திட்டங்கள் பலவும் தமிழகத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கு உறுதுணையாக விளங்குவதோடு, இந்திய நாட்டிற்கே முழுமைக்கும் வழிகாட்டத் தக்கதாக அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

ஒரு சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி எப்படி இருக்க வேண்டும் ஆளுங்கட்சி எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான இலக்கணங்களைப் பேரறிஞர்கள், பெரியவர்கள் பலரும் எடுத்துக் காட்டி அதைச் செயல் படுத்தியும் உணர்த்தியிருக்கிறார்கள்.

## அண்ணா சொன்ன கேரளத்து யானைக் கதை

எதிர்க் கட்சியைப் பற்றி ஒரு முறை அண்ணா அவர்கள் சட்டமன்றத்திலே பேசும்போது சொன்னார்கள் –

கேரளத்திலே ஒரு திருவிழா நடைபெறும். அந்தத் திருவிழாவிலே யானையின் துதிக்கையிலே ஒரு கம்பத்தைக் கொடுப்பார்கள். அந்த யானை அந்தக் கம்பத்தை - குறிப்பிடப்பட்ட குழியிலே கொண்டு போய் நடும். அது நட்ட பிறகுதான் திருவிழா தொடங்கும். இப்படி ஒரு நாள் ஒரு திருவிழாவில் யானையின் துதிக்கையிலே இரும்புக் கம்பத்தைக் கொடுக்க, அந்த யானை குழிக்கு அருகே சென்று, அதை நட மறுத்து விட்டது. எல்லோருமே ஆச்சரியத்தால் அதிர்ச்சியடைந்தார்கள். அது நாட்டிற்கே நல்லதல்ல என்று கவலை கொண்டார்கள்.

பல முறை பாகன் அடித்தும்கூட, அதைக் குத்தியும் கூட, வதைத்தும்கூட - அந்த யானை அந்தக் குழியிலே அந்தக் கம்பத்தை நட மறுத்து விட்டது. ஏன் என்று தெரிந்துகொள்ள - பிறகுதான் எல்லோரும் குழியைப் போய் எட்டிப் பார்த்தார்கள். குழிக்குள்ளே ஒரு சின்ன பூனைக் குட்டி இருந்தது. கம்பத்தை நட்டால் பூனைக் குட்டி இறந்துவிடும் என்பதற்காக யானை அந்தக் கம்பத்தை நட மறுத்தது என்பதை உணர்ந்தார்கள்.

அண்ணா சொன்னார் - சட்டசபையிலே "நீங்கள் யானையாக இருக்கின்ற ஆளுங்கட்சிக்காரர்கள் - பூனையாக இருக்கின்ற எங்களை - எதிர்க்கட்சியாக இருக்கின்ற எங்களை அந்த யானை எப்படி மதித்ததோ அப்படி மதியுங்கள்" என்று சுட்டிக்காட்டினார்கள்.

இன்னொருமுறை, நம் நண்பர் ஹண்டே அவர்கள் சட்டமன்றத்திலே பேசும்போது - அப்போது ஹண்டே அவர்கள் தோழமைக் கட்சி, சுதந்திரா கட்சி. ஹண்டே அவர்கள் திமுகழகத்தின் ஆட்சி, அண்ணாவின் தலைமையிலே நடைபெறுவதைப் பற்றி, அவர் தோழமைக் கட்சியாக இருந்தாலுங்கூட, ஆட்சிக்குத் தேவையான கருத்துக்களை எடுத்துச் சொல்லிக்கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு எதிர்கட்சிக்காரர் எழுந்து "என்ன ஹண்டே இவ்வளவு மென்மையாகப் பேசுகிறார்" என்று கேட்டார். அப்போது அண்ணா சொன்னார். "எப்போதும் எதிர்க்கட்சிதான் வேகமாகப் பேசும்; ஆனால் தோழமைக் கட்சி பூனை தன் குட்டியைக் கவ்விக் கொண்டு போவதைப் போலத்தான் கவ்வும். எதிரிக் கட்சியாக இருந்தால் பூனை எலியின் மீது பாய்வதைப் போலப் பாய்வார்கள். ஹண்டே அவர்கள் பூனை தன் குட்டியைத் தூக்குவதைப் போலப் பல் பதியாமல் எங்களைத் தூக்குகிறார்" என்று அண்ணா அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள்.

இது தோழமைக் கட்சிக்கு இருக்கவேண்டிய இலக்கணம் என்பதை அன்றைக்கே அண்ணா அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

## எதிர்க்கட்சித்தலைவரின் குறைபாடு

இங்கே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் ஒன்றைக் குறிப்பிட்டார். அவர்கள் சட்டமன்றத்திலே ஏற்கெனவே என்னோடு இருந்தார் என்று எனக்கு நினைவு! நல்ல சட்டமன்றப் பாரம்பரியம் கொண்டவர். நல்ல பண்பாளர். அவர்கள் சில கருத்துக்களை இங்கே சொன்னார்கள்.

இப்போதெல்லாம் சட்டமன்றத்திலே பேசப்படுகின்ற விஷயங்கள் குறித்து - முன்பு போல அதிகாரிகள் மாலை நேரத்திலே எங்களிடம் வந்து கேட்டுத் தெரிந்துகொண்டு நடவடிக்கை எடுப்பதில்லை என்று சொன்னார்கள். நானும் 57லிருந்து சட்டமன்றத்திலே இருக்கிறேன். நான் பேசிய பிறகு, அன்றைக்கு மாலையிலே எந்த அதிகாரியும் என்னை வந்து பார்த்து, என்ன பேசினீர்கள் என்று கேட்டதாக எனக்கு ஞாபகம் இல்லை. ஒருவேளை பாலகிருஷ்ணன் அவர்களைக் கேட்டிருக்கலாம். ஆனால் என்னைக் கேட்டது கிடையாது. நான் 57லும் இருந்தேன்; 62லும் இருந்தேன். எதிர்க்கட்சியாக இருந்தேன்; அதற்குப் பிறகு 67ல் ஆட்சிக்கு வந்தேன். அதற்குப் பிறகு எம்.ஜி.ஆர். காலத்திலே எதிர்க்கட்சியாக இருந்திருக்கிறேன். எந்த அதிகாரியும் என்னைக் கேட்டதாக எனக்கு ஞாபகம் இல்லை.

நம்முடைய பாலகிருஷ்ணன் அவர்களுக்கு - கொஞ்சம் ஞாபக மறதி உண்டோ என்று எனக்கு எண்ணம். ஏனென்றால் - நான் சொன்னேன் முதலிலேயே. பெருந்தலைவர் காமராஜர் சட்டமன்றத்தில் பேசியதே கிடையாது. அவர் இங்கே தமிழை ஆட்சி மொழிச் சட்டத்தை நிறைவேற்றிவிட்டுப் பேசியதாக ஒன்றை இங்கே பாலகிருஷ்ணன் படித்துக் காட்டினார். அந்தப் பேச்சு காமராஜர் பேசியதல்ல. சி.சுப்பிரமணியம் அவர்கள் பேசிய பேச்சு என்பதை - வரலாற்றிலே பிழை வந்து விடக்கூடாது என்பதற்காக - அவர் சார்பாக அந்தப் பிழையை உங்கள் முன் நான் திருத்தி - ஏதாவது நான் தவறு செய்திருந்தால், அந்தத் தவறையும் திருத்துங்கள் என்று உங்களையெல்லாம் கேட்டுக்கொண்டு - உங்களுடைய அன்பான வருகைக்கு நன்றி கூறி இந்த அளவில் விடைபெறுகிறேன்".

*- இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.*

# மீண்டும் சட்டமன்ற மேலவை:

## பேரவைத் தலைவர் பெருமிதம்!

**சென்னை மாகாண கவுன்சில்**

தமிழகத்தின் அரிய வரலாற்றுப் பெட்டகத்தில் மேலும் இரண்டு வரலாற்றுச் சிறப்புகள் இன்று சேர்க்கப்படுகின்றன.

Montague Chemsford சீர்திருத்தங்களைத் தொடர்ந்து இந்திய அரசு சட்டம் 1919ல் நடைமுறைக்கு வந்தது. அதன் காரணமாக முதன் முதலில் தேர்தல் நடைபெற்று சென்னை மாகாண கவுன்சில் 1921ல் தோற்றுவிக்கப்பட்டது. அந்த அமைப்பே விடுதலைக்கு முன்பிருந்த இந்தியாவின் மிகப் பழைய சட்டமன்ற அமைப்பு ஆகும். அந்த மாகாண கவுன்சில் தனித்தன்மையோடு 1937ல் தேர்தல் நடைபெறும் வரை செயல்பட்டது.



1935ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டத்தில் குறிப்பிட்டவாறு, ஏற்கெனவேயிருந்த சென்னை மாகாண கவுன்சில் சட்டமன்ற மேலவை என்றும் சட்டமன்றப் பேரவை என்றும் இரண்டு அவைகள் கொண்ட முறை 1937லிருந்து நடைமுறைக்கு வந்தது.

**அண்ணா ஆட்சியில் மேலவைப் பெயர் மாற்றம்**

பேரறிஞர் அண்ணா அவர்கள், தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின் 18.7.1967ஆம் நாளன்று சென்னை மாநிலத்தின் பெயரைத் 'தமிழ்நாடு' என மாற்ற வகை செய்யும் தீர்மானத்தை சட்டப்பேரவையில் நிறைவேற்றி "சென்னை சட்டமன்ற மேலவை" "தமிழ்நாடு சட்டமன்ற மேலவையாக"ப் பெயர் மாற்றம் செய்யக் காரணமாக இருந்தார்கள். அவ்வாறு இருந்த சட்டமன்ற மேலவை 1.11.1986 முதல் ஒழிக்கப்பட்டது.

மூன்றாவது முறையாகத் தமிழக அரசின் தலைமைப் பொறுப்பை ஏற்ற மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சட்டமன்ற மேலவையை மீண்டும் தோற்றுவிக்கப் பேரவையில் 20.2.1989ஆம் நாளன்று கொண்டு வந்த தீர்மானத்தைப் பேரவை நிறைவேற்றியது. பல்வேறு காரணங்களால் அந்தத் தீர்மானம் செயல் வடிவம் பெறவில்லை.

எனினும், நான்காவது முறையாக ஆட்சிக்கு வந்த மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 26.7.1996ஆம் நாளன்று சட்டமன்ற மேலவையைத் தோற்றுவிக்கச் சட்டப்பேரவையில் மீண்டும் முன்மொழிந்த தீர்மானத்தைப் பேரவை ஏற்றுக்கொண்டது. இந்த மாதம் 4ஆம் தேதி கூடிய மத்திய அமைச்சரவை இத்தீர்மானத்தை பாராளுமன்றத்தில் இந்தக் கூட்டத்தொடரில் அறிமுகம் செய்வதாக அறிவித்துள்ளது.

**இந்தியப் பிரதமருக்கு நன்றி**

இதற்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கும், மத்திய அமைச்சரவைக்கும் குறிப்பாகத் தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவது சிறப்பு சட்டப் பேரவையின் வைரவிழா.

இந்திய அரசுச் சட்டம் 1935 வாயிலாக, தமிழ்நாட்டில் 14.7.37ஆம் நாள் காலை 11 மணியளவில், இந்த விழா நடந்துகொண்டிருக்கும் சென்னைப் பல்கலைக்கழக வளாகத்திலேயே அமைந்திருக்கும் ஆட்சிப் பேரவை மண்டபத்தில் (Senate Hall) சட்டமன்றப் பேரவை தன்னுடைய முதல் கூட்டத்தைக் கூட்டியது. அது நடந்து இன்று சரியாக 60 ஆண்டுகள் ஆயிற்று. அதை நினைவுபடுத்தும் வகையிலேயே இன்று வைர விழா நடத்தப்படுகிறது.

*(மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு.பி.டி.ஆர்.பழனிவேல் ராஜன் அவர்கள் பேசியதிலிருந்து)*

# பொன்விழா காணும் தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலைத் துறை


பொன்விழா ஆண்டினைப் பொலிவுடன் முடித்து, பவள விழா ஆண்டிற்கு ஏறு நடைபோடும் தமிழ்நாடு நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறை தன் பெயருக்கு ஏற்ப நீண்டதொரு வரலாற்றைத் தன்னகத்தே கொண்டது.

1946ஆம் ஆண்டு வரை உள்ளாட்சி அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்டு வந்த சாலை மற்றும் பாலப்பணிகள் 1946ஆம் ஆண்டில் தமிழக அரசின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டு நெடுஞ்சாலைத் துறை எனும் சிறப்புத் துறையினைத் தோற்றுவித்து, அனைத்து சாலை பாலப்பணிகள் சிறப்புறச் செயலாக்கப்பட்டு வருகின்றன. இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழக அரசின் இத் தனித்துறை அமைப்பு, தலையாயதும் முதலாவதுமாகும்.

தமிழக நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் தற்சமயம் 2002 கி.மீ. நீளமுள்ள தேசீய நெடுஞ்சாலையும் 1934 கி.மீ. மாநில நெடுஞ்சாலையும், 13,975 கி.மீ. மாவட்டப் பெரிய சாலைகளும் மற்றும் 39,063 கி.மீ. இதர மாவட்டச் சாலைகளும் உள்ளன. இதனைத் தவிர 1132 கி.மீ. கரும்பு ஆலைகளுக்குச் செல்லும் சாலைகளும் 34,083 கி.மீ. ஊராட்சி ஒன்றியச் சாலைகளும் 29,020 கி.மீ. ஊராட்சிச் சாலைகளும், மற்றும் 6.528 கி.மீ. வகைப்படுத்தப்படாத சாலைகளும் இத்துறையின் தொழில்நுட்ப உதவிகளுடன் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இத்துறையின் 3000க்கும் மேற்பட்ட கடும் உழைப்பிற்கு அஞ்சாத பொறியாளர்களை உள்ளடக்கிய 14,500 அலுவலர்கள், பணியாளர்கள் அடங்கிய மாபெரும் சக்தியே இத்துறையின் சிறப்பான செயல்பாட்டிற்குக் காரணமாக அமைகிறது.

இந்த 50 ஆண்டு கால நெடிய வரலாற்றில் நெடுஞ்சாலைத் துறையின் செயல்பாடுகளில் பல வரலாறு படைத்து நினைவில் நிற்கின்றன. சாலை வடிவமைப்பிலும் பாலங்கள் கட்டுவதிலும் இந்தியாவிற்கே ஒரு வழிகாட்டியாக இத்துறை திகழ்கிறது. இதற்கு எடுத்துக்காட்டாக 1950ஆம் ஆண்டு செங்கல்பட்டு அருகே தேசிய நெடுஞ்சாலையில் பாலாற்றின் குறுக்கே கட்டப்பட்ட பாலம் அமைந்துள்ளது என்பதைக் குறிப்பிடலாம்.


அன்றாடம் மாறிவரும் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி, சென்னை - சைதாப்பேட்டை அடையாறு ஆற்றின் குறுக்கே போக்குவரத்துக்கு சிறிதும் இடையூறு இன்றி கட்டப்பட்ட மறைமலை அடிகள் பாலம் ஆசிய கண்டத்தில் அகலமான மாநகரப் பாலங்களில் முன்னோடியாகும்.



தமிழகத் தலைநகரில் தனிப்பெரும் மேம்பாலமாகப் பலரும் வியக்கும் வண்ணம் அமைந்துள்ள அண்ணா மேம்பாலம் நெடுஞ் சாலைத் துறையின் அரும்பெரும் சாதனைப் படைப்பு.

திருநெல்வேலி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் போன்ற பெரிய மாநகரங் களில், போக்குவரத்து நெரிசலைப் போக்க கட்டப்பட்ட வில் வளைவு அமைப்புக் கொண்ட மேம்பாலங்கள் இத்துறையின் சாதனைகளைப் பறை

சாற்றுகின்றன. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி, தூத்துக்குடி, திருப்பூர், சேலம், ஈரோடு, வேலூர் ஆகிய இடங்களில் உலக வங்கியின் உதவியுடன் வேலைகள் எடுக்கப்பட்டன.



அனைத்துக்கும் மேலாக முற்றிலும் நெடுஞ் சாலைத்துறைப் பொறியாளர்களால் வடிவமைக்கப்பட்டு இராமேஸ்வரம் தீவினைத் தாய் நிலத்துடன் இணைக்கும் வகையில் கடலின்மேல் அமைக்கப்பட்ட பாம்பன் பாலம், நெடுஞ்சாலைத் துறையின் சாதனைக்குப் பெருஞ் சான்றாக அமைகிறது.

உலக வங்கி நிதி உதவியுடன் கட்டப்பட்ட தாம்பரம் மாமண்டூர் நான்கு வழித் தடச்சாலை இத்துறையின் சாதனையில் மற்றுமொரு மைல்கல்.

இந்தியாவின் உயிர்நாடியான கிராமங்களில் வாழும் மக்களுக்கு அவர்தம் விளைபொருட்களை விரைந்து வணிக மையங்களுக்குக் கொண்டுசெல்லச் சீரிய சாலையை அமைப்பதும் இத்துறையே. 1991 கணக்கெடுப்பின்படி ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகையுள்ள 517 கிராமங்களுக்கும் இணைப்புச் சாலை 3 ஆண்டுகளுக்குள் போடப்பட்டுவிடும்.

கரும்பு ஆலைகளுக்குக் கரும்பு கொண்டுசெல்லும் தரமான சாலைகளையும் இத் துறையே அமைக்கிறது. 1957ஆம் ஆண்டு நிறுவப்பெற்ற சென்னை நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் மைய அரசின் டெல்லி ஆராய்ச்சி நிலையத்திற்கு இணையாக மேன்மை பெற்றுள்ளது. பல்வேறு பணிப்பிரிவுகளின் தொழில்நுட்ப ஆய்வகங்களைத் தன்னகத்தே கொண்ட நெடுஞ்சாலை ஆராய்ச்சி, தமிழ்நாட்டில் அமைந்துள்ள சாலைகள் பாலங்களுக்கான புலனாய்வு, கட்டுமானம், பராமரிப்பு தொடர்பான செயல் மேலாக்கப் பணிகள் குறித்த ஆராய்ச்சிகளைப் பயனுற மேற்கொள்கிறது. இதன் பணிகளை மாநிலம் முழுவதும் உபயோகிக்கத் தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் கோவை மண்டல ஆய்வகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஒரு நாட்டின் துரிதமான பொருளாதார வளர்ச்சிக்கும் சமூக ஒருங்கிணைப்புக்கும் சாலைப் போக்குவரத்து தொடர்பு இன்றியமையாத அடிப்படைத் தேவையாகும். சாலை மற்றும் ஊரக மேம்பாட்டுப் பணிகளை மேலும் செம்மையாகவும், சிறப்பாகவும் செயல்படுத்தும் பொருட்டு, தற்போது பொன்விழா ஆண்டினைத் தாண்டிச் சென்றுகொண்டிருக்கும் இத்துறைக்கு நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமைச் செயலக அளவிலும் தனித்துறை அமைத்து, தனிச் செயலாளரும் அமர்த்தப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. இதிலும் தமிழகம்தான் முன்னிற்கின்றது என்பது தனிச் சிறப்பு.

உலக வங்கி, ஆசிய மேம்பாட்டு வங்கி, இன்னபிற வெளிநாட்டு நிறுவனங்களின் நிதி உதவியுடன் சாலை நிர்மான கட்டுக்கோப்பினை மேம்படுத்தத் தனியார் மயமாக்கல் போன்ற திட்டங்களைச் செயலுறுத்தவும் மேலும் நபார்டு (NABARD) கடன் உதவியை நிறைவாகத் துய்த்து சாலை மேம்பாட்டில் முழுப்பலன் ஈட்டவும் இத்துறை தனிக்கவனத்தைச் செலுத்திவருகிறது.

இன்றைய மிக இன்றியமையாத பொருளாதார மேம்பாட்டிற்கு அறுதியாகவும், உறுதியாகவும், தேவைப்படும் சாலை, பால மேம்பாடு, தமிழ்நாட்டுப் பொருளாதாரத்தையும் இந்திய வளத்தையும் தலை நிமிரச் செய்ய அடிப்படையாக அமைந்துள்ள நெடுஞ்சாலைத்துறை, தமிழகத்தின் முதுகெலும்பாகத் திகழ்ந்து அரும்பணியாற்றுகிறது, ஆற்றும் அத்தகு பணி மேன்மேலும் தொடரும். ★

# வேலூர் புரட்சி

வேலூர்க் கலகம் எனப்படும் வேலூர்ப் புரட்சி 'வீழ்ந்து பட்டோம்' நாம் என்றுணர்ந்த தென்னிந்திய மக்கள் விழித்தெழுந்த வீரக் கதையாகும்.

மாவீரன் திப்புவின் வீழ்ச்சிக்குப் பின், அவரது குடும்பத்தினர் கைதிகளாய் வேலூர்க் கோட்டையுள் அடைக்கப்பட்டனர். அவர்களை 1500 இந்திய, 379 வெள்ளைச் சிப்பாய்கள் காவல் புரிந்தனர்.

**1806**

ஆங்கிலப் படையின் முதல் ரெஜிமெண்டின் முதல் பட்டாலியனின் ஆறு கம்பெனிகளும், நான்காவது ரெஜிமெண்டின் இரண்டாவது பட்டாலியனும் பணியில் இருந்தன. ஏப்ரல், மே மாதம் வாக்கில் சிப்பாய்களுக்குப் புதிய சீருடை அமலாக்கப்பட்டது. புதிய தலைப்பாகை, தோலால் ஆன குல்லாய்ச் செண்டு, புதிய காலுறைகள் வழங்கப்பட்டு அணியுமாறு வற்புறுத்தப்பட்டது. ஆனால் வேலூர்ச் சிப்பாய்களுக்கு அதனை ஏற்க மனமில்லை.

வாலாஜாபாத்திலும் அப்படியே தம் ஆணை செயல்படாமற் போனதற்காக அவமானமுற்ற வெள்ளை அதிகாரிகள், சுதேசி சிப்பாய்களைப் பட்டினி போட்டனர். முன் நின்றவர்களுக்கு தலா 900 சவுக்கடி தண்டனை அளித்தனர். ஒரு சிப்பாயின் மாதச் சம்பளம் 7 ரூபாய் மட்டுமே. அதை விட்டெறிந்து விட்டு வேலையிலிருந்து வெளியேற வேண்டும் என ஆபாச அடைமொழியோடு அவர்கள் வெள்ளையரை வைதனர்.

சிப்பாய்களின் மனத்தில் எதிர்ப்புணர்வென்னும் நெருப்பு! திப்புவின் நினைவு எரிநெய் ஆயிற்று!

திப்புவின் புதல்வர்கள், வேலூர்ப் பட்டாளத்தின் சுதேசித் தலைவர்கள், சிப்பாய்களின் எண்ணம் செயலாக ஊக்கம் கொடுத்தனர். மதுரைக் கலவரம் (1804), சித்தூர்க் கலவரம் (1804-5), மலபார் புரட்சி (1802-5), திருவாங்கூர் புரட்சி (1804-5) முதலானவையும் அவர்களது உணர்ச்சிகளைக் கூடுதலாக்கின.


புரட்சியாளர்கள், வேலூருக்கு அப்பால், நெல்லூர், காளஸ்திரி பகுதிகளோடு ரகசியத் தொடர்பு கொண்டார்கள். இந்து முஸ்லீம் மக்களை, சிப்பாய்களை வெள்ளையர்க்கு எதிராக ஒன்றிணைக்க முயன்றார்கள். தமக்கெதிராக வதந்தி பரப்புவோர் இராணுவ நடவடிக்கைக்கு உள்ளாவர் என்று மிரட்டியது கும்பினி ஆட்சி.

ஜூலை 4ம் நாள் புரட்சி தினமாய்க் குறிக்கப்பட்டது. ஆனால் அது 8-ம் தேதி என மாறி மீண்டும் 9-ம் தேதி ஆயிற்று. அன்று மாலையும் இரவும், பல்வேறு காரணங்கள் காட்டி சிப்பாய்களில் பல பேர் கோட்டைக் குள்ளேயே தங்கினர். வெள்ளை அதிகாரிகள் உறங்கிக் கொண்டிருந்தனர். 10ம் தேதி விடிந்து கொண்டிருந்தது. இரவு இரண்டு மூன்று மணி. சிப்பாய்கள் சிறு பீரங்கிகளைச் சப்தமேதுமற்று நகர்த்திச் சென்று வெள்ளைக் குடியிருப்புகளுக்கு எதிரே நிலை நிறுத்தினர். சைகை கிடைத்ததும் துப்பாக்கி, பீரங்கிகள் முழங்கின.

கர்னல் பான்கோர்ட் முதல் பலி. அடுத்து கர்னல் மெக்சிராஸ். மெக்சிராஸின் சடலத்தின் மீது சிப்பாய்கள் காறி உமிழ்ந்து, எட்டி உதைத்து இகழ்ந்தனர். அவர்தான் புதுத்தொப்பி அணியக் கட்டாயப் படுத்தியவர். அரண்மனைப் பணியாளர் கேப்டன் வில்லிசனைச் சுட்டு வீழ்த்தினர். சார்ஜெண்ட் ஜான் ஈலே துரத்திச் சென்று வளைந்த கொடுவாளால் வெட்டப்பட்டார். திப்புவின் இளவரசர்களது பணியாட்கள், புரட்சி நடத்திய சிப்பாய்களுக்கு முழு உற்சாகத்துடன் உதவி செய்தனர். எதற்கோ, கோட்டையிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்த மேஜர் ஆம்ஸ்ட்ராங் என்ன கலவரம் இது என்றறிய பல்லக்கு விட்டிறங்கினார். கனன்ற குண்டுகளே அவரது கேள்விக்குப் பதிலுரைத்தன.

ஐநூறு இந்திய சிப்பாய்கள் ஒன்று திரண்டு வெள்ளைக் குடியிருப்புகளின் மீது குண்டுமழை பொழிந்தனர். 69-ம் ரெஜிமெண்டின் வெள்ளை வீரர் அநேகம் பேர் மாண்டு வீழ்ந்தனர். சார்ஜெண்ட் காஸ்கிரேவ் ஊனப்பட்டு வீழ்ந்தார்.

ஒன்றரை மணி நேரம், தாக்குதல் தீவிரமாக நீடித்தது. பின் இளவரசர் முஸ்-உத்-தீன் ஆணைப்படி கோட்டையில் வெற்றி முழக்கத்தோடு பச்சை வர்ணப் பின்னணியில் கர்ஜித்து நிற்கும் வரிப் புலிக் கொடியொன்று ஏற்றப்பட்டது. அந்த நேரம் கோட்டை முழுவதும் புரட்சியாளர்கள் வசத்தில் இருந்தது.



காலை 9.30 மணி அளவில் வெளியிலிருந்து வெள்ளைப்படை உதவிக்கு வந்தது. மைசூர் இளவரசரும் தான்தான் தலைவர் என்று அறிவித்து முன் வரவில்லை. புரட்சியின் நோக்கத்தை மறந்து போன இந்திய சிப்பாய்கள் கொள்ளை யடிப்பதில் தீவிரம் காட்டினர். அதனால் பெருங்குழப்பம் விளைந்தது. காலை 10 மணி அளவில் வெள்ளையர் கை ஓங்கிற்று. இந்தியச் சிப்பாய்கள் துருவித் துருவித் தேடப்பட்டுக் கொல்லப்பட்டனர். ஆங்கிலேயர்க் கெதிரான இந்தியாவின் முதலாவது இராணுவக் கிளர்ச்சி இப்படித் தோல்வியுற்றது.

- டாக்டர் பி. சின்னையன் அவர்களது
The Vellore Mutiny - 1806
என்னும் நூலிலிருந்து.

# எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு..

முதலாவதாகத் தனக்குத் தானே கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளுபவனே சுதந்திர மனிதன்!

- மகாத்மா காந்தியடிகள்

சுதந்திரத்திற்குப் பேச்சால் அல்ல, செயலால்; விழா நாளில் மட்டுமல்ல, எல்லா நாட்களிலும்; தனித்தனியே அல்ல, எல்லா மக்களும் மரியாதை செலுத்திட வேண்டும்.

- அறிஞர் அண்ணா

நமது நாட்டில் சுதந்திரம் என்பதற்கு அர்த்தமே, மற்றவர்கள் சுதந்திரத்தைக் கெடுப்பது என்றுதான் பலர் கருதிக்கொண்டிருக்கிறார்கள். இந்த மனப்பான்மை, அடிமைத் தளையின் வாசனையால் ஏற்பட்டதே தவிர, ஒருக்காலும் சுயேச்சைத் தன்மை உடையதாகாது!

- தந்தை பெரியார்

ஒரு மனிதன் தன் சுதந்திரத்தை இழந்துவிட்டானென்றால், அவன் தனது மனிதத் தன்மையை இழந்துவிட்டான் என்றுதான் பொருள்!

- ரூஸோ

வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்பு வேறொன்று கொள்வாரோ?

- மகாகவி பாரதியார்

உயர்ந்த பதவிகளில் இருப்பவர்களுக்கு, நினைத்தபடி பேசவும் நடந்துகொள்ளவும் சுதந்திரம் இருக்காது!

- ஸால்லஸ்ட்

சுதந்திரத்தைப் பெற நாம் கொடுக்கும் விலைதான் கட்டுப்பாடு!

- நார்மன் வின்செண்ட் பீல்

சுதந்திரம் இல்லாத மனிதனிடம் அன்பை எதிர்பார்ப்பது கடினம்; அடிமையிடத்தில் உண்மையான அன்பு எப்படி இருக்கமுடியும்?

- விவேகானந்தர்

உன்னுடைய சுதந்திரத்திற்கான வழி பிறரிடமில்லை; உன்னிடமே இருக்கிறது!

- புத்தர்

நாம் சுதந்திரம் பெற்றதோடு ஒரு யாத்திரை முடிந்துவிட்டது. ஆனால், இன்னொரு யாத்திரை தொடங்கிவிட்டது. வறுமையை ஒழிப்பதற்காகவும், நல்வாழ்வுக்கு உகந்த சமூக, பொருளாதார முன்னேற்றத்தை அடைவதற்காகவும் துவக்கியுள்ள யாத்திரையே அது!

- ஜவகர்லால் நேரு

அடுத்த இதழ்

**'தமிழரசு'**

**சுதந்திரத் திருநாள் பொன்விழா**

**சிறப்பிதழாக மலரும்!**

# இந்திய சுதந்திரப் போர்: முக்கியச் சம்பவங்கள்!

- **1186-1526**-ல், வட இந்தியாவின் சில பகுதிகளில், இஸ்லாமியர்களான கோரி, கில்ஜி, துக்ளக், லோடி வம்ச ஆட்சி நிலவியது.
- 1510ல், ஐரோப்பியாவிலிருந்து இங்கு வந்தவர்களில், முதன்முதலாக வந்த போர்ச்சுகீசியர்கள் கோவாவில் தங்கள் அரசை நிறுவினர்.
- 1526ல், ஏற்பட்ட மொகலாயர் ஆட்சி, இந்தியாவில் 1857 வரை நீடித்தது.
- 1757ல், நடந்த பிளாஸிச் சண்டை, இந்திய வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. முதலாவதாக, வங்கதேசத்தில் ஆங்கிலேயர் ஆட்சி அமைந்தது.
- 1784ல், பக்சார் போர். இதை இரண்டாவது கட்டத் திருப்புமுனை எனலாம். வங்கதேசத்தில் அழுத்தமாகக் காலூன்றிய ஆங்கிலேயர், அதையடுத்து-சென்னை, பம்பாய் எனப் பல பெரிய முக்கிய இந்திய நகரங்களையும் தமது ஆட்சியின் கீழ் கொண்டுவந்தனர். 4 மராட்டியப் போர்கள், 3 கர்னாடகப் போர்கள், 3 மைசூர்ப் போர்கள் ஆகியவை-ஆங்கிலேயர் ஆதிக்கம், (ஓரிரண்டு பகுதிகள் தவிர) இமயம் முதல் குமரிவரை இந்தியாவில் பரவிட வகை செய்தது.
- 18ஆம் நூற்றாண்டில், ஆங்கில ஆதிக்கத்திற்கு எதிரான போர்க்குரல் - முதன்முதலாக பூலித்தேவன், வீரபாண்டியக் கட்டபொம்மன், கான்சாகிப், வேலுநாச்சியார் போன்றவர்களால் ஒலிக்கப்பட்டது; அவர்களில் பலரும் ஆங்கிலேய அரசால் வீழ்த்தப்பட்டனர்.
- 1801ல், அகண்ட பாரதம் முழுவதுமே ஆங்கிலேயர் வசமானது.
- 1806ஆம் ஆண்டில்-வரலாற்றாசிரியர்களால், இந்தியாவின் முதல் விடுதலைப் போர் எனப்படும் வேலூர்ப் புரட்சி மூண்டது.
- 1857ல், "இந்தியாவின் மாபெரும் கலகம்" அல்லது "இந்திய சிப்பாய்களின் போர்". இப்போரானது மாபெரும் அரசியல் புரட்சி என்றே பிரிட்டிஷ் பிரதமரால் ஜூலை 27ல் குறிப்பிடப்பட்டது.
- 1876இல் இந்திய தேசிய சங்கம் தொடக்கம். அதுவரை கம்பெனி ஆட்சிக்குட்பட்டிருந்த நம் இந்திய நாடு, இங்கிலாந்துப் பேரரசியார் அதிகாரத்தின் கீழ் வந்தது.
- 1883ல், பம்பாயில் இந்து-முஸ்லிம் கலகம் ஏற்பட்டது.
- 1884ல், சென்னையில் 'மகாஜன' சபை தொடக்கம். சுதேசி சங்கம் சென்னை மகாஜன சபாவுடன் இணைக்கப்பட்டது.
- 1885ல், சில கோரிக்கைகளை நிறைவேற்றுவது ஒன்றே குறிக்கோளாக-இந்தியத் தேசிய காங்கிரஸ் ஹென்றி ஹ்யூம் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது.
- 1892ல், கவுன்சில் சட்டம் நடைமுறைக்கு வந்தது.
- 1894 - இந்திய மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்த பாலகங்காதர திலகர் அரும்பாடு படுதல்.
- 1896 - திலகர், தமது இரண்டு பத்திரிகைகள் மூலம் ஆங்கிலேய அரசுக்கு எதிரான பிரச்சாரத்தை முடுக்கிவிடுதல்.

- 1905ஆம் ஆண்டில் - மிதவாத இயக்கமாக இருந்த காங்கிரஸ், இந்திய விடுதலைக்குக் குரல் கொடுப்பதாயிற்று. கர்சன் பிரபுவால் வங்கதேசம் பிரிக்கப்பட்டது. நம்மவர்களால் - அப் பிரிவினைக்கு மூலகாரணம், இந்துக்களையும் முஸ்லிம்களையும் பிரித்தாளும் சூழ்ச்சியே ஆகும் எனக் கருதப்பட்டது. சுதேசி இயக்கம் தோன்றியது. மேற்கண்ட இயக்கம் மிதவாத இயக்கமாகவே இருந்துவந்தது.

- 1906 - முஸ்லிம் லீக் தோற்றம். முஸ்லிம்களுக்குப் போதிய முக்கியத்துவம் தரப்படவில்லை என்று குறைபடுதல்.



- 1907ல், சூரத் மாநாடு. "சுதந்திரம் எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன்" என்று திலகர் முழங்குதல். இதனால் அங்கு மூண்ட கலவரம் காரணமாகப் பாலகங்காதர திலகர் காங்கிரசை விட்டு விலகியிருத்தல்.

  முதல் சுதந்திரப் போரின் 50ஆம் ஆண்டைக் கொண்டாடும் வகையில், மற்றொரு புரட்சி வெடிக்கலாம் என்று அரசால் அஞ்சப்பட்டது. ஜெர்மனியில் நடைபெற்ற சோஷலிஸ்ட் மாநாட்டில், இந்திய தேசியக் கொடியை "மேடம் காமா" என்பவர் ஏற்றி வைத்தார். தமிழகத்தில் மகாகவி பாரதியார் தேசிய கீதங்களைப் பாடி எழுச்சி மூட்டினார்.

- 1907-ல் வ.உ.சி., பாரதியார், சுப்பிரமணிய சிவா போன்றோர் தமிழ்நாட்டில் சுதந்திரப் போர்முழக்கம் செய்தல்.

- 1909-மிண்டோ மார்லி சீர்திருத்தக் குழுவிடம் முஸ்லிம்கள் தனி மனு தருதல், கிலாபத் இயக்கத்தைக் காந்தியார் தோற்றுவித்தல். முஸ்லிம்களும், துருக்கிக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தல்.

- 1911-ல், மணியாச்சி புகைவண்டி நிலையத்தில் வாஞ்சிநாதனால் ஆஷ் துரை சுட்டுக் கொல்லப்படுதல்.

- 1911-ல், வங்கப்பிரிவினை ரத்து செய்யப்பட்டு, தலைநகர் டில்லிக்கு மாற்றப்பட்டது.

- 1914ல், தென்னாப்பிரிக்காவிலிருந்து காந்தியடிகள் வருகை. கிலாபத் இயக்கம் தொடக்கம். காந்தியர் சகாப்தம்.

- 1914-ல், முதல் உலகப்போர். பிரிட்டிஷ் அரசு இந்தியாவையும் ஈடுபடுத்திடல்.

- 1916-ல், அன்னி பெசன்ட் அம்மையாரின் ஹோம் ரூல் இயக்கம் உருவாதல்.

- 1919-ல், ஜாலியன் வாலாபாக் துப்பாக்கிச் சூடு-ஆயிரக்கணக்கானோர் படுகொலை செய்யப்படுதல்.

- 1920-ல், சேலம் விஜயராகவாச்சாரியார் தலைமையில் நாகபுரியில் காங்கிரஸ் மாநாடு. காங்கிரசில் பெரியார் சேருதல்; மதுவிலக்கு, கதர் இயக்கம் போன்றவற்றில் தீவிரமாக ஈடுபடுதல்; இதன் காரணமாகத் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரானார், பெரியார், வ.வே.சு.ஐயர், சத்தியமூர்த்தி, திரு.வி.க., வரதராஜுலு நாயுடு போன்றோர் சுதந்திரக் கனல் மூட்டுதல்.

- 1920-ஆகஸ்ட்டில் காந்தியடிகளால் ஒத்துழையாமை இயக்கம் அறிவிக்கப்படல்.

- 1921 முதல் காந்தியடிகள், ஜின்னா இடையே கருத்து வேறுபாடு.

- 1922-ல், மக்கள் கிளர்ச்சியில் 'சௌரி சௌரா' என்ற இடத்தில் காவலர் உட்படப் பொதுமக்கள் பலபேர் மாண்டனர்.

- 1925-ல், சட்டமன்ற நுழைவுக்குக் காந்தியார் எதிர்ப்புத் தெரிவித்ததை ஆதரித்து, காங்கிரஸ் கட்சியை விட்டுப் பெரியார் விலகல்.

- 1925-ல், காந்தியாரை விட்டுப் பிரிந்து சென்ற சித்தரஞ்சன் தாஸ், மோதிலால் நேரு, ராஜாஜி போன்றோர் சுயராஜ்யக் கட்சி தொடங்குதல். தேர்தலில் பங்கேற்று அங்கே ஒத்துழையாமைப் போராட்டத்தை நடத்துவது என்பதே நோக்கம்.

★ 1927-இந்தியாவுக்கு சைமன் கமிஷன் வருகை. காங்கிரசார் புறக்கணிப்பு-'சைமனே திரும்பிப் போ!' என முழக்கமிடல். சென்னை-ஸ்பென்ஸர் எதிரே வைக்கப்பட்டிருந்த கொடுங்கோலன் நீலன் சிலை தகர்ப்பு.

★ 1929-ல், காங்கிரசில் காந்தியாரின் செல்வாக்கு ஓங்கியது. ஜனவரி 26-ல் இந்திய சுதந்திர தினமாகக் கொண்டாடி பிரதிக்ஞை எடுத்துக்கொள்ளுமாறு நாட்டுமக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். ஜவஹர்லால் நேரு பிரபலமடைதல்.

★ 1930 - காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கம் (Civil Disobidient Movement) அமைப்பு. கள்ளுக்கடை மறியல், உப்புச் சத்தியாக்கிரகம் அறிவிப்பு; தண்டியில் காந்தியாரும், வேதாரண்யத்தில் ராஜாஜியும், சென்னையில் சீனுவாச ஐயங்காரும் தலைமையேற்று நடத்துதல். போராட்டத்தில் பெண்களும் பெருமளவில் ஈடுபடுதல். வட்டமேஜை மாநாட்டில் பங்கேற்ற முஸ்லிம் லீகினர் தனிநாடு கோருதல்.

★ 1930, 1931, 1932-ல் வட்டமேஜை மாநாடுகள். இரண்டாவது மாநாட்டில் மட்டுமே காந்தியடிகள் பங்கேற்பு.

★ 1932-ல், காந்தியார் கைதுக்கு எதிர்ப்பு தெரிவித்து திருப்பூரில் நடைபெற்ற கண்டன ஊர்வலத்தில் தீவிரமாக ஈடுபட்ட குமாரசாமி (கொடிகாத்த குமரன்) என்பார், காவலர் தாக்குதலால் உயிர்நீத்தல். ஜனவரி 26-ல், சென்னை-கோட்டையில் உள்ள 200 அடி கொடிக்கம்பத்தில் பாஷ்யம் என்பவர் யாருக்கும் தெரியாமல் ஏறி தேசியக்கொடியைப் பறக்கவிடுதல்.

★ 1934, செப்.18-ல் காங்கிரசையே விட்டு விலகும் அளிவிற்குக் காந்தியார் விரக்தியடைதல். ஜெயபிரகாஷ் நாரயணன் போன்றோர் காந்தியாரைவிட்டு விலகி காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சி அமைத்தல்.

★ 1934-40ல், காங்கிரஸ் இயக்கத்தார், சட்டசபைகளில் நுழைந்து விடுதலை முழக்கம் செய்தல்.



★ 1935ஆம் ஆண்டுச் சட்டம் (Govt. of India Act) ஓரளவு தன்னாட்சி அளிப்பதாக வெளியிடப்படுதல். தேர்தலில் பங்கேற்பதற்குக் காந்தியார் உடன்பாடு.

★ 1936-முஸ்லிம் லீகினர் தனிநாடு கோரிக்கையை வலியுறுத்தல். 'இந்தியாவைத் துண்டாட நினைப்பது, ஒரு பசுவை வெட்டி இரண்டாகக் கூறு போட வேண்டுவது போன்றதாகும்' - என்று காந்தியார் அறிவிப்பு. டாக்டர் அம்பேத்கர் எழுச்சி,

★ 1937-ல், மா.பொ.சிவஞானம், காமராசர் ஆகியோர் காங்கிரசில் தீவிரமாகப் பணியாற்றல்.

★ 1939-ல், இந்தியாவைக் கலந்து பேசாமல், 'இந்தியாவும் இரண்டாவது உலகப் போரில் பங்கேற்கும்' என ஆங்கிலேயர் அறிவித்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து, காங்கிரஸ் அமைச்சரவை பதவி விலகல். இந்த முடிவு தவறு என அறிவித்து, காங்கிரசை விட்டு ராஜாஜி விலகுதல்.

★ 1939-45 இரண்டாம் உலகப்போர்க் காலம். நேத்தாஜி 'இந்திய தேசிய இராணுவத்தை'ப் பலப்படுத்தல்.

★ 1940-ல், தனிநபர் அறப்போர்; இப்போரில், முதல் அறப்போர் தியாகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் விநோபா பாவே. லாகூரில் முஸ்லிம் லீக் மாநாடு.

★ 1941-ல், காந்தியடிகளோடு நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ் முரண்படுதல்; இந்திய தேசிய இராணுவம் அமைத்தல். ஜப்பான், இத்தாலி போன்ற பிறநாட்டு உதவியோடு இந்தியாவை மீட்பதே நோக்கம்.

★ 1942 ஆகஸ்ட் 8-ல், காந்தியார் அறப்போர் தொடக்கம்-முக்கியக் காங்கிரஸ் தலைவர்களெல்லாம் முதல் நாளே கைது செய்யப்படவே, நாடெங்கும் வன்முறை தலை தூக்கியது. 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் தீவிரம். காங்கிரஸ் இயக்கத்திற்குத் தடை. அடிமை இந்தியாவில் இனி வாழ்வதில்லை; இதைச் செய்வோம் அல்லது செத்து மடிவோம்' என்று காந்தியார் அறிவிப்பு.'புரட்சித் தீ பரவியது. 538 இடங்களில் துப்பாக்கிச் சூடு, 15 ஆயிரம் பேருக்குமேல் பலி. சிம்லா மாநாடு, காபினெட் தூதுக்குழு. வேவல் கமிஷன் வருகை.

★ 1946-ல், நேத்தாஜியின் முன்னேற்றக் கட்சியில் சேர்ந்து, தென்னாட்டில் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் விடுதலைப் போரில் ஈடுபடல்.

★ 1946 - இங்கிலாந்து நாட்டில், வின்ஸ்டன்ட் சர்ச்சில் அமைச்சரவை தோல்வி கண்டு, பல பகுதிகள் பிரிந்து செல்லல். அட்லி அமைச்சரவை பதவியேற்பு.

★ 1948 ஜூன் மாதத்திற்குள் இந்தியாவிற்கு சுதந்திரம் அளிப்பதென - 1940 பிப்ரவரி 20-ல் அட்லி அமைச்சரவை முடிவெடுத்தல். மவுண்ட் பேட்டன் பிரபுவை இந்தியாவிற்கு அனுப்பிவைத்தல்.

★ 1947 ஆகஸ்ட் 15ல், நம் இந்திய நாடு சுதந்திரம் அடைதல்.

- தொகுப்பு : பி.எல்.ஆர்.

# 'குறுந்தொகை' காட்டும் கால்நடைகள்

முனைவர் இரா. பிரபாகரன்

சங்ககாலத்து இலக்கிய நூல்களில் குறிப்பிடத் தக்கவை எட்டுத்தொகை நூல்களேயாம். மனித வாழ்வினை அக வாழ்வென்றும், புற வாழ்வென்றும் பிரித்துப் பல்வேறு நீதிகளை விளக்கி உலகியலைச் செம்மைப்படுத்தும் தன்மை உடையன இந்நூல்களில் அடங்கியுள்ள பாடல்கள். எட்டுத் தொகையின் ஒவ்வொரு நூலிலுள்ள பாட்டுக்களும் பல புலவர்களால் இயற்றப்பட்டவையாம். தொழில், பொருள், அளவு, பாட்டு என்ற அடிப்படையில் ஒவ்வொன்றாய்த் தொகுக்கப் பெற்றமையால், அவை தொகை எனப் பெயர் பெற்றன. எட்டுத் தொகை நூல்களுள் அகவாழ்வினை அடிப்படையாகக் கொண்ட ஐந்து நூல்களில் ஒன்றே குறுந்தொகை.

அகவாழ்வு குறித்த பாடல்களையே கொண்டிருந்தாலும், புறத்தே தோன்றும் காட்சிகளைச் செய்யுள்களிற் புனைந்து காட்டும் ஆற்றலிலும் மிகவும் சிறந்தது குறுந்தொகை என டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்கள் பாராட்டியுள்ளார். அவ்வாறான காட்சிகளில் ஆங்காங்கே கால்நடைகளைப் பற்றியும் பல்வேறு இடங்களில் விளக்கப்பட்டுள்ளது. சங்ககாலத் தமிழர்தம் வாழ்வில் கால்நடைகளின் பங்கு எத்தகையது என்பதனை விளக்குவனவாய் அமைந்துள்ளன இப்பாடல்கள்.

### பசுக்கள்

சங்ககால அரசியல் பொருளாதார வாழ்வியலில் பசுக்கள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றிருந்தன. இரு அரசர்களுக்கிடையே நிகழும் போரில், ஒரு நாட்டிலிருந்து பசுக்களைக் கவர்ந்து செல்வது வெற்றியின் ஒரு அடையாளமாய்க் கருதப்பட்டது. பசுக்களுடன் மக்கள் கொண்டிருந்த உணர்வுபூர்வமான பிணைப்போடு, அதனால் ஏற்படும் பொருளாதார இழப்பையும் கருதியே, ஆநிரை கவர்வது, போரின் அங்கமாக நிலவியது.

'அஞ்சுவ துடைய ளாயின் வெம்போர்
நுகம்படக் கடக்கும் பல்வே லெழினி
முனையான் பெருநிரை போல'.
80:4-6

'தகடுரை ஆண்ட அதியமான் அஞ்சி (எழினி) தனக்குரிய பசுக்களைக் கைக்கொண்ட பகைவரிடத்திலிருந்து அவற்றை மீட்டுக் காத்தாற்போல்' என்பது இதன் பொருளாம்.


இதுவன்றி, வாழ்வியலில் தாய்மைப் பண்பினை விளக்கும் கால்நடைக் குறிப்புக்களையும் 'குறுந்தொகை' கொண்டுள்ளது.

'புலம்பயி ரருந்த வண்ண லேற்றொடு
நிலந்தூங் கணல வீங்குமுலைச் செருத்தல்
பால்வார்பு குழவி யுள்ளி நிரையிறந்
தூர்வயிற் பெயரும் புன்கண் மாலை'
344:3-6

'மேய்ச்சல் நிலத்தில் பயிரை உட்கொள்ளும் எருதுடன் காணப்படும் பசுக்கள், தம் கன்றுகளை நினைத்து பால்நிரம்பிப் பெருத்த மடிக்காம்புகளிலிருந்து பாலை ஒழுக விட்டுத் தம்மோடு ஒருங்கே மேயும் ஏனைய பசுக்களை விட்டு நீங்கிப் பிரியும் மாலை நேரத்தில்' என இது விளக்கம் பெறுகிறது. தற்காலப் பராமரிப்பில் பால் ஒழுகும் மடி மாட்டினுடைய குறைபாடாகக் கருதப்படுகிறது. என்றாலும், கால்நடைகளிடமும் காணப்படும் தாய்மைப் பண்பினை விளக்குவதாகவே அமைந்துள்ளது இப்பாடல்.

குறுந்தொகையில் மற்றுமொரு பாடல் பசும்பாலிலிருந்து பால் பொருட்களும் பெறப்பட்டதை விளக்குகிறது.

'திண்டேர் நள்ளி கானத் தண்டர்
பல்லா பயந்த நெய்யிற் றொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு'
210:1-3



திண்ணிய தேரையுடைய நள்ளியின் காட்டிலுள்ள இடையர்களுக்குரிய பல பசுக்கள் உண்டாக்கிய நெய்யோடு, எனச் செல்கிறது இப்பாடல். பசுக்களின் பாலினைத் தயிராக்கிப் பின் கொழுப்புச் சத்தினைப் பிரித்தெடுத்து நெய்யாக உருக்கிப் பயன்படுத்தும் வழக்கம் கடைச்சங்கத் தமிழர்களிடையே நிலவியது புலப்படுகிறது.

**எருது**

மனித மாண்புகளை விளக்க கால்நடைகளைக் கையாண்ட குறுந்தொகைப் பாடல்களிடையே, வீரத்தையும், வேகத்தையும் வெளிப்படுத்த எருதுகளை எடுத்துக் காட்டுக்களாய்க் காட்டும் பாடல்களும் உள. இடையரால் பிணிக்கப்பட்ட கயிற்றை அறுத்துச் செல்லும் எருதினைப் போல், என்னும் பொருள்பட,

'கயிறரி யெருத்திற் கதழுந் துறைவன்'

117:4

- என்ற அடி அமைந்துள்ளது.

**எருமை**

கடைச்சங்க காலத்தில் வளர்க்கப்பட்ட எருமைகளின் புறப்பண்புகளும் கீழ்க்கண்டவாறு ஒரு பாடலில் விளக்கப்பட்டுள்ளன.

'திரிமருப் பெருமை யிருணிற மையான்
வருமிட றியாத்த பகுவாய்த் தெண்மணி
புலம்புகொள் யாமத் தியங்குதொ றிசைக்கும்
இதுபொழு தாகவும் வாரார் கொல்லோ'.

279:1-4

முறுக்கிய கொம்பையும், இருள் நிறத்தையுமுடைய எருமையினது கழுத்தின்கண் கட்டப்பட்ட தெளிந்த ஓசையையுடைய மணியானது தனிமையைக் கொண்ட நடுஇரவில், அவ்வெருமை நடக்குந்தோறும் ஒலிக்கின்ற காலம் - என விளக்கம் பெறுகிறது இப்பாடல்.

**ஆடு**

பசு மற்றும் எருமைப் பால் மட்டுமின்றி, ஆட்டுப்பாலும் கூட ஒரு சிறந்த உணவுப் பொருளே. சங்க காலத் தமிழர்கள் இவ்வாறான ஆட்டுப்பாலின் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்தனர் என்பதை ஒரு 'குறுந்தொகைப் பாடல்' புலப்படுத்துகிறது.

'பறியுடைக் கையர் மறியினைத் தொழியப்
பாலொடு வந்து கூழொடு பெயரும்
யாடுடை யிடைமகன் சென்னி'.

221:2-4

(பறியுடைக்கையர் - கையில் பறிகளை ஏந்திய இடையர், மறியினத்தொழிய - குட்டிகளை உடைய ஆடுகளுடன்)

ஆட்டு இடையர்கள் ஆட்டுப் பாலினைக் கொடுத்து உணவுத் தானியங்களைப் பெற்றுச் சென்றனர் என்பது இதனால் விளங்குகிறது. நாணய முறை நடைமுறைக்கு வருவதற்கு முன் நிலவிய பண்டமாற்றுப் பொருளாதார முறையும் இதன் மூலம் அறியப்படுகிறது.

**நாய்:**

நாய்களின் மோப்ப சக்தி, கொள்ளையர்களையும், கொலை செய்தவர்களையும் கண்டறிய குற்றப் பிரிவுக் காவல் துறையினரால் பயன்படுத்திக் கொள்ளப்படுவது போல், பண்டைக் காலத்திலும் வேட்டைக்குச் செல்வோர் வேட்டையாடப்படும் விலங்கினங்களின் இருப்பிடம் அறிய நாய்களைப் பயன்படுத்தினர். வேட்டை விலங்குகளை விரட்டி மடக்கவும் நாய்கள் பயன்பட்டன.

'கல்லென் கானத்துக் கடமா வாட்டி
எல்லு மெல்லின்று ஞமலியு மிளைத்தன'

179:1-2

காட்டினிடையே பொழுது மங்கியது; வேட்டைக்கு அழைத்துச் செல்லப்பட்ட நாய்களும் (ஞமலி) களைத்தன என விளக்குகிறது இப்பாடல்; எங்கள் பல்கலைக் கழகத்தில் சாந்திநல்லா செம்மறி ஆட்டினப்பெருக்க ஆராய்ச்சி நிலையத்தில் ஆடு மேய்த்தலில் நாய்கள் பயன்படுத்தப் படுகின்றன.

**கோழி**

கோழியினம் குறித்த இரு 'குறுந்தொகைப் பாடல்கள் இலக்கிய நயமும், நகைச்சுவை வெளிப்பாடும் கொண்டவையாம்.

'குப்பைக் கோழித் தனிப்போர் போல
விளிவாங்கு விளியி னல்லது
களைவோ ரிலையா னுற்ற நோயே'.

305:6-8

கோழிகளின் சண்டையைப் பலரும் காண வருவர். கடைச்சங்க காலத்தும் கோழிப்போர் ஒரு பொழுது போக்காக விளங்கியது. கோழிப் போரில் ஈடுபடுத்தப்படும் 'அசீல்' எனப்படும் கோழி இனத்திலிருந்தே இன்றைய இறைச்சிக் கோழி இனங்கள் மேலை நாட்டினரால் உருவாக்கப்பட்டன என்பது வரலாறு.

ஆனால், குப்பையைக் கிளறும் கோழி தனியே சண்டையிட்டுக் கொண்டிருப்பதாக இப்பாடலில் விளக்கப்பட்டுள்ளது. அதனை விலக்கி விடுவோரில்லை எனப் பொருள்பட இப்பாடல் இயற்றப் பெற்றுள்ளது.

மற்றொரு பாடலில்,

'குடுமிக் கோழி நெடுநக ரியம்பும்
பெரும்புலர் விடியலு மாலை'

234:4-5

சேவல் குரலெழுப்புகின்ற விடியற் பொழுதும் கூட மாலைக் காலமே எனத் தலைவியின் பிரிவுத்துயரை விளக்கும் இப்பாடலில் சேவல், கொண்டையுடைய கோழி என்ற பொருள்பட 'குடுமிக் கோழி' என விளக்கப்பெறுவதில் உள்ள சொல் நயமும், நகைச்சுவையும் உணர்ந்து பாராட்டத்தக்கது.

**மீன்கள்**

மீன் இனமும் கூட குறுந்தொகைப் பாடல்களில் இடம் பெறுகிறது.

'தண்கடற் படுதிரை பெயர்த்தலின் வெண்பறை
நாரை நிரைபெயர்ந் தயிரை யாரும்'

166:1-2

குளிர்ந்த கடற்பரப்பில் உண்டாகும் அலைகள் மீன்களை வெளிக்கொணர்வதால், தங்கள் வரிசையிலிருந்து நீங்கி வெண் சிறகுகளை உடைய நாரைகள் அயிரை மீனை உண்ணுதற்கிடமாகிய - என ஒரு ஊர் அடையாளம் காட்டப்பெற்றுள்ளது.

மேலும்,

'பன்மீன் வேட்டத் தென்னையர் திமிலே'

123:5

என்ற வரியில், பலவகை மீன்களை வேட்டையாடும் என் தமையன்மார் ஏறிச்சென்ற மீன்பிடிப் படகுகள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவையன்றி, வேறு பல பாடல்களிலும் கூட, மேற்கூறிய கால்நடை, கோழி, மீன் போன்ற இனங்களும், குதிரை, மான், முதலை, யானை, அன்னம், காக்கை, புறா என வேறு பல்வகை இனங்களும் குறித்த குறிப்புக்கள் 'குறுந்தொகை'யில் காணப்படுகின்றன. வாய்ப்புப் பெறுவோர் அத்தகைய வரிகளில் மூழ்கி, சங்ககாலத் தமிழர் வாழ்வியலில் கால்நடைகள் பெற்றிருந்த சிறப்பினை உணர்ந்து உவக்கலாம்.

சிறு கதை

# பேசும் காளை

## - பொன்குன்னம் வர்க்கி

காளை என்று பேச்சு வந்துவிட்டால், தம்பி ஔசுப் எல்லாவற்றையும் மறந்து விடுவான். "அவன் ஒரு காளைப் பைத்தியம்" என்றே மற்றவர்கள் சொல்லி வந்தார்கள். அவனுடையக் கண்ணனைப் பற்றி வியந்து பேசாத விவசாயி அங்கே கிடையாது. கண்ணன் அவ்வாறு ஔசுப்பின் ஜீவனாக இருந்து வந்தது. சாம்பல் நிறம், நல்ல திடமான உருவம்; குட்டையாகத் தடித்தும் வளைந்துள்ளதுமான கொம்புகள்; அந்த உறுதியான சருமத்தின் மீது சுருண்டு கொண்டிருக்கும் அழகான வடிவங்கொண்ட திமில்; கண்கள் வெளியே துருத்தும்; கண்ணனது நடைகூட ஒரு விசேட நிறைவைக் கொண்டது. உழுகிற போதும் மற்ற நேரங்களிலும் கண்ணன் ஔசுப்பின் மனம் அறிந்து நடக்கும். வயலானாலும் சரி, வீட்டுக் கொட்டடியானாலும் சரி, ஔசுப் என்ன நினைக்கிறானோ அதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளும் அந்த உழவு மாடு.

ஔசுப், கண்ணனிடம் சாட்டையை ஒரு போதும் பயன்படுத்த மாட்டான். கொஞ்சம் அதை உயர்த்திக்காட்டுவான். மற்றதைப் போல அது இது என்று கத்த வேண்டியும் இருக்காது. கண்ணனிடம் ஒரு நண்பனிடம் பேசுவது போலப் பேசுவான். எத்தனை மாடுகள் இருந்தாலும் கண்ணன்தான் அங்கே கூட்டத் தலைவன். ஓர் உழவு முடிந்துவிட்டதெனில் அடுத்த பக்கத்திற்குப் போக கண்ணனுக்குச் சொல்ல வேண்டியதில்லை. எதையெல்லாம் எப்படி, எப்போது செய்ய வேண்டுமென அறியும். சில சமயம் அடுத்த வயலுக்குப் போக கண்ணன் எத்தனிக்கையில் ஔசுப் தான் இடைமறித்து ஒய்வு வேண்டுவான்.

"கொஞ்சம் இரு. வெற்றிலை போட்டுக்கொள்கிறேன் - ரொம்ப நேரமாகி விட்டது" என்பான்.

இதைக் கேட்டுக் கண்ணன் நிற்கும். செல்லமான வெற்றிலை விவகாரம் முடிந்ததும் "ம்" என்பான் ஔசுப். கண்ணன் வேலைக்கு ஆயத்தமாகும். ஒரு வயல் உழவு முடிந்து, அடுத்த பக்கம் போகையில் அந்தச் சின்ன வரப்பை எத்தனை ஜாக்கிரதையாகத் தாண்டும் தெரியுமா? அந்த வரப்புகளிலே எந்த இடத்தையும் கண்ணன் மிதித்ததில்லை. அந்த மண்ணை நாசப்படுத்த ஒரு மிதியே போதும் என்பதை அது அறியும்.

கண்ணனைக் கட்டிப்போடவும் தேவையில்லை. எதைச் சொன்னாலும் அறிந்து கொள்ளக்கூடியதால், உழவு முடிந்ததும், அது வேண்டிய மட்டும் புல்லை மேய விடுவான். அப்போதெல்லாம் ஔசுப் ஒரு சிறு எச்சரிக்கை மட்டும் தருவான்.

"போய் – வேண்டியவரை மேய்ந்துகொள். அந்த வாழை மரம் மட்டும் வேண்டாம்".

கண்ணனும் வாழையையோ சின்னஞ்சிறு தென்னங் கன்றுகளையோ தொடுவதில்லை. அவைகளைத் தொடுவதும் சரி, அவற்றை நட்டு வளர்த்த சொந்தக்காரர்களைக் கொம்பால் முட்டுவதும் சரி, இரண்டும் ஒன்றுதான் என்பதை அறியும். உழவெல்லாம் முடிந்ததும், அதன் உடம்பு பூராவும் சேறு நீங்க கழுவிச் சுத்தப்படுத்துவான் ஔசுப். இதில் மிகவும் கவனமாக இருந்தான்.

"வலது காலைத் தூக்கு, தலையை ஏன் ஆட்டிக் கொண்டிருக்கிறாய்? பாரேன், இந்தக் கொம்பு என்னைத் தொட்டுவிட்டால் என்ன ஆகும். சும்மா இரு-அசையாதே..."

இந்த மாதிரி சாதாரண பேச்சுக்கள் எல்லாம் கண்ணனுக்கு நன்றாகப் புரியும். ஆனால் அவை சொல்லப்படும் விதம் அதற்கு ரசிக்கத் தக்கதாயில்லை. குளிப்பதையும் அது வெறுத்தது. ஔசுப்பின் பேரில் கொண்டிருந்த அன்பால் அது சம்மதிக்கும். இந்த அன்பும் நேசமும் கொண்ட பிராணிகளை அறியாத உழவர்கள் என்ன சொல்வார்கள்? "எந்த மாட்டையும் ஔசுப்பிடம் கொண்டுவிடு. ஒரு தடவை அவன் தீனி காட்டிவிட்டால் போதும். அது புதிய மாடாகிவிடும்".

ஔசுப் மாடுகளிடம் இயல்பாகவே பேசுவான். நாள் முழுவதும் மாட்டின் தீனி பற்றிய கவனமாகவே இருப்பான். மிருகவதைத் தடுப்புப் பற்றி ஔசுப்பிடம் பேசினால் அவனுக்குக் கோபம் பொங்கிக்கொண்டு வரும். "விலங்குகளைக் காப்பாற்று, காப்பாற்று" என்று எல்லாரும் பிரசங்கம் பண்ணுவதில் குறைவில்லை. இந்த அரசு எங்கேயாவது ஒரு சிறு காணி நிலத்தையாவது தருகிறதா? மாட்டுத் தீனிக்கு நம்ம தாடியே போதுமா?" என்பான்.



கண்ணனின் பசியடங்கிய பிற்பாடுதான் ஔசுப்பின் சாப்பாடு முடியும். வாயில்லாச் சீவன்கள் பட்டினி கிடந்தால் வீட்டிற்குச் சாபக்கேடு என்பது அவன் நம்பிக்கை. ஒரு மரவள்ளிக்கிழங்கை அவன் கண்ணனுக்குத் தருகிறான் என்று வைத்துக்கொள்வோம். அதை வெகு நேர்த்தியாக மசித்துவிட்டே தருவான். அன்னாசி போன்ற வேறு ஏதாவது முள் குத்தும் இலைகளைத் தருவதாக இருந்தாலும் அப்படித்தான். அந்த முட்களையெல்லாம் சீவியெடுத்து, துண்டுத் துண்டாக அந்த இலைகளையெல்லாம் ஒழுங்காக வெட்டித்தான் கொடுப்பான்.

வயலிலெல்லாம் சுற்றிவிட்டுக் கண்ணன் வீடு திரும்பி விட்டவுடனேயே ஔசுப் "ஏ கண்ணா" என்று குரல் கொடுப்பான். அந்தக் குரல் ஒலித்தவுடனேயே மாடு பிரியத்துடன் பதில் குரல் கொடுக்கும். ஔசுப் அதனிடம் வரும்வரையில் தலையுயர்த்திக் காத்து நிற்கும். ஒரு கைப்பிடி கீரை-வாழைப் பழத்தோல் இப்படி ஏதாவது பண்டத்துடன் அதன் பக்கம் ஔசுப் செல்வான். அதை அவன் கையிலிருந்தே கண்ணன் சாப்பிடும். தடவிக்கொடுத்தால் அவனது கைகளை நக்க ஆரம்பிக்கும். ஔசுப்பின் உலர்ந்த வியர்வையின் கரிப்பு கண்ணனுக்கு மிகவும் பிடித்தமானது.

எந்தக் கூட்டத்திலும் கண்ணன் ஔசுப்பின் குரலைக் கண்டுபிடித்துவிடும். கேட்கும்போது அப்படியே இடியோசை கேட்ட மயிலைப் போல மகிழ்ச்சியடையும். வயலிலோ ஔசுப் தான் ஏரைப் பிடிக்க வேண்டுமென அடம் பிடிக்கும். வேறு யாராவது வந்துவிட்டால் சண்டித்தனம் பண்ணும். அப்போது ஔசுப் வந்து சமாதானப்படுத்த வேண்டியிருக்கும்.

"வேண்டாம் கண்ணா — பாரு, இது நம்ம குட்டப்பன்தான், உனக்குத் தெரியவில்லையா?" இப்படிப் பேசி, ஔசுப் சமாதானத்தை ஏற்படுத்துவான். வயலிலே முழக்கும் கீதம் ஒன்று இருக்கிறது. சொற்கள்-வாக்கியங்கள் எதுவுமில்லாமல், "ஹோ" என்று குரலை உயர்த்தி ஔசுப் பாடுவான். சில நிமிடங்கள் சங்கீதம் நிலைத்து நிற்கும். அது சிருங்காரப் பாடல்களிலும் கோஷ்டி கானங்களிலும் உள்ள இசையின் நாட்டுப்புற வடிவம் போல இருக்கும். ஒரு மாட்டுமந்தையின் பரிசுத்தப் பாடலென்றோ, மந்திரமென்றோ அதைச் சொல்லிவிடுவது பொருத்தமாயிருக்கும். ஔசுப் முழு மூச்சுடன் பாட்டில் ஈடுபடுகையில் கண்ணன் நோய், வலி, வேலை எல்லாவற்றையும் மறந்து சங்கீத ரசனையில் மூழ்கிவிடும்.

அந்தக் கழுத்துமணி- 'மண்ணில் புதைகிற கால்' -இவை தாளம் போடும்.

ஒருநாள் ஒரு ரசமான சம்பவம் நடந்தது. துண்டத்துக் கேளனின் பையன் பாச்சன் கலப்பையைப் பிடித்திருந்தான். வாதப்பிடிப்புடன் ஔசுப் வீட்டிலே தங்கிவிட்டான். அவனது காளைகள் இல்லாமல் கேளனின் வயலுழவு அன்றே முடிவு பெறாது. எனவே கண்ணனையும் வேறொரு மாட்டையும் அழைத்துக்கொண்டு போ என்று சொல்லிவிட்டான். இரண்டும் மற்ற மாடுகளுடன் வயலுக்குப் போயாயிற்று. ஓர் உழவு நடந்து முடிந்திருந்த வயல் அது. அடுத்த

உழவை ஆரம்பிக்கையில், பாச்சனுக்கும் ஏதோ பாட வேண்டும் என்ற அடக்கமுடியாத ஆவல் தோன்றிவிட்டது. ஒரு ராகத்தை ஆரம்பித்தான். சங்கீத லட்சணங்கள் ஏதுமறியாத இந்தப் பாச்சன் ஏன்தான் பாடவிரும்பினான்? அவன் விருப்பம் அது. காரணம் வேறு எதுவுமில்லை. அற்பமான அந்த இசை கிளம்பிய உடனேயே கண்ணன் வெறுப்புற்றது. கொம்புகளை இங்குமங்குமாகப் பலமாக அசைத்துத் தனது எதிர்ப்பைத் தெரிவித்தது. தன்னுடைய இசை மழையில் மூழ்கியிருந்த பாச்சனுக்கு இது தெரியாது.

சங்கீத விஷயத்தில் அது ஒரு சங்கடம். பாடுபவர்கள் தங்கள் இசையின் தராதரம் பற்றி ஒருபோதும் உணர்வதில்லை. கொஞ்சநேரம் கண்ணன் வெளிப்படையாகத் தனது வெறுப்பைக் காட்டியது. ஆனால் பாச்சன் விட்டபாடில்லை. பாச்சனின் நண்பர்களைப் பொறுத்தவரை உலகின் எந்த ராகமும் ஒரே ராகம்தான். அவர்களிடமிருந்து கண்ணன் எந்த ஆதரவையும் பெறமுடியாது. பாச்சன் சங்கீதத்தைக் கேவலப்படுத்தினான். அவனது வலக்காலில் கண்ணன் ஒரு சரியான உதை கொடுக்க, அந்தப் பாடகன் மூன்று நாட்கள் வீட்டிலேயே தங்கி ஒத்தடம் பெறவேண்டி வந்தது!



எந்தவித ஓய்வும் இல்லாமல் பன்னிரண்டு ஆண்டுகள் கண்ணன் ஔசுப்பிற்காக உழைத்தது. அவ்வாண்டுகளில் எல்லாம் இரு போகமும் அமோகம். மரஞ்செடி கொடிகள், குளிர், பனிக்காலங்களைக் கண்டன.

வீறாப்புடன் மக்களிடையே விறைத்து நின்ற பல மகுடங்களும் செங்கோல்களும் கீழே விழுந்து நொறுங்கின. நம்ப முடியாத மாற்றங்கள் நிகழ்ந்தன. சுரண்டல்-மனிதன் அடுத்தவனைச் சுரண்டக்கூடாது என்பதும் இதுபோன்ற மற்ற மகிழ்ச்சி தரும் சொற்றொடர்கள் பயன்படுத்தப்பட்டு ஒரு புதுவகை அரசு ஏற்பாடாயிற்று. ஆனால் ஔசுப் தனது அருமை மாடுகளை விற்கவேண்டிய கட்டாயத்தில் இருந்தான்.

அவன் ஏற்கெனவே தனக்கிருந்த சொத்தான நிலத்தை விருப்பமின்றி அடமானம் வைத்தாயிற்று. வேறு வழியில்லை. கல்யாண வயதைத் தாண்டி நிற்கும் பெண்ணைப் பெற்ற தந்தை அவன். மாப்பிள்ளை வீட்டார் ஏழைதான் என்றாலும் அவர்கள் கேட்ட மூவாயிர ரூபாய் வரதட்சிணைப் பணம் ஔசுப்பிற்குப் பெரிய விஷயம். வயலை ஆயிரத்தைந்நூறு ரூபாய்க்கு அடமானம் வைத்தான். கொடுப்பதற்கு அது போதும். ஆனால் கல்யாணச் செலவுக்குப் பணம் வேண்டியிருந்தது. வேறு வழியில்லை; தன்னுடைய மாடுகளை, அருமையான மாடுகளை விற்கத்தான் வேண்டும்.

இருபது ஆண்டுகளாகப் பகல் இரவு பாராமல் உழைத்திருக்கிறான் அந்த நல்ல விவசாயி. என்ன பலன்? தலை நரைத்தாயிற்று. பார்வை தடுமாறிற்று. உடல் சுருங்கிவிட்டது. வாத நோய் வேறு. கத்தி இறங்காது. அத்தனை அளவு வேலை செய்து உரம் பெற்றவை அவனது கைகள், என்ன செய்ய முடியும்? ஐயாயிரம் ஆண்டுக்காலமாகப் பயன்படுத்தும் உழவுக் கருவி, எரு எதுவும் போடப்படாது செழிப்பை இழந்து நிற்கும் பூமி. ரிக்வேத ஸ்லோகங்களைப் புகலடையும் நிலையை அடைந்தான் ஔசுப். நீரையும் மழையையும் மலையையும் காற்றையும் வேண்டினான். ஆதியும் அந்தமுமான அவனுடைய நிலத்தைப் பாதுகாக்கப் பிரார்த்தித்தான். அந்த ஆண்டுகளில் கிடைத்த சோர்வு இன்னும் விடவில்லை. ஆனால், எங்கும் வியாபாரம் பெருகி நின்றது. சுரண்டல் நிறைந்து நின்றது. அவனை ஊறு செய்யும் எல்லா விஷயங்களும் மலிந்தன.

கண்ணனை விற்ற நாளில் ஔசுப் வீட்டில் இல்லை. விற்பனைப் பத்திரத்தின் மூலம் ஒரு ரூபாய் பணம் அவனைச் சேரவேண்டும். அவன் அந்த இடத்தை விட்டுப் போய்விட்டான். விடும் கண்ணீரை எந்தப் பணமும் நிறுத்திவிடாது. கண்ணன் வீட்டைவிட்டுப் போக மனசு இல்லாமல் தலையை உயர்த்திச் சுற்றுமுற்றும் தன் எசமானர் இருக்கிறாரா என்று பார்த்துத் தன் உயிரைத் தேடிற்று. ஏதோ எங்கோ தவறிருக்கிறது என்பதுபோல ஓரிரு தடவை முனகிற்று. அந்தச் சமயத்தில் ஔசுப் தெற்குப்புறப் பலாமரத்தினடியில் கண்ணீரை மௌனமாகத் துடைத்துக் கொண்டிருந்தான்.

நேசம் என்பதற்குச் சொற்களோ, வேறு எந்த வெளிப்பாடோ தேவைப்படுவதில்லை. சோகமுணர்ந்த மனங்களின் நெருக்கம் தான் நேசம் என்றால், ஔசுப்பையும் கண்ணனையும் விட நெருக்கமுற்றவர் யாரும் இல்லை. அவர்கள் தங்கள் துன்பங்களை வெளியே சொல்வதில்லை. அது அந்த உள்ளங்களை மேலும் வேதனையடையச் செய்யும்.

சொந்த இடத்திலே அவமானப்பட்டும், உதவியற்றும் இருக்கும் ராணுவ வீரன், சிலசமயம் எதிரி நாட்டை நாடலாம். இந்தக் கிராமத்திலும் உதவியற்றுப் போய்ச்சீரழியும் சில விவசாயிகள் வயநாடு செல்லத் தீர்மானிக்கிறார்கள்.

"கண்காணாத இடம். தெரிந்தவரோ, உறவுக்காரரோ வந்துபோக முடியாது. அங்கே மலேரியா வாசம். எப்படி ஔசுப், இதெல்லாம் தெரிந்தும் உன்னை அங்கே போகவிட முடியும்?"

கிட்டு சார்-ஔசுப்பின் பக்கத்து வீட்டுக்காரர் கேட்டார். மலபார் சமாச்சாரங்கள் குறித்து ஔசுப் விசாரித்துக் கொண்டிருந்தான்.

"வேறு என்ன செய்யமுடியும் கிட்டு சார்? கொஞ்சம் நிலம் ஏதாவது தாருங்களேன். நிலத்தின் பணம் கிடைக்காவிட்டால் என் மனம் ஆடிப்போய்விடும்" என்றான் ஔசுப்.

வேதனையே வாழ்வாக ஒரு போக்குக் காட்டுகிற காற்றுப் போல ஔசுப்பின் வாழ்வு ஆகிவிட்டது. மலபார் பிரயாணம் ஒவ்வொரு நாளும் தள்ளிப் போடப்பட்டு வந்தது.

அது மட்டுமல்ல-இப்போது இருந்துவரும் ஏழு சென்ட் நிலத்தையும் ஒரு விலைக்கு விற்க முன்வந்தான். வேறொரு பிரச்சினை. இப்போது அவனது மகள் உண்டாகியிருக்கிறாள். முதல் பேரப்பிள்ளையின் பிஞ்சு முகத்தைப் பார்க்கவும் அவன் மனத்துக்குள் ஆவல்.



ஈஸ்டர் வந்தது. கிறிஸ்துவ நோன்பின் கடைசிப் பருவம். அவர்களுக்கு இது ஒரு மகிழ்ச்சியூட்டும் நாள். ஏழை வீட்டில் கூட ஒவ்வொரு சமையலறையிலிருந்தும் அருமையான இறைச்சி மணம் வீசும் நாள். அப்பங்கள் சுடப்படும் ஓசையும் மணமும் வேறு ஆவலைக் கிளப்பிவிடும். சூடான மாமிசத் துண்டங்கள் மசாலாக் கீரையோடு தேங்காய்த் துருவல் பணியாரங்கள் இரண்டு தட்டு இருந்துவிட்டால், ஆகா, இது சொர்க்கம்!

இதுமாதிரி நல்ல நாளில் இவையில்லாமல் இருக்கும் வீடு அரிது. ஆனால் ஔசுப் உட்கார்ந்து ஏதோ எண்ணிக்கொண்டிருந்தான். பக்கத்து வயலில் யாரோ உழுது கொண்டிருக்கிறார்கள். இன்பகரமான உழவு எழுப்பும் ஓசையை அவனால் கேட்க முடிந்தது. அது மனத்தைவாட்டி எடுத்தது. அது ஒரு விவசாயியின் மனம். ஓட்டடை படர்ந்து தொழுவத்தில் வைக்கப்பட்டுள்ள தனது கலப்பையைப் பார்க்கையில் பெருமூச்சுகள் எழுந்தன. இனி என்றாவது கண்ணனைப் போன்ற ஒரு ஜோடி மாடு கொண்டு நாலைந்து ஏக்கர் நிலத்தை இந்தக் கலப்பையால் உழுவானா? அம்மாதிரி ஓர் அதிர்ஷ்ட நாளைப் பார்க்கத்தான் முடியுமா? என்று அவன் ஏங்கினான்.

"எத்தனை நேரம்தான் இப்படி இருப்பது? என்ன வந்து விட்டது இப்போது - கோட்டயம் போக வேண்டாமா? பெண்ணைக் கொண்டுவிட வேண்டாமா? பெற்றவர் செய்ய வேண்டியதில்லையா?" பேச்சடங்கியிருந்த அவனை அவன் மனைவி மரியா இடித்துரைத்தாள்.

மகளை மாப்பிள்ளை வீட்டில் அடுத்த நாளே கொண்டு விட்டு வரவேண்டும். அவளுக்கு எடுத்துக் கொடுக்க வேண்டிய துணியை இன்னமும் கொடுக்கவில்லை. போகவேண்டாம் என்றில்லை. பணம் குறைகிறது. மாமியார் வீட்டில் எல்லாரும் குறை சொல்ல ஆரம்பித்தாயிற்று. இதெல்லாம் மகள் கத்ரிகுட்டி அம்மாவிடம் தான் சொல்லியிருந்தாள். எப்பாடுபட்டாவது அவளுக்குத் தரவேண்டிய மூன்று துண்டுத் துணியைத் தந்துவிட வேண்டும். மீதியைப் பார்த்துக்கொள்ளலாம். இதை மட்டும் செய்தாக வேண்டும். பணத்திற்காக மறுகிக்கொண்டிருக்கையில் நல்லவேளை மரியா கட்டி வந்த சீட்டு இருபது ரூபாய்க்கு வழி வகுத்தது. வயிற்றைக் கட்டி அவர்கள் சேர்த்த சீட்டு, மரியா அவனை இடித்துரைக்கும்போது அவள் தன் கையில் பணத்தை வைத்திருந்தாள்.

அவனால் முடிந்திருக்காது. ஆனால் அவள் சாதித்திருக்கிறாள். ஔசுப் கடைக்குப் போக எழுந்தான். "அப்பா துணி கொஞ்சம் கெட்டியாக இருக்குமாறு பார்த்துக்கொள்" என்று எச்சரிக்கை செய்தாள் கத்ரிகுட்டி.

"இன்னும் நிலவரி கட்டவில்லை. அதையும் கொடுத்து விடலாம்" என்றாள் மரியா.

"நீ வைத்திருப்பதைக் கொண்டு ஊரையே வாங்கிவிடலாமே".

"என்ன செய்யலாமோ தெரியாது. எனக்கும் ஒரு துணி வேண்டும். நான் கட்டிக் கொண்டிருப்பது ஒரே கிழிசல்!"

"அப்படியானால் நீயே போ. நான் சமையலறையில் இருக்கிறேன்".

"உன் தாடி இருக்கிறதே, அதையும் தந்துவிடு"என்றாள் மரியா. கத்ரிகுட்டி கையால் வாயை மூடி, சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

"ஆமாம். எனக்குத் தாடி உண்டு. சரிதான். தாடியெல்லாம் இரவல் வாங்க மாட்டேன்". ஔசுப் கத்தினான். தொடர்ந்து, "உனக்கு மட்டும் தாடியிருந்தால் இந்தப் பகுதியிலேயே ஒரு மனிதனைக்கூட விட்டிருக்கமாட்டாய்" என்றான்.

குடையை கைகளில் இடுக்கிக்கொண்டான்-ஒரு துண்டைத் தோளில் போட்டுக் கொஞ்சம் வெற்றிலைப் பாக்கை பையில் அடக்கிக்கொண்டு ஔசுப் புறப்பட்டான்.

ஈஸ்டர் கொண்டாட்ட ஆரவாரத்திற்கு கிளர்ச்சிக்கும் கோட்டயத்தில் குறைவில்லை.

கிறிஸ்தவர்களின் எந்தக் கடையும் திறந்திருக்கவில்லை. ஆனாலும் துணிக்கடைகள் இருந்தன. ஓரிரு கடைக்குச் சென்று துணி வகைகளையும் விலையையும் விசாரித்தான்.

''அடேயப்பா! என்ன விலை?'' துணியின் எக்கச்சக்கமான விலை பற்றிய ஒரு வயதான மனிதனின் அபிப்ராயம் இது.

"இன்னும் இரண்டு மூன்று கடைகளில் கேட்டுப் பார்க்கலாம். ஓரணா குறைவாக எங்கே கிடைக்கும். யாருக்கும் தெரியாது?"

முனிசிபல் கட்டடம் வரை நடந்துவிட்டான். அங்கே சுவர்ப்பக்கம் கூட்டம் கூட்டமாக மாடுகள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு மாட்டின் எலும்பையும் எண்ணிவிடலாம். அதெல்லாம் எலும்பும் தோலுந்தான். கிழட்டு மாடுகள் தங்கள் வாழ்நாளை முடித்துக்கொள்ள அங்கே வந்திருந்தன. சில, வால் அறுந்தவை. சில, கழுத்துப்பக்கம் வருடக்கணக்கான வண்டித்தழும்புகளுடன், சில குட்டையாக்கப்பட்ட கொம்புகளோடு, மனிதனின் இரக்க குணம் ஜீவராசிகளிடம் குறைந்து விட்டது என்பதைக் காட்டி நிற்கும் சில.



இப்படிப் பலவற்றை அந்த மாட்டிடையே பார்க்க முடியும். ஒவ்வொரு மாட்டின் மீதும் முனிசிபாலிட்டி முத்திரை பதிந்திருந்து. சாவு முத்திரை, இன்னும் மீதியிருக்கிற அந்த மாடுகளின் உடல் ஈஸ்டர் கொண்டாட்டத்தின் விருந்தாகப் போகிறது. அம்மாதிரி முத்திரை போடப்படாத மாட்டை இறைச்சிக்காகக் கொல்லும் கடைக்காரர் மீது முனிசிபாலிடி பொதுமக்களின் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டி இவ்விஷயத்தில் எந்தச் சலுகையும் காட்டவில்லை.

இந்தக் கட்டுப்பாடு மட்டும் இல்லையெனில் இந்தக் கடைக்காரர்கள் மனித ஆரோக்கியம் பற்றிக் கவலையே இல்லாமல் எந்த மோசமான மாட்டையும் கொல்வார்கள். இவ்விஷயத்தில் ஔசுப் முனிசிபாலிடிக்கு ஆதரவு தருபவன். நின்றுகொண்டிருந்த பல மாடுகளுக்குச் சாவு ஒரு நிம்மதியாக இருக்கும். ஏதோ ஒரு சுமையிலிருந்து கிடைக்கும் விடுதலை. முடிந்தவரை உழைத்துக் கொடுத்தாயிற்று. தள்ளாமையின் கொடுமைக்கும் இகழ்ச்சிக்கும் முன்னே இந்தச் சாவு எவ்வளவோ நிம்மதி.

ஔசுப் சிறிது நேரம் அங்கு நின்று பார்த்துக் கொண்டிருந்தான். அந்தக் காட்சி அவன் இளகிய நெஞ்சத்தைத் தொட்டது. மொத்தம் நாற்பது மாடுகள் இருக்கும். வேறு பல முத்திரை குத்தப்படுவதற்காக விவசாயிகள் கொண்டு வந்தவை. தன் நண்பர்கள் மரண தண்டனையடைந்து, கொண்டு செல்லப்படுவதைப்போலப் பார்த்துவிட்டு நகர்ந்தான்.

திடீரென அவன் துணுக்குற்றான். நம்பமுடியாமல் இருந்தது. எலும்பும் தோலுமாக இருந்த அந்த மிருகத்தைப் பார்த்ததும் தன் கண் ஏமாற்றுகிறதோ என்று எண்ணினான். அவன் இதயம் அங்கே நொறுங்கியது. எல்லாமே இருண்டது. அவனுக்கு உதறல் எடுத்தது. ஆமாம். அது கண்ணன்.

கண்ணா என்று உள்ளமெல்லாம் துடிக்கக்கூவினான் அவன். சுகத்தையும் நம்பிக்கையையும் அந்த மிருகத்திற்கு அளித்திருந்த குரல் அது. செயலற்றும் போயிற்று. அந்த அழகான கட்டடத்தின் முன்னர் கண்ணன் தலையைத் தாழ்த்தி நின்று கொண்டிருந்தது. ஒரு தடவை ஜீவனுள்ள அந்தக் குரல் அதன் காதுகளில் எதிரொலித்தது. தலையை உயர்த்திச் சுற்றுமுற்றும் பார்த்தது.

"என்னைத் தெரியலையா? மகனே? இந்த நிலையிலா உன்னைப் பார்க்க வேண்டும்!".

அவன் நெஞ்சோடு அந்த மாட்டைக் கட்டிக்கொண்டு ஆதரவாக அதன் நெற்றியைத் தடவிக் கொடுத்தான். அந்தக் கைகளின் ஸ்பரிசம் பட்டு அது வாலை உயர்த்திற்று. உடனே அழுதது. வாயால் அல்ல, நெஞ்சால், ஔசுப் கண்ணன் உடம்பு மீது முத்திரையிடப்பட்டுள்ளதா என்று பார்த்தான். ஆமாம். முன்னங்காலில் தெளிவாகத் தெரிந்தது. அதை அழித்துவிட முயன்றான். ஆனால் முனிசிபாலிட்டியின் கறுப்பு முத்திரை அவ்வளவு எளிதில் அழித்துவிடக்கூடியதல்ல.

வயிற்றின் கீழ் கண்ணனுக்கு நீர்வடியும் புண் இருந்தது. ஈக்கள் அதை அரித்துக் கொண்டிருந்தன.

''இந்த மாடு உன்னிடம் இருந்ததா?'' கசாப்புக்கடைக்காரனில் ஒருவன் ஔசுப்பிடம் கேட்டான்.

"நீயா இதை இங்கே கொண்டுவந்தது?" ஔசுப் அவனிடம் கேட்டுப்பார்த்தான்.

"ஆமாம்" என்றான் கசாப்புக்காரன்.

கண்ணன் தன் அருமையான எஜமானரின் வியர்வை படர்ந்த உடம்பை நாவால் நக்க ஆரம்பித்துவிட்டது. அந்த வியர்வையைத் துடைக்க தனது வாழ்வின் பெரும்பகுதியைத் தந்திருக்கிறது. தனது வாழ்வின் கடைசிப் பகுதியிலும்கூட அது அவ்வியர்வையை ஏற்றுக்கொள்ளும். தனது ருசியாகவும்

வாழ்வின் பகுதியாகவும் உள்ளதுமான வியர்வை அது. அந்த விவசாயியின் சூடான கண்ணீர் கண்ணனின் முகத்தில் விழ்ந்தது.

"போகலாம், நேரமாகி விட்டது. பகலுக்குள் இறைச்சியைக் கடைக்குக் கொடுக்க வேண்டும்" என்று கடைக்காரன் மற்ற இருவரிடமும் சொல்லிக்கொண்டிருந்தான். ஒரு வியாபாரி இரண்டு மூன்று மாடுகளுடன் புறப்பட்டு, கண்ணனை அழைத்துச் செல்லத் தயாரானார். ஆமாம், இன்னும் ஒன்றிரண்டு மணி நேரத்தில் கண்ணன் ஈஸ்டர் கொண்டாட்டத்தில் விருந்தாகி விடும். இருட்டிவிட்டது.

"இந்த இடத்தை விளக்கை ஏற்றுவதற்கு முன்பு பெருக்கி விடு" என்று மகளிடம் சொன்னாள் மரியா. ஔசுப்பை எதிர்பார்த்துக்கொண்டே.

"இன்னும் ஏன் அப்பா வரவில்லை?" கத்ரிகுட்டி கேட்டாள்.



"விஷயமாகத் தானே போயிருக்கார். வரட்டும்" என்று மரியா சமாதானம் சொன்னாள்.

"கோட்டயத்திற்குப் போயிருந்தால் இதற்குள் வந்திருக்க வேண்டுமே?" துணிக்காகக் காத்திருந்த கத்ரி பொறுமையிழந்திருந்தாள். சாலையையே பார்த்துக்கொண்டிருந்தாள். மரியாவும் அங்கேதான் பார்த்துக் கொண்டிருந்தாள். ஔசுப் தென்படவில்லை. அவர்கள் விளக்கை ஏற்றினார்கள்.

தொலைவில் வெள்ளையாக உருவமொன்றைப் பார்த்தாள். "இதோ! அப்பா. அவர்தான், "கத்ரி குட்டி மகிழ்ச்சியோடு கூறினாள். முதல் முதலில் தானே கண்டதால் அவளுக்குச் சந்தோஷம். அம்மாவும் மகளும் பார்த்துக்கொண்டு அங்கே நின்றார்கள். ஒரே நினைவோடு.

"ஔசுப் தானே?" பக்கத்து வீட்டு மாத்யூ கேட்டார். தையல்காரர் அவர். மூன்று ரவிக்கைகள் அன்றிரவு தைத்தாக வேண்டும். கத்ரி மறுநாள் காலை புறப்பட வேண்டும். தயாராக இருக்கும்படி மாத்யூஸைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். எல்லாவற்றையும் திட்டமிட்டபடி முடிக்க.

துணிகளைப் பார்க்கத்துடித்த அந்த இளங்கண்களின் முன்பு ஔசுப் கண்ணனோடு வந்து சேர்ந்தான்.

''ஐயோ! இது கண்ணன்'' என்று கத்ரி ஆச்சரியத்தோடு கூறினாள்.

"துணி எங்கே? இதுதானா நீ வாங்கி வந்தது?" என்றாள் மரியா. கண்ணன் பழைய தொழுவத்திற்குள் நுழைந்து சந்தோஷமாக தன்னைச் சாய்த்துக்கொண்டது

அங்கே அவர்கள் ஆயிரம் கேள்விகளால் கூச்சலிட்டு ஔசுப்பைத் துளைத்துக்கொண்டிருந்தார்கள்.

ஔசுப் மௌனமாக உட்கார்ந்திருந்தான். கைகளால் முகத்தைத் தாங்கியவாறு, மரியா நம்பிக்கையிழந்து ஆட்டங்கண்டாள். கத்ரி துயரம் பொறுக்காமல் அழுதாள். ஔசுப் ஒரு வார்த்தையும் பேசவில்லை. அவனது உடம்பு வியர்வையில் நனைந்திருந்தது.

''அப்பா, நீ இப்படிச் செய்வாயென்று நினைக்கவேயில்லை" கண்ணீருடன் கத்ரி சொன்னாள்.

கம்மிய குரலில் அப்பா சொன்னார் "மகளே, நீ எனக்கு எப்படியோ அப்படித்தான் கண்ணனும். அந்தக் கசாப்புக்காரன்..."கண்ணீரைத் துண்டால் துடைத்தான். அதை முழுவதுமாகச் சொல்ல முடியவில்லை. அந்த இரவு ஒரு கொடுமையான இரவு. ஒரு பொட்டுத் தூக்கமில்லாமல் அந்த இரவைக் கழித்தார்கள்.

விடிந்தது. ஔசுப் ஒரு களிம்பு தயாரித்துக் கண்ணனின் புண்ணிற்குப் போடத் தொழுவதற்குச் சென்றான். அது ஓர் அருமையான களிம்பு. மாடுகளின் நோய்க்குச் சில அரிய குறிப்பிட்ட நிவாரணத்தை ஔசுப் அறிவான். விடிவதற்குள் அப்படி ஒன்றைக் கலந்து, மருந்துடன் தொழுவத்திற்குள் நுழைந்தான்.

"காலை நீட்டு....தலையை உயர்த்து..."

கண்ணன் படுத்திருந்தது.

'கண்ணன்' என்று கூவினான். ஔசுப்பின் நெஞ்சு உருகிற்று. கண்ணன் இனிமேல் விழிக்கமாட்டான். ஔசுப்பை, அவன் குடும்பம் குதறியடிப்பதைக்கண்டு பொறுக்காது இந்த உலகத்தை விட்டே போய் விட்டது போலும்.

கண்ணனின் பிரேதம், ஔசுப்பின் உடைந்த இதயம், இவற்றுக்கு உயரே ஒட்டடையோடிய கலப்பை. அதன் மீது சோகமாகச் சத்தமிட்டபடி ஒரு பல்லி.

- தற்கால இந்தியச் சிறுகதைகள் தொகுப்பிலிருந்து, பொன்குன்னம் எழுதிய மலையாளச்சிறுகதையின் தமிழாக்கம். இது ஒரு சாகித்ய அக்காதெமி வெளியீடு.

# கவிதையும் கணிதமும்

அறிவின் பிறப்பிடம் மூளை.

இரத்தத்தின் பிறப்பிடம் இதயம்.

காரணங்களைக் கேட்பது மூளை.

கவிதைகளைத் தருவது இதயம்.

மூளையின் மொழி வேறு; இதயத்தின் மொழி வேறு.

இரண்டும் ஒரேநிலையில் இருப்பதைவிட எதிர் எதிர் நிலையில் இருப்பதே அதிகம்.

எனக்கு ஒரு நிகழ்ச்சி நினைவு வருகிறது. ப்ரா ஈன்ஸ்டின் என்பவர் ஒரு சிறந்த கவிஞர். இவர் உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி ஆல்பர்ட் ஈன்ஸ்டின் அவர்களின் மனைவி ஆவார்.



மனைவியோ கவிதை மேதை. கணவனோ கணித மேதை. ஒன்றும் ஒன்றும் இரண்டு என்பது கணிதம். ஒன்றும் ஒன்றும் ஒன்றுதான் என்பது கவிதை. இரண்டும் மாறுபட்ட மொழிகளைப் பேசுவது.

ஒருமுறை ப்ரா ஈன்ஸ்டின் ஒரு காதற் கவிதை எழுதினார். அந்தக் கவிதையைக் கணவனிடம் கூறி அவரின் பாராட்டைப் பெற விரும்பினார். இருக்காதா பின்னே? உலகப் புகழ்பெற்ற ஒரு மாபெரும் மேதையின் வாழ்த்தைப் பெற யார்தான் விரும்பமாட்டார்கள்? கவிதையைக் கணவனிடம் படித்துக் காட்டத் துவங்கினார். ஆனால் கணவனின் முகத்தில் எந்தவித உணர்ச்சிகளையும் கான முடியவில்லை. கணவனின் முகம் ஒரு கற்சிலை போல் காணப்பட்டது.

அது ஓர் அழகான காதற்கவிதை. காதலியின் முகத்தை நிலவுக்கு ஒப்பிட்டுக் காதலன் கரைந்துருகும் ஒரு வரியைப் படித்தபொழுது, ஆல்பர்ட் ஈன்ஸ்டின் பொறுமை இழந்து கத்தத் தொடங்கினார்.

"போதும் நிறுத்து. கவிதையாம் கவிதை. இது மிகவும் அபத்தம். நிலாவைப் பற்றி உனக்கு என்ன தெரியும்? நிலாவின் ஆழம், அகலம், அதன் எடை உனக்குத் தெரியுமா! அந்த நிலாவை ஒரு பெண்ணின் தலைமேல் வைத்தால், அந்தப் பெண் நசுங்கிக் காணாமல் போய் விடுவாள்! நிலா அழகாக இருக்கும் என்று யார் உனக்குக் கூறியது? அது ஒரு உயிரற்ற கல்மலை; பசுமையே இல்லாதது; ஈரமில்லாதது; பூவோ, மரங்களோ பறவையோ இல்லாதது; நிலா அழகான ஒன்று இல்லை; அழகின் இலக்கணமே உனக்குத் தெரியாது."

- என்று கோபாவேசத்துடன் கத்திக் குதித்தார் ஆல்பர்ட் ஈன்ஸ்டின்.

ப்ரா ஈன்ஸ்டின் பிரம்மை பிடித்தது போல் அமர்ந்து விட்டார். இவ்வளவு பெரிய விஞ்ஞானி இவ்வளவு மோசமாகவா ஒரு கவிதையை அறிந்து கொள்வார் என்று ஆச்சர்யப்பட்டார்! ஆனால் உண்மை அதுதான். ஆல்பர்ட் ஈன்ஸ்டின், மூளையின் மூலம் கவிதையைப் பார்க்கிறார். மூளை கவிதையின் மொழியை அறியாது.

அந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் ப்ராஈன்ஸ்டின் தனது நினைவுக் குறிப்பில் கீழ்க்கண்டவாறு எழுதி வைத்துள்ளார் :


*"அந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் நான் என் கணவனிடம் கவிதை பற்றிப் பேசியதே கிடையாது. அவரிடம் கவிதை குறித்துப் பேசுவதைவிட ஒரு கற்பாறையின் முன் கவிதையைப் பற்றிப் பேசலாம். ஒருவேளை அந்த கற்பாறை கூட என் கவிதையைக் கேட்டுக் கண் சிமிட்டலாம்; எது எவ்வாறாயினும் என் கணவனை விட அந்தக் கற்பாறையே கவிதையைக் கேட்டுக் களிக்கும்".*

- பகவான் புத்தர் கூறுவார், 'ஆம். மூளையும் இதயமும் எப்போதும் முரண்பட்டே இருக்கும்'!


- எஸ்.பி.என். இராமலிங்கம் எழுதிய
'ஓஷோவின் கதைகளும்,
கருத்து விதைகளும்'
நூலிலிருந்து.

# இளம் கவிஞனே!

மண்ணையும், சூரியனையும், உயிர்களையும் நேசி.
பணத்தை இலட்சியம் செய்யாதே!
கேட்கிறவனுக்கெல்லாம் கொடு.
அறிவில்லாதவர்கள் சார்பாகவும்,
பித்தர்கள் சார்பாகவும் போராடு;
உன் வருமானத்தையும்
உழைக்கும் சக்தியையும்
பிறருக்காகச் செலவிடு;
யதேச்சாதிகாரிகளை வெறு;
மக்களிடம் பொறுமையுடனும்,
சகிப்புத் தன்மையுடனும்
நடந்துகொள்;
தெரிந்ததோ, தெரியாததோ
எதற்கும் அடிபணியாதே;
தனிமனிதனோ மனிதக் கூட்டமோ
யாருக்கும் தலை வணங்காதே!
படிக்காத மேதைகளிடையிலும்,
இளைஞர்களோடும்,
குழந்தைகளின்
தாய்களுடனும் தாராளமாகப் பழகு;
உன் வாழ்க்கையின் ஒவ்வோர் ஆண்டிலும்,
ஒவ்வொரு பருவத்திலும்
இந்தக் கவிதை இதழ்களைத்
திறந்த வெளியில் படி!
பள்ளியிலோ, கோவிலிலோ, புத்தகத்திலோ
உனக்குச் சொல்லப்பட்டவைகளை எல்லாம்
மறுபரிசீலனை செய்!
உன் ஆன்மாவை
எதெல்லாம் அகௌரவப்படுத்துகிறதோ
அதையெல்லாம் தள்ளிவிடு!
இப்படியெல்லாம் செய்தால்,
உன் கதைகூட மாபெரும் கவிதை ஆகும்.
உன் சொற்கள் மட்டுமல்லாமல் உனது
உதடு, முகம் கண்ணிமைகளின் இடைவெளி
ஆகியவற்றிலுள்ள ஒவ்வொரு கோடும்,
உடன் உடலில் ஒவ்வொரு அசைவும்
ஒவ்வொரு வகை இனிப்பூட்டும்
சரளமான செறிவோடு கவி சொல்லும்!



(வால்ட் விட்மனின்: 'புல் இதழ்கள்'
கவிதைத் தொகுப்பின் முன்னுரை)
பேராசிரியர் ந.க. மங்கள முருகேசன்
எழுதி - பகவதி பதிப்பகம்
மனை என்.77, மடிப்பாக்கம், சென்னை 91
வெளியிட்ட 'துணுக்கு மலர்கள்' புத்தகத்திலிருந்து.



# THE WINDSOR CLUB

**14, RAJAJI ROAD, SALEM - 7. PHONE : (0427) 415060/417346**

*Facilities:*

- ★ Swimming Pool
- ★ Health Club (Steem Sauna)
- ★ Gymnasium
- ★ Skating Rink
- ★ Table Tennis
- ★ Video Games
- ★ Billiards Room

  *(Exclusively for members only)*

*Offers :*

- ★ Multi Cuisine Restaurant
- ★ Royal Room & Suites
- ★ Sweet Waters - Bar
- ★ Antartica - Ice Cream Parlour
- ★ Dosa Daba

  *(Veg. Kaiyenthi Bhavan Style)*
- ★ Conference Hall
- ★ Out Door Catering Unit

*Also the Windsor Fitness Centre (Gym) for members & Public*

# நோய் தீர்க்கும் கடுக்காய் ஒரு காயகற்ப மூலிகை

டாக்டர் பி. பாலசுப்ரமணியம்

கடுக்காயும்-தாய் போல் பிள்ளையை வளர்க்கும் மூலிகைதான்! இதற்கு என்றே தனித்தன்மை சில உண்டு.

*"கடுக்காயும் தாயும் கருத்தி லொன்றாகில்*
*கடுக்காய் தாக்கதிகம் தான் நீ-கடுக்காய்நோய்*
*ஒட்டி உடல்தேற்றும் உற்றஅன்னையோ சுவைகள்*
*ஊட்டி உடல் தேற்றும் உவந்து*

- என்று ஒரு சித்தர் பாடல் பாடி உள்ளார்.

கடுக்காய் மரம் பொதுவாகவே நாடு நகரமாகிய இடங்களில் வளராது. அடர்த்தியான பெரிய காடுகளில் தான் வானளாவிய மரங்களாக வளரும். இந்தக் கடுக்காய் மரங்களை அறுத்து - வீடுகட்ட வாசக்கால், சன்னல், பலகைகளாகவும் செய்து பயன்படுத்துவது நமது நாட்டின் மரபு (Terminalia Chebula).

ஆனால் கடுக்காய் ஒரு சிறந்த மருந்தும் ஆகும் எனக் கூறலாம். சித்த மருத்துவர்களும் மற்ற வைத்திய முறை மருத்துவர்களும் கடுக்காயை மருந்தாக உபயோகப்படுத்துகிறார்கள். கடுக்காய் மரம் இந்தியாவில் பல பாகங்களில் வளர்கிறது. விந்திய மலைக்குத் தெற்கே வளரும் மரங்கள் மிகவும் உயர்ந்து நன்கு பலன தருகிறது. வடக்கேயும் வங்காளம், இலங்கை போன்ற இடங்களிலும் நடுத்தரமான வகையினதாக இது வளர்கிறது.

கடுக்காய் இனத்தில் எட்டுவகை உண்டு. அவைகள் விசயன், அரோகினி, பிரிதிவி, அமிர்தம், சிவந்தி, திருவிருத்தி, அபயன் என்பவையாகும். ஒவ்வொன்றிற்கும் தனித்தனி குண நலன்கள் உண்டு எனக்கூறி உள்ளார்கள். கடுக்காய்ப்பிஞ்சு மலத்தைக் கட்டுப்படுத்தும். பெரிய கடுக்காய்த்தோல் மலத்தை இளக வைக்கும் தன்மையைக் கொண்டது.

## பொதுக்குணங்கள்

கடுக்காயை மருத்துவ ரீதியில் பயன்படுத்தும் பொழுது அது இதயக்கோளாறு, அதிமூத்திரம், குமட்டல் (அரோசிகம்), உதரவாதம், உதட்டுரோகங்கள், உணர்ச்சியின்மை, நாள்பட்ட பேதி, கண்நோய்கள், காமாலை வகைகள், காசம், குன்மம் கை கால் எரிவு, குட்டம், கோழை, சித்தப்பிரமை, சிரரோகங்கள், சோணித ரோகம், பாண்டு, மலச்சிக்கல், நாவறட்சி, இரைப்பைக் கோளாறுகள், மேகநோய், மகோதரம், இருமல், இரணம் முதலியன குணமாகும்.

பெற்ற தாய்க்குப் பாலூட்டிச் சீராட்டி, ஈ எறும்பு மொய்க்காமல், கண் விழித்து, பாடுபட்டு வளர்க்கத்தான் தெரியும். தவிர மேற்கண்ட வியாதிகளை வர விடாமல் தடுக்கும் சக்தியைப் பெற நமக்கு கடுக்காயின் மூலம் தனிச்சக்தி கிடைக்கிறது. எனவே தான் கடுக்காயைப் "பெற்ற தாயினும் பெரிய தாயார்" என்று நம் முன்னோர்கள் கூறியுள்ளார்கள்.

## கடுக்காயின் நிறங்கள் - குணங்கள்

பால் கடுக்காய் - வெண்மை நிறமுடைய கடுக்காய் உடல் பலமும் அழகும் தரும். இதன்மூலம் வாத நோய் தீரும்.

வரிக்கடுக்காய் - காயின்மேல் வரிவரியாக மேடுகள் அமையப்பெற்றிருக்கும். மூன்று தோடங்களையும் இது போக்கும். (வாதம், பித்தம், கபம் தீரும்).

செங்கடுக்காய் - சிகப்பு நிறமுள்ள கடுக்காயால் உடல் பொன்னிறமாக ஒளிபெறும் மூன்று தோடங்கள் நீக்கும். புத்தி தெளிவு உண்டாகும். நரம்புகளில் காணும் நோய்கள் நீங்கும். சுவாசம், காசம், இருமல் நீக்கும். மலத்தை இளக வைக்கும்.

கருங்கடுக்காய் - இது காயகற்பமாகப் பயன்படும் எனவும் கூறியுள்ளனர். மலைப்பிரதேசங்களில் வளரும். மலசுத்தி உண்டாக்கும், மலச்சிக்கல் நீங்கும் , பித்த கபத்தை நீக்கும், உடலுக்குச் சக்தியைத்தரும், தோல் சுருக்கத்தை நீக்கும் குணம உண்டு. புண்களை ஆற்றும்.

## திரிபலா

கடுக்காய்த்தோல், தான்றிக்காய், நெல்லிவற்றல் என மூன்றையும் திரிபலா என்பது குறிக்கும். கடுக்காய் லேகியம் செய்து மலச்சிக்கல், வாயு, சூலை குன்மம், மூலநோய், ஆசணக்கடுப்பு, அசீரண வாய்வு தீர்க்கலாம். ஒரு சித்த வைத்தியர் அனுபவத்தின் மேற்பார்வையில் மருந்து செய்து சாப்பிடவேண்டும். நீங்களாகத் தனியே செய்யக்கூடாது, அனுபவம் முக்கியமானது. சிறந்ததும் ஆகும்.

## சிறப்புக் குணங்கள்

1. வாதம் முதல் பித்தம், கபக் குற்றங்களை முற்றவிடாமல் தடுக்கும் சக்தி உடையது கடுக்காய்.

2. அவரவர் உடல்வாகுக்கு ஏற்றபடி தந்தால் குடலில் உள்ள இயற்கைச் சக்தியைத் தூண்டுவதும் மலத்தை வெளிப்படுத்துவதும் ஆகிய செய்கை உண்டு.

3. கிழத்தன்மையைத் தடுத்து நோய்களை நீக்கும் தன்மையும் இக்காய்க்கு உண்டு.

## கடுக்காய் இனிப்பு ஊறல் (மருந்து)

நல்ல கடுக்காய்களைத் தேர்ந்தெடுத்து, கொட்டையை நீக்கி கற்கண்டு தேன் சேர்த்து ஊறவைக்கவும். ரவியில் வைத்து பக்குவம் ஆனதும் சாப்பிடவேண்டும். 20 நாள், 40 நாள் சாப்பிடலாம். அத்துடன் பிணிகள் நீங்கும்.

**மண்ணிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வது, ஒரு மரத்திற்குச் சுதந்திரம் ஆகாது.**

*-தாகூர்*



# எங்கள் ஊர் பிரச்சினை

**பிரச்சினை:**

**எ**ங்கள் ஊரில் சாராயக் கடைகளும், கள்ளுக்கடைகளும் பெருகி ஆண்கள் தினம் குடித்து உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்வதோடு, மனைவி, குழந்தைகளை அடித்துத் துன்புறுத்துகிறார்கள். சிலர் குடிக்கப் பணம் இல்லாமல் வீடுகளில் திருடுகிறார்கள். பெண்களுக்கு வாழ விருப்பம் இல்லாமல் தற்கொலை செய்து கொள்ளும் முடிவில் உள்ளோம். ஆகவே தயவுசெய்து எங்கள் ஊரில் சாராய, கள்ளுக்கடைகளை ஒழிக்க ஆவன செய்யுமாறு கரம்கூப்பி மண்டியிட்டு கேட்டுக்கொள்கிறோம்.

புத்திரன்கோட்டை கிராமப் பெண்கள்,
குழந்தைகள்.


**தீர்வு:**

**இக்கிராமத்தில் ஏற்கெனவே கள்ளச்சாராயம், கள் விற்பனை செய்த நபர்கள் மீது நடவடிக்கை எடுத்து பல வழக்குகள் பதிவுச் செய்யப்பட்டு, தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் விசாரணை செய்ய தற்போது**



**கிராமக் கட்டுப்பாடு இளைஞர் அணி சார்பாக கள், சாராயம் விற்க கூடாது எனக் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேற்படி கிராமத்தில் கள்ளச்சாராயம், கள் விற்பனை செய்யாமலிருக்க, தொடர்ந்து கண்காணித்து வரப்படுகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.**

கிறிஸ்டோபர் நெல்சன், இ.ஆ.ப.,
காவல் கண்காணிப்பாளர்
காஞ்சிபுரம் மாவட்டம்.



**பிரச்சினை:**

***1992-1993*** ஆம் ஆண்டிற்கான டேனிடா திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையம் பாதி கட்டப்பட்ட நிலையிலேயே சுகாதார நிலைய மருத்துவருக்கும் கிராமக் கமிட்டி (கட்டிடத் தலைவருக்கும்) ஏற்பட்ட பிரச்சினையால் பாதியிலேயே நிற்கின்றது. அதை முடித்து, பொதுமக்களுக்கு உதவும்படி கேட்டுக்கொள்கிறோம்.

கிராமப் பொதுமக்கள்
பழஞ்சநல்லூர்
காட்டுமன்னார் கோயில்.

**தீர்வு:**

**பழஞ்சநல்லூர் கிராமத்தில் கட்டுமானப்பணி நடைபெற்று வரும் கட்டிடம் துணைச் சுகாதார நிலையம் என்பதையும், அது ஆரம்பச் சுகாதார நிலையம் அல்ல என்பதையும் மேற்படி துணைச் சுகாதார நிலையம் கட்டிட கட்டுமானப்பணி தற்போது நடைபெற்று வருகிறது என்பதையும் மேற்படி துணைச் சுகாதார நிலையம் கட்டிடக் கட்டுமான ப்பணிகள் விரைவில் முடிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

டாக்டர் ஆர்.டி.பொற்கை பாண்டியன்,
எம்.பி.பி.எஸ்., டி.பி.எச்.,
துணை இயக்குநர்,
சுகாதாரப்பணிகள், கடலூர்.



**பிரச்சினை:**

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம் தரகம்பட்டி என்பது எங்கள் ஊர். தரகம்பட்டி, கடலூர் ஊராட்சி ஒன்றியத்தின் தலைமை இடம். எங்கள் ஊரில் மக்கள் தொகை 5000க்கும் அதிகம். கரூர், திருச்சி, திண்டுக்கல், குளித்தலை, மணப்பாறை ஆகிய ஊர்களுக்கு இங்கிருந்து வியாபாரம் சம்பந்தமாக ஆயிரக்கணக்கான மக்கள் மேற்கண்ட ஊர்களுக்குத் தினம்தோறும் சென்று வருகின்றனர். பஸ் வசதி போதிய வசதி இல்லாததால் பஸ்களில் கூட்டம் அலைமோதுகிறது. திண்டுக்கல் தவிர மற்ற ஊர்களுக்கு ஓரளவு மட்டும் பஸ் வசதி உள்ளது. திண்டுக்கல்லுக்கு அறவே கிடையாது. திண்டுக்கல் செல்ல மக்கள் 20 கி.மீ. தொலைவில் உள்ள பாளையம் மற்றும் வையம்பட்டி ஆகிய ஊர்களுக்குச் சென்று தான் பஸ் மாறிச் செல்கிறார்கள். மேலும் 8 கி.மீ.தொலைவில் உள்ள பாலவிடுதி கிராமத்திற்கு திண்டுக்கல்லில் இருந்து ஒரு ஆர்.எம்.டி.சி. பஸ் வருகிறது. அந்தப் பேருந்து அங்கு 30 நிமிடம் வரை நின்று செல்கிறது. அந்தப் பேருந்தை தரகம்பட்டி வரைக்கும் திருப்பி விடவும், மேலும் வேடசந்தூர்குஜிலியம்பாறை வழியாகக் கூடுதல் பேருந்துகளைத் தரகம்பட்டி வரை இயக்குவதற்கு, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?.

அ.காளிதாஸ்
தரகம்பட்டி அஞ்சல்,
கரூர் 621311.

**தீர்வு:**

**மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பாளையம் மற்றும் குஜிலியம்பாறை பகுதிகளுக்குத் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்திலிருந்து மணப்பாறை - பாளையம் 4 நடைகள், மணப்பாறை-குஜிலியம்பாறை 2 நடைகளும் இயக்கப்பட்டு வருகிறது.**

**தரகம்பட்டியை மையமாகக்கொண்டு நகரப் பேருந்துகள் இயக்கம் செய்ய, தரகம்பட்டி, அரசால் அங்கீகரிக்கப்படாத ஊர் ஆகும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.**

மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம்,
கும்பகோணம்.

**பிரச்சினை:**

இப்பவும் தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறையின் மூலம் மேட்டூர் அணை அரசு வேளாண்மைப்பள்ளி உள்பட 12 பள்ளிகள் இயங்கின. இங்கு ஒருவருடம் பயிற்சி முடித்தவர்களுக்கு வேளாண்மைத்துறையில் வயல்விளக்க அலுவலர்கள் பணி வழங்கினார்கள். பின்னர் 1992-93ஆம் ஆண்டு



அனைத்துப்பள்ளிகளையும் மூடிவிட்டார்கள். தற்போது பயிற்சி முடித்தவர்கள் தமிழகம் முழுவதும் 2400 மாணவர்கள் இருக்கிறோம். தற்போது நாங்கள் வறுமையில் இருக்கிறோம். தயவுசெய்து வேளாண்மைத் துறையில் வயல்விளக்க அலுவலர் பணி அல்லது தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் ''கரும்பு உதவியாளர்'' பணி வழங்கி எங்களது துயர்துடைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மு.ஜெயரவி
பள்ளிப்பட்டி

**தீர்வு:**

அரசு தனது ஆணை 457 வேளாண்மை, நாள் 28.7.93ல் (வே.நி5) தமிழ்நாடு வேளாண்மை விரிவாக்க சார்புப் பணியின் அடிப்படை பணியாளர்கள் என உதவி வேளாண்மை அலுவலர் மட்டுமே நியமிக்க முடிவு எடுத்து, தற்போது உள்ள அனைத்து வயல்விளக்க அலுவலர்களையும் படிப்படியாக உதவி வேளாண்மை அலுவலராகத் தரம் உயர்த்தி அனைத்து வயல்விளக்க அலுவலர்களையும் உதவி வேளாண்மை அலுவலர்களாக நியமித்த பின்பு வயல் விளக்க அலுவலர் பணியிடங்களை நீக்கம் (ABOLISH) செய்யவும்

ஆணை பிறப்பித்து வயல் விளக்க அலுவலர் பணியிடங்களைப் புதுநியமனம் மூலம் நிரப்ப அரசு தடை விதித்துள்ளது.

எனவே தற்போது செயல்பாட்டில் உள்ள விதிகளின்படி வயல் விளக்க அலுவலர் பணிக்கு (வேளாண்மை கல்வி பயின்றவர்களை) புதிய நியமனங்கள் செய்ய விதிகளில் வழிவகை இல்லை, என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

பி.ஏ.இராமையா, இ.ஆ.ப.,
வேளாண்மை இயக்குநர்
சேப்பாக்கம், சென்னை.

**பிரச்சினை:**

எங்கள் ஊர் தருமபுரி மாவட்டம், தேன்கனிக்கொட்டை வட்டம் உரிகம் கிராமம் ஆகும். எங்கள் பஞ்சாயத்திற்குத் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம், தேன்கனிக்கொட்டை - உரிகம் பேருந்து எண்.டி.என்.29-0526 ஒன்று மட்டும் ஓடுகிறது. இந்த ஒரு பேருந்துக்குக் கோட்டையூர், மஞ்சு கொண்டபள்ளி, உரிகம் ஆகிய பஞ்சாயத்து மக்கள் பயணம் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. மூன்று பஞ்சாயத்திற்கு ஒரு பேருந்து என்ற நிலைமை எங்கள் பகுதியில் இன்னமும் உள்ளது.

மேலும் இந்தப் பேருந்து பழுதடைந்துவிட்டால், அது சரிசெய்து வரும் வரையும் மற்றொரு பேருந்து விடுவதில்லை. சுமார் இரண்டு, மூன்று நாட்கள் எங்கள் பஞ்சாயத்திற்குப் பேருந்து வசதி இருக்காது. இதுபோன்ற சம்பவம் அடிக்கடி நிகழ்வதுண்டு. இதனால் மருத்துவ சிகிச்சை பெறுவதற்கும், மேல்நிலைப்பள்ளி மாணவர்களின் படிப்புக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே எங்கள் ஊர் பேருந்து பிரச்சினையைத் தீர்த்து வைக்கவும், கூடுதல் பேருந்து விட்டு எங்கள் குறையினைத் தீர்த்து வைக்கும்படியும் மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எம்.வெங்கடாசலபதி செட்டியார்
தி.மு.க. கிளைச் செயலாளர்
ஊராட்சி மன்றத் தலைவர்
உரிகம்.

**தீர்வு:**

**தேன்கனிக்கோட்டை-உரிகம் தட பேருந்து உரிகத்திற்கு நாளொன்றுக்கு 8 நடைகள் இயங்கி வருகின்றது. இத்தட பேருந்து மட்டுமன்றி இக்கழகத்தைச் சார்ந்த மற்றொரு பேருந்து தருமபுரியிலிருந்து தேன்கனிக்கோட்டை வழியாக உரிகம் வரை நாளொன்றுக்கு 4 நடைகள் இயங்கி வருகின்றது. எனவே உரிகம் கிராமத்திற்கு இக்கழகம் இரு பேருந்துகள் மூலம் 12 நடைகளை இயக்கிவருகிறது. மேலும் உரிகம் தட பேருந்து பழுது ஏற்படும் சமயங்களில் சிறிய பழுதாக இருப்பின் பேருந்தின் பழுது உடனுக்குடன் நீக்கப்பட்டு அத்தடபேருந்தே மீண்டும் தடத்தில் இயக்கப்படுகிறது. தேவைப்படின் மாற்றுப் பேருந்துகளைக்கொண்டு 12 நடைகளும் தினசரி இயக்கப்படுகின்றது. மனுவில் குறிப்பிட்டுள்ளபடி தட பேருந்து பழுதடையும் சமயங்களில் பழுது சரி செய்திடும்வரை வேறு பேருந்து இயக்கப்படுவதில்லை என்பது சரியல்ல.**

**பணிகள் கொள்திறன் அதிகரிப்பின் கூடுதல் பேருந்து அரசின் ஒப்புதல் பெற்று இயக்கிட தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம்.

**பிரச்சினை:**

எங்கள் ஊர் தஞ்சை மாவட்டம் திருவையாறு வட்டம் கண்டியூருக்கு அய்யம்பேட்டை ரோட்டில் கிழக்கே (ஒரு கிலோ மீட்டர்) மணல் மேடு கிராமம் உள்ளது. ஒரு ஆண்டு காலமாகக் கண்டியூர் கோபால் என்பவர் சாராய வியாபாரம் செய்து வருகிறார். நடுக்காவேரி போலீஸ் உயர் அதிகாரியையும் கையில் வைத்துக்கொண்டு பொதுமக்களும் கிராமவாசிகளும் நேரடியாகப் போய் சொல்லியும் பெட்டிசன் கொடுத்தும் எந்தப் பலனும் இல்லை. நீங்கள் உடனே இந்த சாராய சாம்ராஜ்யத்தை ஒழிக்கவேண்டும்.

தமிழரசு வாசகர்கள்
மணல்மேடு, கண்டியூர் அஞ்சல்.

**தீர்வு:**

**விசாரணையிலும், மதுவிலக்கு சோதனை செய்ததிலும் மணல்மேடு கிராமத்தில் கண்டியூரைச் சேர்ந்த கோபால் என்பவரோ அல்லது வேறு நபரோ கள்ளச்சாராயம் விற்பனை செய்யவில்லை. மேற்படி கிராமத்தில் ஊர் கட்டுப்பாடு போடப்பட்டு கள்ளச்சாராயம் விற்பனை அறவே இல்லை. மேலும் நடுக்காவேரி காவல் நிலையத்தில் பெறப்படும் புகார்களுக்கு அவ்வவ்போது தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்படி ஊரில் தற்போது கள்ளச்சாராயம் விற்பனை எதுவும் நடைபெறவில்லையென ஊராட்சி மன்ற தலைவர் வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.**


டாக்டர் கே.ஜெயந்திமுரளி, இ.கா.ப.,
காவல் கண்காணிப்பாளர்,
தஞ்சாவூர்.



**பிரச்சினை:**

எங்கள் ஊர் தஞ்சை மாவட்டம் திருவையாறு வட்டம் திருக்காட்டுப்பள்ளி அருகிலுள்ள முல்லைக்குடி சிற்றூராட்சி, நல்ல தார் சாலை உள்ளது. 6,000க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்டது. அரிசன பெண், ஊராட்சித் தலைவிக்குரியது. தஞ்சையிலிருந்து 12-அ டவுன் பஸ் காலை 8 மணி, மாலை 6.30 மணி என ஒரு நாள்கு இருமுறை தான் உள்ளது. அரசுபணி, கல்லூரி, பள்ளி ஆகிய பணிகளுக்கு இதுபோதுமானதன்று. குறைந்தது 4 முறை சென்றால் மக்கள் பலன் அடைவர். குறை தீர்க்க விழைகின்றேன்.

பெ. சோதிவேல்
வணிகவரி அலுவலர் (ஓய்வு)
முல்லைக்குடி



**தீர்வு :**

முல்லைக்குடி கிராமம் திருகாட்டுப்பள்ளி - செங்கிப்பட்டி சாலையில் இருந்து 4 கி.மீ. தூரத்திலும், திருக்காட்டுப்பள்ளியிலிருந்து 6 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது.

தற்சமயம் இக்கிராமத்திற்கு நகரத் தடம் எண். ஏ 7 ஏ மற்றும் ஏ12 மூலம் தஞ்சையிலிருந்து தினசரி 4 நடைகள் இயக்கப்படுகின்றன. தஞ்சையிலிருந்து இக்கிராமம் 34 கி.மீ. தூரத்தில் உள்ளது.

முல்லைக்குடிக்கு இயக்கப்படும் தடைகளின் கால அட்டவணை பின்வருமாறு:

| | தஞ்சாவூர் | | முல்லைக்குடி | |
|---|---|---|---|---|
| | வ.நே. | புற.நே. | வ.நே. | புற.நே. |
| உதடம் எண்.ஏ12 | - | 7.00 | 8.10 | - |
| | 9.45 | - | - | 8.25 |
| தடம் எண்.ஏ-7ஏ | - | 17.15 | 18.50 | - |
| | 20.25 | - | - | 19.00 |

ஒரு தேசம் சுதந்திரம் பெற்றுவிட்டது என்பதைக் காலண்டர் மட்டுமே சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது; சுதந்திரம் மக்களையும், மக்கள் சுதந்திரத்தையும் சொல்லிக்கொண்டே இருக்கவேண்டும்!

- கவிஞர் வைரமுத்து



இக்கிராம மக்களுக்குப் பயன்படும் வகையில் மேற்படி பேருந்துகள் காலையில் முல்லைக்குடியிலிருந்து புறப்படும் நேரமும், மாலையில் தஞ்சாவூரில் இருந்து புறப்படும் நேரமும் கல்விக்கூட/அலுவலக நேரங்களுக்கேற்றவாறு அமைக்கப்பட்டுள்ளன.

தற்சமயம் தஞ்சையிலிருந்து இயக்கப்படும் நகரப்பேருந்துகள் யாவும் பல்வழித்தடத்தின் 3 அல்லது 4 தடங்களில் தஞ்சாவூர் — பூதலூர், திருவையாறு திருவோணம், ஒரத்தநாடு, அம்மாபேட்டை முதலிய ஒன்றிய மக்களுக்குப் பயன்படும் வகையில் இயக்கப்படுகின்றன. முல்லலைக்குடிக்கு இயக்கப்படும் நடைகளை அதிகப்படுத்த வேண்டுமானால், மற்ற கிராமங்களுக்கு இயக்கப்படும் நடைகளைக் குறைக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். இதனால் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் ஏற்படவும் வாய்ப்புள்ளது.

இந்நிலையில் முல்லைக்குடிக்கு கூடுதல் நடைகள் இயக்குவது குறித்து தஞ்சை நகரின் புதிய நகர வழித் தடங்கள் திறக்கப்படும் போது கருத்தில் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இக்கோரிக்கைத் தொடர்பாக, மேற்படி தகவல்களை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு ஏற்கனவே தெரிவித் துள்ளோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

எஸ்.ஏ.லூர்துசாமி
வட்டாரப் போக்குவரத்து அலுவலர்
தஞ்சாவூர்.



பிரச்சினை:

திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் சக்காளம்மன்பட்டி கிராமத்தில் 1995-96ல் ஊராட்சி அரசுப் பள்ளி தொடங்கப் பள்ளிக்கல்வி இயக்குநர் அனுமதி கொடுத்திருந்தார். ஆனால் இன்றுவரை பள்ளி திறக்கப்படவில்லை. அந்த ஊர் சிறுவர்களில் சிலர் 2 கிலோ மீட்டர் தூரம் சென்று படிக்கின்றனர். பல குழந்தைகள் பள்ளிக்கூடம் இல்லாததால் ஆடுமாடு மேய்க்கின்றனர். மேலும் அருகில் கல்குவாரியில் 150 குடும்பங்கள் உள்ளன. 10 வயது பையன்கள் கூட கல்லுடைக்க ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

- ஊர்ப்பொதுமக்கள் சார்பாக,
பள்ளிக்குழுத் தலைவர்.

தீர்வு:

ரெட்டியார்-சத்திரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கொத்தப்புள்ளி ஊராட்சியைச் சேர்ந்த ஜக்காளம்மன்பட்டி கிராமத்தில் புதியதாக ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளி 1995-96ம் ஆண்டில் தொடங்கப்படுவதற்காக, பள்ளி கல்வி இயக்குநர் அனுமதி வழங்கப்படவில்லை. போதிய அளவுக்கு இக்கிராமத்தில் ஜனத்தொகை மற்றும் பள்ளி செல்லும் வயதுள்ள குழந்தைகள் எண்ணிக்கை இல்லை. மேலும் இக்கிராமத்திலிருந்து 8 கி.மீ. தூரத்தில் பெத்திநாய்க்கனூர் கிராமத்தில் ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளி செயல்பட்டு வருகிறது. மற்றும் 1.5 கி.மீ. தூரத்தில் தாதன்கோட்டை, கதிரணம்பட்டி கிராமங்களில் அரசு ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளிகள் செயல்பட்டு வருகிறது. எனவே ஜக்காளம்பட்டி கிராமச் சிறுவர்கள் 2 கி.மீ. தூரம் சென்று படிக்க வேண்டிய நிலையில் இல்லை. இக்கிராமத்திலிருந்து மொத்தம் 17 சிறுவர்கள் மட்டும் அருகிலுள்ள பெத்திநாயக்கனூர் கிராமத்தில் படித்து வருகின்றார்கள். பள்ளி செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளதால் புதிய அரசு துவக்கப்பள்ளி ஆரம்பிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- பி. பாலசுப்பிரமணியன்
ஆணையர்
ஊராட்சி ஒன்றிய அலுவலகம்
ரெட்டியார் சத்திரம்.

பிரச்சினை:

எங்கள் ஊர் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், வாகைக்குளம் பஞ்சாயத்துக்குட்பட்ட நாலுவாசன் கோட்டை கிராமம் ஆகும். இது சுமார் 2,500 மக்கள் தொகை கொண்ட ஊர். இங்குள்ள மக்களின் அன்றாட பிரச்சினையாகத் தண்ணீர் உள்ளது. இங்குள்ள மக்கள் கூலிவேலை, சிறுவிவசாயம், கல் உடைத்தல், தீப்பெட்டி வேலை ஆகியவை செய்து பிழைக்கின்றனர். இங்கு உள்ள மக்கள் தண்ணீர் வேண்டி பலமுறை இதற்கு முன்பு முயற்சி செய்தும் இதுவரை இங்குள்ள மக்களுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. மக்கள் தண்ணீர் வேண்டி 3 கி.மீ. தூரம் வரை சென்று மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு வருகின்றனர். இங்குள்ள மக்களுக்கென்று கிணறு, அடிபம்பு எதுவும் கிடையாது. இப்பகுதியில் மழை எதுவும் இல்லாததால் வறட்சியாக உள்ளது. தண்ணீர் ஒரு பெரும் அன்றாடப் பிரச்சினையாக உள்ளது. எனவே எங்கள் பஞ்சாயத்துக்குட்பட்ட நாலுவாசன் கோட்டை கிராமத்திற்குத் தண்ணீர் கிடைக்க உதவி செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

- தலைவர்
ஊராட்சி மன்றம், வாகைக்குளம்.

தீர்வு:

குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம் வாகைக்குளம் ஊராட்சி நாலுவாசன்கோட்டை கிராமத்திலுள்ள ஒரு அடிபம்பு பழுதுநீக்கம் செய்யப்பட்டு குடிநீர் விநியோகம் சீராக நடைபெற்று வருகிறது. தற்போது நிலவிவரும் வறட்சியை முன்னிட்டு, மேற்படி கிராமத்திற்குக் கூடுதலாகப் புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைக்க நடப்பு வருட வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் அரசுக்குப் பிரேரணை அனுப்பப் பட்டுள்ளது. ஒப்புதல் கிடைக்கப் பெற்றவுடன் புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைத்துத் தரப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறோம்.

- செ. ராமையா
ஆணையாளர்
ஊராட்சி ஒன்றியம், குருவிகுளம்.

பிரச்சினை:

எங்கள் ஊரில் 161 மாணவர்களைக் கொண்ட ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளி உள்ளது. பள்ளியில் வேலை செய்யும் ஆசிரியர்களின் எண்ணிக்கை ஓராசிரியர் மிஞ்சினால் ஈராசிரியர் தான். புதியதாக ஆசிரியர்களை நியமனம் செய்தாலும் அவர்கள் உடனே மாறுதல் கேட்டுச் சென்று விடுகின்றனர். காரணம் பஸ் வசதி இல்லாமைதான்.

காலை 7.35க்கு 265ஏ என்ற பேருந்து செஞ்சியில் இருந்து மரூர் வழியாக விழுப்புரம் செல்லுகிறது. அது 8.15 மணிக்கு மரூர் வந்து விடுகிறது. அதை விட்டால் வேறு பேருந்து அந்த வழியில் 11.00 மணிக்குத்தான்.

எனவே மாணவர்களின் நலனை மனதில் கொண்டு 8.30 மணிக்கு செஞ்சியில் கிளம்புவது போல், ஒரு பஸ் செஞ்சி to மரூர் வழியில் விட்டால் மாறுதல் கோராமல் ஆசிரியர்கள் பள்ளிக்கு வந்து செல்வார்கள். மாணவர்களின் படிப்பும் கெடாமல் இருக்கும். கி.பி.2000க்குள் அனைவருக்கும் கல்வி என்ற அரசின் இலக்கை அடைய வேண்டுமாயின் இப்படிப்பட்ட சிறிய குறைகளையும் நிவர்த்தி செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன்.

- எம்.மேரி பால்ராஜ்
மரூர் கிராமம்.



தீர்வு:

செஞ்சியிலிருந்து இயக்கப்படும் நகரப்பேருந்து தடம் என்.டி.5 செஞ்சி-கூட்டேரிப்பட்டு (வழி) திருவம்பட்டு, மரூர், ரெட்டணை, வழித்தடத்தில் நாளொன்றுக்கு 4 நடைகளும், விழுப்புரம் பணிமனையிலிருந்து இயக்கப்படும் புறநகர் பேருந்து தடம் என்.265 விழுப்புரம்-செஞ்சி(வழி) விக்கிர வாண்டி, பேரணி, மரூர் திருவம்பட்டு வழித்தடத்தில் நாளொன்றுக்கு 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

இவற்றில் செஞ்சியிலிருந்து இயக்கப்படும் நகரப்பேருந்து டி5 காலை 8.10 மணிக்கு கூட்டேரிப்பட்டில் நடையெடுத்து ரெட்டணை, மரூர், திருவம்பட்டு, ஜம்போதி வழியாக செஞ்சிக்கு 9.30 மணிக்கு சென்று அடைகிறது. இந்நடை ரெட்டணை, மரூர், திருவம்பட்டு, ஜம்போதி கிராம மாணவ, மாணவியர் அருகிலுள்ள செஞ்சி நகருக்குச் சென்று கல்வி பயில ஏதுவாக இயக்கப்பட்டு வருகின்றன. இந்நடையைக் கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு கால அட்டவணையை மாற்றி இயக்கினால் தற்போது மேற்படி நேரத்தில் பேருந்து வசதி பெற்று வரும் கிராம மாணவ, மாணவியர் மற்றும் பொதுமக்கள் பேருந்து வசதி இழக்க நேரிட்டு, சட்டம் ஒழுங்கு பிரச்சினை எழும் என்பதால் இத்தடத்தின் கால அட்டவணையை மாற்றி இயக்க இயலாது.

மற்றொரு பேருந்து விழுப்புரம் பணிமனை யிலிருந்து இயக்கப்படும் புறநகர் தடம் என்.265 காலை 7.45 மணிக்கு செஞ்சியில் நடையெடுத்து ஜம்போதி, திருவம்பட்டு, மரூர், பேரணி, விக்கிரவாண்டி வழியாக விழுப்புரத்திற்கு 9.40 மணிக்கு, சென்று அடைகிறது.

இத்தடம் சுமார் 8.30 மணிக்கு மரூர் வந்தடை கிறது. இந்நடையில் செஞ்சியிலிருந்து மருவூர் மற்றும் அதனைச் சார்ந்த கிராமங்களில் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் பள்ளிக்கு வந்து சேர ஏதுவான நேரமாகும். மேலும் ஒவ்வொரு நகரத் திலிருந்தும் கிராமங்களுக்குச் சென்று பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஏதுவான நேரத்தில் பேருந்து இயக்குவது என்பது நடைமுறையில் இயலாத ஒன்றாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

- பொது மேலாளர் (இயக்கம்)
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம்.

பிரச்சினை:

நாங்கள் பெரியார் மாவட்டம் காங்கேயம் தாலுகா, வெள்ள கோவில் பேரூராட்சி கச்சேரி வலசு இந்திராநகர் ஆகிய பகுதிகளில் வசிக்கும் அருந்ததிய இன மக்கள், வெள்ளகோவில் நகரம், நாகப் பட்டணம் திருச்சி சாலையிலிருந்து வடபுறம் பிரிந்து சி.எஸ்.ஐ. தேவாலயம் வழியாக கச்சேரி வலசு வந்து பின் இந்திராநகர் வழியாக, வெள்ளகோவில் ஈரோடு ரோட்டினை அடைகிறது ஒரு ரோடு, இந்த ரோடுதான் இப்பகுதியில் வசிக்கும், 1000 மக்கள் அன்றாட கூலி வேலைக்கும் நடத்தும் சைக்கிளிலும் 24 மணி நேரமும் சென்று வருகிறோம். கடந்த 40 ஆண்டுகளாக இந்த ரோடு யாராலும் மராமத்து செய்யப்படவில்லை.

நாங்கள் குளிக்கும் தண்ணீர், துவைக்கும் தண்ணீர், சிறுநீர் அனைத்தும் வடிகாலின்மையால் ரோடுகளில் உள்ள குழிகளில் தேங்கிவிடுகிறது. மொத்தத்தில் அனைத்து வியாதிகள் வரும் அளவுக்கு சுகாதாரக் கேடு உள்ளது. தமிழரசு மூலமாகவாவது தமிழ்நாடு அரசு இவைகளைக் கவனிக்குமா?

கனகராஜ்
வெள்ளக்கோயில்

தீர்வு:

வெள்ளக்கோயில் பேரூராட்சி கச்சேரி வலசு இந்திராநகர் ஆகிய பகுதிகளின் வழியாகச் செல்லும் தெருக்களுக்குத் தார்ச்சாலை வசதி செய்யவும், தெருக்களில் கழிவுநீர் செல்வதற்காக வடிகால்கள் கட்டுவதற்கும், குடிசை மாற்று வாரியத்தின் மூலம் சர்வே பணி செய்யப்பட்டுள்ளது. அத்திட்டங்களுக்கு அங்கீகாரம் கிடைத்த பின்னர் குடிசைமாற்று வாரியத்தினரால் பணி மேற்கொள்ளப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- ஓ.ப.துரைசாமி
செயல் அலுவலர்
வெள்ளக்கோயில் பேரூராட்சி
பெரியார் மாவட்டம்.

(ESTD. 1944)

# SOUTH INDIA TANNERS & DEALERS ASSOCIATION (Registered)

(Recognised by the Government of India)

**RANIPET - 632 401.**

*Telegram* : "TANNERS" *Phone* : 25354 *Fax* : 04172-22653

*SITDA was formed during the year 1944. At present it has 253 members. The main objectives of the Association are to solve the common problems and difficulties faced by the members in the matters relating to provisions of Factories Act and other Labour laws and mainly to improve the condition of tanning industry in South India.*

*This Association has taken necessary steps for the setting up of two Common Effluent Treatment Plants (CETP) one each at Ranipet and Melvisharam at a cost of Rs.550 lakh and Rs.480 lakh respectively. Further, two more CETPs one each at Melpudupet near Walajapet and at Chettithangal near Ranipet are also under construction.*

*This Association is also importing Wattle Extract in bulk quantities and procuring indigenous Wattle Extract and distributing the same among members on 'no loss no profit' basis. Besides, running Grinding Mill at its premises at Ranipet and a Baling Press at Chennai.*

*This Association is authorised by the Govt. of India to issue Certificate of Origin.*

# தோல் நோய்

**- டாக்டர் எம்.வசந்தா**

**தோல்** நோய்கள், நம்முடைய உடலின்மேல் காணப்படுபவை ஆகும். ஒருசில பாகங்களைத்தவிர, அவைகளை நாமே நன்றாகப் பார்த்துக்கொள்ளலாம். சருமத்தின் ஆரோக்கியம் என்பது உடலின் ஆரோக்கியம் ஆகும்.

"அரிது அரிது மானிடராகப் பிறப்பது அரிது" என்றார்கள். இந்த ஆறறிவு படைத்த மானிடனே-எல்லா உயிர்ப்படைப்புகளிலும் உயர்ந்தவன். உயிரே நம் உடலை இயக்குவது. அந்த உயிர் உடம்பில் உள்ளது. உடம்பானது தசை, நரம்பு, எலும்பால் ஆனாலும் அதில் மிக அற்புதமான அவயவங்களாக - மூளை, இருதயம், நுரையீரல், குடல், கல்லீரல், சிறுநீரகம், பிறப்பு உறுப்புகள் ஆகியவை உள்ளன. இந்த முக்கிய உறுப்புகளையெல்லாம் அந்தந்தப் பாகத்தில் இருத்தி-வடிவம் கொடுத்து அவைகளை மிகச்சிறந்த உறையாகப் போர்த்தி, ஒரு பாதுகாப்புக் கவசமாக அமைந்திருப்பது நம் சருமமேயாகும்.

தலைமுதல் பாதம்வரை நீண்டு பரவியிருக்கும் மனிதனின் மிகப்பெரிய பாகமே தோல். இது மிகப்பெரியது மட்டுமல்ல; மற்ற உறுப்புகளைப்போல் தோல் மிக நுணுக்கமான பாகங்களையும் உடையது; பலவிதமான முக்கிய வேலைகளையும் எல்லா நேரமும், எல்லா வயதிலும் எல்லா பாகங்களிலும் செய்துகொண்டிருப்பதுமாகும்.

**தோலின் முக்கியத்துவம் :**

மனிதத் தோலின் முக்கியத்துவம் என்ன என்பதை இங்கே பார்க்கலாம். தோல் இன்றி மனிதனைக் கற்பனை செய்து பாருங்கள், புரியும்.

- ★ உடலுக்கு வண்ணம் கொடுப்பது
- ★ கவர்ச்சியை அளிப்பது
- ★ உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பது
- ★ இளமையைக் காட்டுவது
- ★ முதுமையை அறிவிப்பது
- ★ உடல் வெப்பத்தைச் சீரமைப்பது

- எல்லாம் தோல்தானே?

இப்படியான இந்த அவயவம் பலவிதமான தாக்குதல்களுக்கு உள்ளாகிறது. நேரிடையாக வெயில், பனி, குளிர், மழைக்கும் - காயங்கள், நுண்கிருமிகளின் தாக்குதலுக்கும் உட்பட்டு-நமக்குத் துன்பம் அளிக்கலாம்; நோய்கள் வரலாம்.

நம் உடலின் பாதுகாப்புக் கவசமான சருமமானது மிகவும் பெரியது. மேலும் அதில் மிக முக்கியமாக நரம்புகள், தசைகள், இரத்தக் குழாய்கள், வியர்வை சுரப்பி நாளங்கள், கொழுப்புச்சத்து தரும் சுரப்பிகள், நிறம் கொடுக்கும் செல்கள், மற்றும் நம் எதிர்ப்புச்சக்தியை அறிவிக்கும் செல்கள் போன்றவை உள்ளன.

முடி, நகம் ஆகியவற்றைத் தாங்கி நரம்பு, எலும்புகளைப் பாதுகாக்கும் தோலில்-மேல்தோல், அடித்தோல், நடுத்தோலும் அடங்கும்.

**நோய் வகைகள்**

நடைமுறையில் அன்றாடம் நாம் காணும் சருமநோய்கள் பல :

சத்துக் குறைவினால் (வைட்டமின் கொழுப்பு புரதம் தாதுக்கள்)

- ★ நிறமாற்றங்கள்
- ★ வெண்படைகள்
- ★ க்ஷயரோகம்
- ★ தொழுநோய் ஆகிய நோய்களும் -
- ★ பனி, வெப்பம் ஆகியவைகளால் - வடுவலை
- ★ உடம்பில் உள்ள சுய எதிர்ப்புச் சக்திகளினால் (Auto immune)
- ★ பச்சைக் குத்திக் கொள்வதால்
- ★ பழக்கவழக்க முறைகளினால்
- ★ ஆடை அணி ஆபரணங்களால்
- ★ அழகு சாதனங்களினால்
- ★ வீட்டில் வளர்க்கும் செல்லப் பிராணிகளினால் (Pet Animals) ஏற்படும் நோய்கள்.

**பரம்பரை நோய்கள்**

**மச்சங்கள்:**

உடலில் உள்ள மற்ற உறுப்புகள் பாதிப்பால் ஏற்படும் நோய்கள்,

**புற்றுநோய்கள்:**

இப்படி இன்னும் பல சரும நோய்கள் உள்ளன.

நம் நாடு அதிக வெப்பமான நாடாகும். மேலும் நம் நாடு முற்றிலுமாக வறுமை நீங்கி முழு வளர்ச்சி அடையவில்லை. ஆகையால் சுகாதாரக் குறைவினால் சரும நோய்கள் பல எளிதில் உண்டாகலாம்.

அவற்றில் முக்கியமாகச் சொறிசிரங்கைப் பற்றி அறியலாம். சொறி ஒருவிதமான முக்கிய சரும நோயாகும்; சொறி என்பது வியாதியின் பெயரே தவிர, சொறிவது அல்ல. அரசு மருத்துவமனைகளில் அன்றாடம் அதிக அளவு நோயாளிகளிடம் காணப்படுகிறது.

**சொறி வருவதற்கான காரணம்**
**ஒட்டுண்ணி மற்றும் நுண் கிருமி (PARASITE) :**

பரவும் விதம் : ஒருவரிடமிருந்து அடுத்தவர்க்கு மிகவும் நெருக்கமாக இருப்பதனால் ஆண், பெண், சிறுவர், முதியவர் யாவருக்கும் வரலாம். முக்கியமாக சுகாதாரக் குறைவும் வியாதி பரவக் காரணமாகும்.

இதற்கான அறிகுறிகள்: அரிப்பு தாங்கமுடியாத, தூங்கவிடாத, சொறிந்து கொண்டே இருக்கும்படியான, அரிப்பு - உடல் பூராவும் அரிப்பு இருக்கும்.

விரல் இடுக்குகளில் (கை, கால்) கைமுட்டியில், மார்புகளில், தொடையில், புட்டங்களில் இப்படி வரும். முதலில் நுண்ணிய கட்டி வரும். பின் அவை கொப்புளங்களாக மாறி, சீழ் பிடித்துக் காணப்படும். இந்த பாகங்கள் தவிர- குழந்தைகளுக்கு முகம், தலை, பாதம் ஆகிய இடங்களில் நுண்ணிய கட்டிகளாக வரலாம்.

தோல் பாதிக்கப்பட்ட இடத்தை அதன்மேல் தோலைச் சிறு கீறலாக எடுத்து நுண்ணோக்கியில் பார்த்தால் அந்தக் கிருமியையோ, அதன் பாகங்களையோ காணலாம். கால்கள் தலை எலும்பு ஆகியவை தெரியும்.

மேலும், இவ்வாறான அறிகுறிகளை வைத்தே கண்டுபிடித்துவிடலாம்.

**சிகிச்சை :** வயதுக்கேற்ற படி, நோயின் நிலைக்கேற்றபடி இதற்குச் சிகிச்சை அளிக்கப்படவேண்டும். முக்கியமாகத் தோலில் தடவும் மருந்தும், அரிப்பு நிறுத்தும் மருந்தும் (சல்பர்) கந்தகம் கலந்த கிரீம், ஆயின்மெண்ட், பசைகள் மிக உபயோகமானவை. அவையில்லாமல் பென்சைல், பென்சோயேட், காமாபென்சின், எவித்சா குளோரைடு முதலியவை இதற்கு நன்றாகப் பயனளிக்கும். இந்த மருந்துகளை நன்றாக சோப்பு போட்டுத் தேய்த்துக் குளித்தபின்தான் - பாதிக்கப்பட்ட பின்தான் தடவ வேண்டும்.

விடாமல் 3 நாட்கள் பகல் - இரவு இருவேளையும் தடவலாம். மருந்து தோலில் இருந்துகொண்டே இருக்கவேண்டும்.

கட்டிகள், கொப்புளங்கள் இருந்தால் அதற்கான ஆண்டிபயாடிக் கொடுக்கவேண்டும்.

சொறி நோயானது சுகாதார குறையைக் காட்டுகிறது. விரைவில் எளிதில் ஒட்டிக்கொள்கிறது. முக்கியமான சில வியாதிகள் வர இது காரணமாகும். மேலும் நுண் கிருமிகள் தாக்கப்பட்டு பெரிய கட்டிகள் கரப்பான் வர ஏதுவாகி, பின் முக்கிய உறுப்பான சிறுநீரகம் கூட இதனால் பாதிக்கப்படலாம். மேலும், சரிவர சிகிச்சை அளிக்காவிட்டால் உடல்பூராவும் வெந்து, தோல் உரிந்து சிக்கலான நிலை வரலாம்.

வீட்டில் வளர்க்கப்படும் நாய்களின் மூலமும் இப்படி வரலாம். ஆனால் அது சிறிது வித்தியாசப்படும். சொறி வியாதிகளிலும் இவ்வாறு பலவகை உண்டு.

**சிரங்கு:** பொதுவாகக் குழந்தைகளுக்கு, முகத்திலும், கை கால்களிலும் வருவது.

**காரணம்:** பாக்டீரியா, நுண்கிருமிகள் (தோலில் நுழைவதால் வரலாம்)

**அறிகுறி:** முதலில் சிவந்த நீர் கொப்பளமாகி, பின்பு சீழ் வைத்து உடைந்து, சீழ் ரத்தம் கலந்த திரவமாக வெளிப்படும்; லேசான அரிப்பு எரிச்சல் உண்டு. மேலும், வீக்கமும் காணப்படலாம்.

இதிலிருந்து விடுபட கிருமி நாசினிகள், தடவி, நன்றாகச் சுத்தப்படுத்த வேண்டும். ஆண்டிபயாடிக் கொடுக்கப்படலாம்.

**முக்கியத்துவம் :** எளிதில் ஒட்டிக்கொள்ளும். அதிக வீக்கம் வந்து கிருமிகள் ஆழமாகச் சென்று பெரிய கட்டிகள் வரலாம். தழும்பு இருக்காது. மயிர்க்கால்களிலும் சிரங்கு மாதிரி வரலாம். சிரங்கினாலும் உடல் உள் உறுப்புகள் பாதிக்கப்படலாம் என்பது குறிப்பிடத்தக்கது.



**கரப்பான் (எக்ஸிமா) :** தோல், மேல்தோல், நடுத்தோல் பலவிதக் காரணங்களால் வெந்துபோய், நீர் கசிந்து வீக்கத்தோடு சில இடங்களில் காணப்படும். இது வரப் பல காரணங்கள் உண்டு.

தோலில் உள்ள சில திரவங்கள் அதிகமாகி பொடுகு போன்ற நிலை ஏற்பட்டு அது கரப்பான் ஆகலாம். அதுபோல் சிலருக்குப் பரம்பரை தோல் கரப்பான் வரலாம். தோல் காய்ந்து போய் வறட்சியினால் வரலாம்.

மருந்துகள் ஒவ்வாமையினால் (Allergy) வரும். மேலும் வெயிலினால் அரிப்பு வந்து, தோல் சிவந்து சில சமயம் வெந்து, போய் கரப்பான் வரலாம். சில குறிப்பிட்ட தாவரங்களின் இலை திரவம் படும் இடங்களில் வரும்.


முக்கியமாக நம் ஆடை, அலங்காரப் பொருள்கள், செண்ட்,லிப்ஸ்டிக், மை, நகப்பூச்சு, டை (சாயம்) தோல் பொருட்கள், கைக்கடிகாரம், கண்ணுக்கு அணியும் கண்ணாடியின் பாகங்கள், பிளாஸ்டிக், ரப்பர் சில உலோகங்கள், இவை தோலில் பட்டால் அந்தப் பொருட்களால் ஒவ்வாமை ஏற்பட்டு, அந்த பாகங்களில் அரிப்பு ஏற்பட்டு கரப்பான் உண்டாகும்.

ஆக, கரப்பான் வர இப்படிப் பல காரணங்கள் உண்டு. ஆனால் எல்லா வகைக் கரப்பான்களிலும் பொதுவாக அதிக அரிப்பு, எரிச்சல், தண்ணீர் கசிதல், சில சமயம் வீக்கம் காணப்படும். பின்பு, தோல் சிறிது உலர்ந்து விரியும்.

**இதற்கான சிகிச்சை:** நீர் கசியும் போது உலர்த்துவதற்கான லோஷனைத் தடவலாம்; அரிப்பைக் கட்டுப்படுத்த மாத்திரை சாப்பிடலாம். வீக்கத்தைத் தடுக்கவோ, குறைக்கவோ ஆண்டிபயாடிக் எடுத்துக் கொள்ளலாம். உலர்ந்த பின்பு கிரீம் தடவலாம்.

காரணம் கண்டு அதைச் சரி செய்யாவிடில், வேறு நோயில் சிக்க நேரிடும். திரும்பத் திரும்ப வரவும் வாய்ப்புண்டு.

**சேற்றுப்புண் :** இதற்கான காரணம். தொடர்ச்சியாகத் தண்ணீரில் வேலை செய்தல்; தண்ணீரில் உள்ள கிருமிகள்,



ஒட்டுண்ணிகள், காளான்களால் கால் கைகளில் வரலாம். விரல் இடுக்குகள், பாதம், ஓரங்கள் ஆகியவை இதனால் பாதிக்கப்படும்.

இதனால் அரிப்பு, தோல் உரிதல், சிவந்து ஊறிப்போய் காணப்படும், அல்லது குழி குழியாகப் பாதங்களில் காணப்படும். தோல் காய்ந்து போய் சிலசமயம் படை மாதிரியும் காணப்படும் அல்லது நீர்க் கொப்புளங்கள் வரும். பின் உடைந்து, தண்ணீர் வரும். நுண் கிருமிகளால் தாக்கப்பட்டு வீக்கம் வரவும் வாய்ப்புண்டு.

அரிப்புக்கு மருத்துவர் தரும் மாத்திரைகள் சாப்பிடலாம். தோல் உலர்ந்து காணப்பட்டால் தோலை மிருதுவாக்க எண்ணெய் தடவலாம். மேலும் கிரீம்கள், அதற்கேற்ற மருந்து தடவி, தகுந்த மாத்திரைகள் சாப்பிட வேண்டும். முக்கியமாகத் தோல் உலராமல், அதேநேரம் அதிகம் ஈரத்தில் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**நகசுத்தி :** இது ஒரு மிகவும் முக்கியமான வியாதி. தொடர்ச்சியாகத் தண்ணீரில் வேலை செய்வது, விரல் நகங்கள், கால் விரல் நகங்கள் சுற்றியும் உள்ள சதைகள் வீங்கி வலியுடன் இது காணப்படும். ஒரு விரல் அல்லது அதிக விரல்களில் கூட இப்படி காணப்படும். நாளாக ஆக நகம் வீணாகி விடும். இந்த நிலையிலும் தண்ணீரில் உள்ள நுண்கிருமிகள் ஆகியவைகளால் தாக்கப்படலாம்.

விரலில் நகசுத்தியால் அதிகவீக்கம் இருப்பின், ஆன்டிபயாடிக், ஆன்டிசெப்டிக் கிரீம் தடவ வேண்டும்.

தண்ணீரில் அதிக வேலை செய்தல். கை ஈரமாக வைத்திருப்பது ஆகியவையே இது வர முக்கியக் காரணம். Bakery - உணவு விடுதிகளில் அதிகம் காணப்படும். இதற்காகக் கைஉறை அணிவது மட்டுமே போதுமானதல்ல. இது நீரிழிவு நோயின் அறிகுறியாகவும் இருக்கலாம்.

**வெடிப்புகள்:** மேல்தோல் சிறிது வெடித்து, பிளந்து நடுத்தோல் தெரியும் அல்லது இன்னும் ஆழமான புண்ணாக ஏற்படலாம்.

இதற்கு முக்கியக் காரணம் தோல் உலர்ந்து காய்ந்து ஈரப்பசை இல்லாமலும் இருப்பது.

உலர்ந்த தோல் பல வகையான காரணங்களால் காணப்படலாம். தோல் அதிகம் உராய்வதினால் வெடிப்பு ஏற்படலாம். முக்கியமாகப் பாதங்கள், குதிகால்கள், பாகங்களின் ஓரங்களில் காணப்படும் (நடப்பது அதிக உராய்தல் தரும் வேலைகள் போன்றவை). பரம்பரை உலர்ந்த தோல் காரணமாக வெடிப்பு காலில் பலபேருக்கு உண்டு. ஆனால் சிலருக்கு ஆழமாகிப் புண்ணாகலாம். ஆகையால் இதற்குச் சிகிச்சை பெறுவது முக்கியமானது.

எண்ணெய்ப் பசை தரும் கிரீமைப் பாதிக்கப்பட்ட இடத்தில் தடவ வேண்டும்.

அதிகம் நடப்பதைத் தவிர்க்க வேண்டும். தகுந்த காலணிகள் சிறந்த தடுப்புச் சாதனம் ஆகும்.

**சில தோல் நோய்கள் காலில் மட்டுமின்றிக் கைகளில் வெடிப்புகளுடனும் காணப்படும். இதற்கு ஆளானோர் மருத்துவரை அணுகவேண்டும்.**

**வேர்க்குரு:** இது யாவரும் அறிந்ததேயாகும்.

அதிக உஷ்ணம், வெப்பம், வெயில், வியர்வை, நுண்ணிய கட்டிகள் ஆகியவைகளே இவை. எல்லா வயதிலும் வரலாம். மூடிய பாகங்களிலும், உடையினால் மூடப்படாத பாகங்களிலும் இப்படி வரலாம். இதனால் எரிச்சல், அரிப்பு உண்டாகி தோல் சிவந்து காணும்.

நம் உடலில் அதிக முக்கியப் பாகமாக உள்ளவை வியர்வை சுரப்பிகள். அவை நம் உடலின் சீதோஷ்ண நிலையை நிலையாக வைத்துக்கொள்ள உதவுவதாகும். இப்படி வியர்வை என்னும் தண்ணீர் போன்ற திரவத்தால் அதிக வெப்ப நாட்களில் அதிக வியர்வை வெளியாகும். இதனால் அந்த வியர்வை சுரப்பிகளின் நாளங்களில் வியர்வை தங்கி அடைப்பட்டுக் கட்டிகளாக வெளிப்படும்.

இதனால் ஏற்படும் எரிச்சல் அரிப்பு குறைக்க, லோஷன் அல்லது மாத்திரைகள் உபயோகிக்க வேண்டும். காற்றோட்டமான சூழ்நிலை இதைத் தவிர்க்க அவசியம். தினமும் குளிப்பதும், பழம் அதிகம் சாப்பிடுவதும் நல்லது.

சிலசமயம் தட்டம்மையோ அல்லது ஒவ்வாமை நோயோ என்று நினைக்கத் தோன்றும். உடம்பு முழுவதும் இதனால் பாதிக்கப்பட வாய்ப்புண்டு. தோல் உரியலாம். வேர்க்குருகள் கட்டிகளாக மாறலாம். பெரிய கட்டிகளாகவும் வரலாம். சீழ் பிடித்து தானாக உடைந்தும் கொள்ளலாம்.

**தேமல்/படை:** இவை தோலில் சிறு சிறு திட்டுகளாக, நிறம் மாறி தோல் உரிந்து காணப்படும். அவைகள் மிக அதிகமாகக் காணப்படும்.

**இதற்குக் காரணம் :** ஒட்டுண்ணிகளினால் வருபவை. காளான்கள் தண்ணீரிலோ, அல்லது ஈரமான மண், சிலவகை பிராணிகளிலிருந்தும் இது ஒட்டிக்கொள்ளும்.


**அறிகுறிகள்:** முக்கியமாக இளம் வயதினர், நடுத்தர வயதினர், ஆண்,பெண் இருபாலருக்கும் வரலாம். தலைமுடி, தலை, நகம் ஆகியவைகளும் பாதிக்கப்படலாம். அறிகுறிகள் அந்தந்த வகையான படையைப் பொறுத்து உள்ளன.

**தேமல்:** என்பது தோலின் நிறம் சிறிது குறைந்து, சிறிது வெளுப்பாக அல்லது சாம்பல் நிறமாகவோ, கருப்பாகவோ தனித்தனியாக, திட்டுத்திட்டாகக் காணப்படும். முக்கியமாக முதுகு, மார்புப் பகுதிகளில் அதிகமாகத் தென்படும். அரிப்பு ஏதும் இருக்காது. சில இடங்களில் தோல் உரிந்தும் போகும்.

தோலின் உலர்ந்த, உதிர்ந்த பாகத்தை எடுத்து அதில் சிறிது கார திரவம் போட்டு நுண்ணோக்கியில் பார்த்தால் கிருமியின் பாகங்கள் நமக்குத் தென்படும்.

தடவும் மருந்துகள் மிகவும் இதற்கு உபயோகமானவை. மருத்துவர் ஆலோசனைப்படி சிகிச்சை பெறவேண்டும். இதற்கு ஆளானோர், நீரிழிவு நோய் இருக்கிறதா என முதலில் பரிசோதிக்க வேண்டும்.

**படைகள்:** காளான் எனப்படும் ஒட்டுண்ணிகளால் வருவது. இதில் பலவிதமானவை உள்ளன. உடம்பில் தலை முதல் பாதம் வரை எப்பாகத்திலும் வரலாம். முக்கியமாக ஈரப்பசை உள்ள தேகத்தின் இடுக்குப் பகுதிகளில் காணப்படும். தலையில் சொட்டை மாதிரி அல்லது சீழ் பிடித்துக் கட்டி மாதிரி காணப்படும். முகத்தில் வட்டமாகக் காணப்படலாம், அல்லது தாடையில்



மயிர்க் கால் கட்டிகள் (ஆண்கள்) காணப்படலாம். நகம் சொத்தையாகலாம். ஆண், பெண், நடுவயதினர் நடைமுறையில் காணப்படும்.

**இதன் அறிகுறி :** அரிப்பு, தோலில் வட்டமான சிறுசிறு கொப்பளங்கள் காணப்படும். ஒன்றோ இரண்டோ அதிகமாகவோ காணப்படும். மேலும், தொடை இடுக்குகளில் அதிகமாகப் பரவலாம். நிறம் கருப்பாக மாறி தோல் உரிந்தும் காணப்படலாம். நிறை பாகங்களிலும் காணப்படும். நோய் பரவுதலை நுண்ணோக்கியின் உதவியினால் அறியலாம்.

தவறாமல் தினப்படி மருத்துவ ஆலோசனைப்படி சிகிச்சை எடுக்கவேண்டும். 4 வாரம் முதல் 6 வாரம் வரை சிகிச்சை எடுக்க வேண்டும். நுட்பமான சுகாதார முறை கடைப்பிடிக்கவேண்டும். தவறாமல் வெந்நீரில் குளிக்க வேண்டும். சுத்தமான துவைத்த ஆடை அணிய வேண்டும். உள்ளாடைகளை அதி சுத்தமாக உபயோகிக்க வேண்டும்.

சரியான சிகிச்சை எடுக்கப்படாவிட்டால் இது தேகம் பூராவும் பரவலாம். மேலும் பலவிதமான சிக்கல்கள் இதனால் வரலாம். உதாரணமாகத் தோல் முழுவதும் வெந்து காணப்படலாம்.

**மருக்கள்:** இவை ஒருவித வைரஸ் எனப்படும் மிகநுட்பமான கிருமியால் உண்டாவது. மருக்கள் பலவிதம் உண்டு. கை கால், பாதம் மற்ற பாகங்களில் காணப்படும். சிறுசிறு கருமையான அல்லது சாம்பல் நிறமான கட்டிகளாக இது கண்டும் வலி அதிகம் இருக்காது. அழுத்தினால் வலி உண்டாகும். இந்த நோயும் ஒட்டிக்கொள்ளும் தன்மையானது ஆகும்.

**பால் உண்ணி :** முக்கியமாகக் குழந்தைகளுக்கு முத்துப் போல் வெண்மை நிறமான சிறுகட்டிகள் மிருதுவாகக் காணப்படும். இதுவும் ஒருவகை வைரஸ் வியாதிதான்.

மருக்களை அமிலத்தால் அல்லது மின்சாரத்தால் தீய்த்து விடலாம். பெரியதாக இருப்பின் அறுவை சிகிச்சை செய்தே அகற்றலாம். பால் உண்ணிகளை மிகச் சுலபமான முறையில் சிறிய ஊசி கொண்டு எடுத்துவிடலாம்.

**முக்கியத்துவம் :** அவை பெரியதாகி, கட்டிகளாக மாறலாம். சில ரத்தக் கட்டிகளாக மாறலாம்.

காசநோய் என்றாலே இருமல், சளி வருதல், ரத்தம் கலந்த கோழை, ஜுரம் மெலிந்து சக்தியிழந்து காணப்படுதல் ஆகியவையே நாம் கற்பனை செய்வோம். காசநோய், காசநோய்க் கிருமியினால் வருவது (T.B.) இது நம் தோலிலும் வரலாம் என்பது பலருக்குத் தெரியாத விஷயம். விந்தையான காச நோய் நம் தோலில் பலவிதங்களில் காணப்படலாம். அவை சில சிறுவயதிலும், சில நடுவயதிலும் வரலாம். மேலும், முகம் கை கால்கள் கழுத்து, தொடை இடுக்கிலும் வரலாம். அவை உடலின் பாகத்திற்கேற்ப தோற்றத்தில் மாறுபட்டுக் காணப்படும்.

சிவந்த, படர்ந்த தோல் தடிப்புடன் காணப்படலாம் அல்லது சிவந்த சிறு கட்டிகளாகக் காணப்படும்.

- ★ புண்களாகக் காணப்படும்
- ★ சில மருக்கள் போலும் காணப்படும்.
- ★ தீராத சீழ் வடியும் சிறு புண்களாகக் காணப்படும்.
- ★ உடம்பு முழுவதும் வேர்க்குரு மாதிரியும் காணப்படலாம்.

அதற்கு, தக்க மருத்துவர் மூலம் மருத்துவ பரிசோதனை செய்து சிகிச்சை அளிக்க வேண்டும். முக்கியமாக உடலில் மற்ற உறுப்புகளில் காச நோய் உள்ளதா என்று பார்க்க வேண்டும். சிகிச்சைக்குப்பின் பெரிய தழும்புகள் வந்து விகாரமாகத் தோற்றமளிக்கும்.

**நிறமாற்றங்கள் :** உடல் பூராவும் தோல் நிறத்தில் சில மாறுதல்கள் சாதாரணமாக ஆரோக்கியமாக இருக்கும்போதே காணப்படுவது நாம் அறிந்ததே. ஆனால் நிறமாற்றத் தோல் நோய்கள் அநேகம் உண்டு. அவை பலவிதக் காரணங்களினால் வருவன. உடல் பூராவும் மாற்றம், அதிகக் கருப்பாக, ஒரே மாதிரியாக அல்லது

ஆங்காங்கு கருப்பாக, திட்டுத்திட்டாக அல்லது முகம், நெற்றி கன்னங்கள் மட்டும், கழுத்து மட்டும், மூக்கில் மட்டும் போன்றவை. இந்த கருப்பு நிறமாற்றம் முக்கியமாக இது வருவதற்கான காரணங்கள்: வெயில்படும் இடங்களில் வெயிலின் கதிரினால் வரக்கூடும், சிலவகை மருந்துகள், சிலவகை அழகு சாதனங்கள் வாசனைத் திரவியங்கள், நம் பெண்களில் சிலருக்குப் பொட்டு வைப்பதால், சிலருக்கு கன்னங்களில் கருப்பாக - அது உடலின் நாளமில்லா சுரப்பிகள் - தவறால் வரக்கூடும்.

இவையெல்லாம் வெள்ளைப்படை உடலின் எந்த பாகத்திலும் எந்த வயதிலும் வரக்கூடும். இதன் அடிப்படை காரணம் 1. பரம்பரை 2. உடலில் நிறம் தரும் செல்கள் அழிக்கப்படுகின்றன ஒருவித சுய எதிர்ப்புச் சக்தி இவையெல்லாம் ஆகும். மிகச் சாதாரணமாகக் காணப்படுவார்கள். காரணத்திற்கேற்ப சிகிச்சை அளிக்க வேண்டும்.

நமக்கு ஒருவிதமாக விகாரத் தோற்றத்தை இது கொடுக்கும். நம்மைப் பார்ப்பவர்களுக்கு அதிர்ச்சி, அச்சம் தரக்கூடும். ஆனால் இவை ஒட்டவோ, தொற்றவோ செய்யாது.

சத்துக் குறைவினால் ஏற்படும் தோல் நோய்களும் உண்டு. புரதக் குறைவால் முடிகள் உலர்ந்து மெலிந்து காணப்படும். சரிவர வளர்ச்சி இருக்காது. நகம் மிருதுவாக வளரும். உடையும் தன்மை உடையது. தோல் உலர்ந்து வெடித்து நிறம் மாறி இருக்கும். மேலும் குழந்தைகளுக்கும் அதிகமாகக் காணப்படும்.

**வைட்டமின், தாதுக்கள், உலோக சத்துக்கள்:**

பொதுவாக இவ்வாறான தோல் நோய் எனில் தோல் காய்ந்து வெடித்துக் காணப்படும். கோடுகளாகத் தெரியும். மிகவும் மெல்லியதாகக் காணப்படும். தோல் உரியும். முக்கியமாகக் கை, கால்களில் மேலும் தவளைச் சொரி எனப்படும் மிக நுண்ணிய, கடினமான கட்டிகள் முட்டிகளில் காணப்படும். வாய்களில் புண்கள், முடி உதிர்தல், சிலசமயம் உடலில் புண்கள் காணப்படலாம். இந்தச் சத்துக்கள் அதிகமானாலும் நோய் பாதிக்கப்படலாம்.

குடிப்பழக்கத்தினால் தோலில் வியாதிகள் வரலாம். முகத்தில், மார்பில், புறங்கைகளில் மற்றும் சில இடங்களில் தோல் வெந்து சிவந்து உரிந்து காணப்படும். இதனால் எரிச்சல், அரிப்பு இருக்கும்.

எய்ட்ஸ் என்றும் பயங்கர நோயும் தோலில் பலவிதமான புண்களை ஏற்படுத்தும். இதனால், கட்டிகள், கொப்புளங்கள் உண்டாகவும் கூடும்.

உடலின் முக்கியமான உறுப்புகள் நோயினால் பாதிக்கப்பட்டால், அந்நோய்க்கு ஏற்ப தோலில் பலவித மாற்றங்கள் ஏற்படும். இதனால் நோய்கள் வரலாம்.

கொசுக்கடி மற்றும் பூச்சிக் கடிகளினால் சிலருக்குத் தொல்லை கொடுக்கும் கட்டிகள், கரப்பான் போன்றவை காணப்படும். இவை தொடர்ச்சியாக வந்து போய்க்கொண்டே இருக்கும்.

இன்று எண்ணிலடங்கா தோல் நோய்கள் உள்ளன. அவைகளைச் சுருக்கிக் கூறுவது என்பது இயலாது. விளக்குவதும் கடினம்.

**தொழுநோய்** : இது யாவரும் அறிந்த முக்கியமான வியாதி. இது குறைந்த உணர்ச்சியற்ற படையாகவோ அல்லது உடம்பு பூராவும் சிறு படைகளாகவோ அல்லது கைகள், விரல்கள் மடங்கி புண்ணாகி கால்கள், விரல்கள் இல்லாமல் உபயோகமற்ற அவயங்களாக மாறி காணப்படும். தொழுநோய் மிகவும் விரிந்து பரந்து விதவிதமான தோற்றங்களில் காணப்படலாம். மேலும், பலவிதமான சிக்கல்கள் இதன் காரணமாக வந்து உடல் பாதிக்கப்பட்டு அன்றாட வாழ்க்கை, அன்றாடப் பழக்கங்கள், வேலைகள் சுத்தமாகப் பாதிக்கப்பட்டு நம்மைச் சமூகத்துக்கு உபயோகமற்றவராக ஆக்கிவிடும். ஆகையால் தொழுநோய் பற்றிப் புரியும்படி சுருக்கமாகக் கூறுவது மிகக்கடினம். ஏனெனில் அதுபற்றி அவ்வளவு சொல்லியாகவேண்டும்.

இது மிகவும் மோசமான நோய். ஆகையால், இதனால் பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாகத் தக்க மருத்துவரை அணுகிப் பரிசோதித்துக்கொண்டாக வேண்டும்.

இவ்வாறாகப் பலவிதத் தோல் நோய்கள் உண்டு. முன்னெச்சரிக்கையே இதற்கு முக்கியம். ●

## தில்லையாடி வள்ளியம்மை நினைவகத்தை மேம்படுத்திட ரூ.5.91 இலட்சம் அனுமதி

### முதல்வர் கலைஞர் ஆணை

தென்னாப்பிரிக்காவில் அண்ணல் காந்தியடிகளின் தலைமையில் இந்தியர்களுக்காக நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு தீரத்துடன் செயல்பட்டதன் காரணமாக காந்தியடிகளால் பாராட்டப்பட்ட பெருமைக்குரியவர் விடுதலைப் போராட்ட வீராங்கனை தில்லையாடி வள்ளியம்மை ஆவார். அவர் நினைவைப் போற்றும் வகையில் வள்ளியம்மை பிறந்த நாகப்பட்டினம் மாவட்டம், தில்லையாடி கிராமத்தில் 1971ஆம் ஆண்டில் முதல்வர் கலைஞர் அவர்கள் தகுந்த நினைவுச் சின்னம் ஒன்றை அமைத்தார்கள். அந்த நினைவுச் சின்னத்தைப் பின்வந்த ஆட்சியாளர்கள் உரிய முறையில் பராமரிக்காமையினால், அது இன்று பழுதுற்று, முற்றிலுமாகப் பொலிவிழந்து சிதிலமடைந்த நிலையில் உள்ளது.

இந்திய விடுதலையின் பொன்விழாவைக் கொண்டாடும் வேளையில், அந்த விடுதலைப் போராட்ட வீராங்கனை தில்லையாடி வள்ளியம்மையின் நினைவகத்தைப் புதுப்பித்துச் சீரமைத்து மேம்படுத்துவதற்காக முதல்வர் கலைஞர் அவர்கள் 5 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாயை அனுமதித்து ஆணையிட்டுள்ளார்கள்.

# கால்நடைப் பராமரிப்பு - ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள்!

கால்நடைப் பராமரிப்புத் துறையின் கீழ் இயங்கும் திட்டங்களைச் செயல்படுத்துதல், மேற்பார்வை செய்தல், ஆய்வு செய்தல் ஆகியவை தொடர்பான பின்வரும் அதிகாரங்களை ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும், மாவட்ட ஊராட்சிகளுக்கும் வழங்கிட முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.


**ஊராட்சிகளுக்கு வழங்கப்படும் அதிகாரங்கள்:**

1. கால்நடை துணை மையங்களில் வெளிநாட்டு உதவிபெறும் திட்டத்தின் மூலம் செயற்கை முறையில் இனப்பெருக்கம் செய்யும் திட்டத்தின் பயனாளிகளைத் தெரிவு செய்தல்.
2. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உறைவிந்து வசதிகள் அளிக்கப்படுவதில் பயனாளிகளைத் தெரிவு செய்தல்.
3. கிராம அளவில் கால்நடை மற்றும் கோழியினக் கண்காட்சிகளை நடத்துதல்.
4. இறைச்சிக் கொட்டில்களைப் பராமரித்தல்.
5. செம்மறியாடு வளர்ப்பதற்காகச் சிறு விவசாயிகள் மற்றும் குறு விவசாயிகளுக்கு நிதியுதவி வழங்க பயனாளிகளைத் தெரிவு செய்தல்.
6. பன்றி வளர்ப்புத் திட்டத்திற்குரிய பயனாளிகளைத் தெரிவு செய்தல்
7. விலங்குகள், பறவைகள் வழங்கப்படும் திட்டத்திற்குரிய பயனாளிகளைத் தெரிவு செய்தல்.
8. முயல் வளர்ப்பு கோழி வளர்ப்புக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்திற்குரிய பயனாளிகளைத் தெரிவு செய்து, அத்திட்டத்தைச் செயற்படுத்துதல்.
9. மேய்ச்சல் நில மேம்பாட்டு நிதியுதவித் திட்டத்திற்குரிய பயனாளிகளைத் தெரிவு செய்தல்.
10. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தரமான கறவை மாடுகள் வழங்கும் திட்டத்திற்குரிய பயனாளிகளைத் தெரிவு செய்தல்.
11. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படும் திட்டப் பணிகளில் பயனாளிகளைத் தெரிவு செய்தல்.
12. மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படும் திட்டப் பணிகளில் பயனாளிகளைத் தெரிவு செய்தல்.

**ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படும் அதிகாரங்கள்**

1. கால்நடை துணை மைய மருந்தகங்கள் மற்றும் மருத்துவமனைகளைச் செயற்படுத்தலும், பார்வையிடுதலும்.
2. கால்நடைத் துணை மையங்களில் வெளிநாட்டு உதவி பெறும் திட்டத்தின்கீழ் செயற்கை முறையில் இனப்பெருக்கம் செய்யும் திட்டத்தைச் செயற்படுத்துதல், பார்வையிடுதல், மேற்பார்வை செய்தல்.
3. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் உறைவிந்து வசதிகள் வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்துதல்.
4. கிராம அளவில் நடத்தப்படும் கால்நடை மற்றும் கோழியினக் கண்காட்சிகளை மேற்பார்வை செய்தல்.
5. இறைச்சிக் கொட்டில்களைப் பராமரித்தல்.
6. செம்மறியாடு வளர்ப்பதற்காகச் சிறு விவசாயிகள் மற்றும் குறு விவசாயிகளுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்துதல்.
7. பன்றி வளர்ப்புத் திட்டத்தைச் செயற்படுத்துதல்.
8. விலங்குகள், பறவைகள் ஆகியவற்றை வழங்கும் திட்டத்தினைச்செயல்படுத்துதலும், பராமரித்தலும்.
9. முயல் வளர்ப்பு கோழி வளர்ப்புக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்துதல்.





10. மேய்ச்சல் நில மேம்பாட்டு நிதியுதவித் திட்டத்தைச் செயற்படுத்துதல்.

11. பால்பண்ணைக் கூட்டுறவுச் சங்கங்களை மறு ஆய்வு செய்தல்.

12. ஒருங்கிணைந்த பால்பண்ணை மேம்பாட்டுத் திட்டங்களை மறு ஆய்வு செய்தல்.

13. தரமான கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தை மறு ஆய்வு செய்தல்.

14. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படும் திட்டப் பணிகளைப் பார்வையிடுதலும், மேற்பார்வை செய்தலும், மறு ஆய்வு செய்தலும்.

15. மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படும் திட்டப்பணிகளைப் பார்வையிடுதலும், மேற்பார்வை செய்தலும், மறு ஆய்வு செய்தலும்.

**மாவட்ட ஊராட்சிகளுக்கு வழங்கப்படும் அதிகாரங்கள்**

1. கால்நடைத்துணை மையம், மருந்தகம் மற்றும் மருத்துவமனைகளை மேற்பார்வை செய்தலும் மறு ஆய்வு செய்தல்

2. வெளிநாட்டு உதவி பெறும் திட்டத்தின் கீழ் கால்நடைத் துணை மையங்களில் செயற்கை முறையில் இனப்பெருக்கம் செய்யப்படும் திட்டத்தை மறு ஆய்வு செய்தல்.

3. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உறைவிந்து வசதிகள் வழங்கும் திட்டத்தை மேற்பார்வை செய்தலும், மறு ஆய்வு செய்தலும்.

4. மாவட்ட அளவில் கால்நடை மற்றும் கோழியினக் கண்காட்சி நடத்தும் திட்டத்தைச் செயற்படுத்துதலும், மறு ஆய்வு செய்தலும்.

**முதல் அட்டை :**

**மேதகு இந்தியக் குடியரசுத் தலைவராகப் பதவியேற்கவுள்ள திரு. கே.ஆர். நாராயணன் அவர்களை, புதுதில்லியில் 24.7.1997 அன்று அவரது இல்லத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சந்தித்து, பொன்னாடை மற்றும் சந்தன மாலை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தார்கள்.**

**2ஆம் அட்டை :**

**கால்நடைகள் (கட்டுரை உள்ளே)**

**4ஆம் அட்டை :**

**இந்திய சுதந்திரத் திருநாள் பொன்விழாவினையொட்டி தேசிய கவி பாரதியார்.**

5. இறைச்சிக் கொட்டில் பராமரிப்புப் பணிகளை மேற்பார்வை செய்தலும், மறு ஆய்வு செய்தலும்.

6. செம்மறியாடு வளர்ப்பதற்காகச் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நிதியுதவி வழங்கப்படும் திட்டத்தை மேற்பார்வை செய்தலும், மறு ஆய்வு செய்தலும்.

7. பன்றி வளர்ப்புத் திட்டத்தை மேற்பார்வை செய்தலும், மறு ஆய்வு செய்தலும்.

8. விலங்குகள், பறவைகள் வமங்கும் திட்டத்தை மேற்பார்வை செய்தலும், மறு ஆய்வு செய்தலும்.

9. ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை கால்நடை குறித்த கணக்கெடுப்புகள் மேற்கொள்ளப்படும் திட்டத்தை மேற்பார்வை செய்தலும், மறு ஆய்வு செய்தலும்.

10. முயல் வளர்ப்பு கோழி வளர்ப்புக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தை மேற்பார்வை செய்தலும், மறு ஆய்வு செய்தலும்.

11. மேய்ச்சல் நில மேம்பாட்டுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தைப் பார்வையிடுதல்.

12. பால்பண்ணைக் கூட்டுறவுச் சங்கங்களை மறு ஆய்வு செய்தல்.

13. ஒருங்கிணைந்த பால்பண்ணை மேம்பாட்டுத் திட்டத்தை மறு ஆய்வு செய்தல்.

14. தரமான கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தை மறு ஆய்வு செய்தல்.

15. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படும் திட்டப் பணிகளை மறு ஆய்வு செய்தல்.

16. மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படும் திட்டப்பணிகளை மறு ஆய்வு செய்தல்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : ரா. சிவகுமார், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.

சென்னை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை - 600 002. தொலைபேசி : 568926, 568927

ஆசிரியர் மடல்

# நெஞ்சில் உரமுமின்றி...

கனியைச் சுவைத்திடும்போது, அதன் விதை கடிபடுமானால் அந்தக் கசப்பு நமக்குள் சற்றே நெருடலைத் தான் உண்டாக்கும்; அதைப் போல, அங்கொன்று இங்கொன்றாக நடைபெறும் சாதிமதக் கலவரங்கள் - சுதந்திர தினப் பொன்விழாவை மகிழ்ந்து கொண்டாடவிருக்கும் நமக்குள் ஒருவித மனப் புழுக்கத்தை உண்டாக்கத்தான் செய்கின்றன.

சுதந்திரக் கனல் மூண்டெழுந்த அக்காலத்தில், அறப்போராட்டத்தை அறிவித்த காந்தியடிகளும், மற்ற தலைவர்களும், போராட்டத்திற்கு முதல் நாளே பிடித்துச் சிறை வைக்கப்பட்டார்கள். அதன் காரணமாக நாடெங்கும் வன்முறை மூண்டது; இதனையறிந்த காந்தியடிகள் ‘போராட்டத் திட்டத்தை வகுத்தேனே தவிர, போராடத்தக்க மனப்பக்குவத்தை மக்களிடம் உண்டாக்கத் தவறி விட்டேனே!’ என்று மிகவும் வருத்தத்தோடு அறிக்கை வெளியிட்டார்; உண்ணாவிரதமும் இருந்தார்.


சாதாரணமாக இருந்த காந்தியடிகள் - மகாத்மாவாக, இவ்வாறான சம்பவங்களும் காரணம்!

அமைதிப் பூங்காவாக இருக்கின்ற தமிழ்நாட்டில் - ‘யாராவது தீ மூட்டட்டும்; நாம் குளிர் காயலாம்...’ ‘ஊரார் தோளில் ஏறித் திருவிழாக் காணலாம்...’ ‘அடுத்தவர் தொடையில் கயிறு திரிக்கலாம்...’ ‘எவருக்காவது கொம்பு சீவி, குத்தவிட்டு வேடிக்கைப் பார்க்கலாம்...’ என்பது போலெல்லாம் சிலர் செயல்படுவதை அறிகின்றபோது ‘நெஞ்சில் உரமுமின்றி...’ என்கிற பாரதி பாடல்தானே நமக்கெல்லாம் நினைவுக்கு வருகிறது?



தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23

